සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 77 | ஜூலை 27 ~ ஒகஸ்ட் 09, 1995 | விலை 7.00

**நம்புங்கள்!**

நல்ல ஜனாதிபதி
நம்மை வருத்துவது
கொல்லவல்ல கொல்லவல்ல
பொல்லாப் பிணியறுக்க



படம்: ராவய

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது அரச படையினரால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்கள்

# “நாங்கள் மக்களைக் கொல்லவில்லை!”

\- பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை



“சந்திரிகாவுக்கு மக்கள் வாக்களித்தது யுத்தம்புரிய அல்ல!”

\- நிர்மால்



“தாங்கள் கொல்லப்படுவதற்கான காரணத்தை அறியும் உரிமை கூட அவர்களுக்கு இல்லையா?”

\- சுனிலா

## கடற்படைக் கப்ரனின் மனைவி வீட்டுக் காவலில்

மூன்றாவது ஈழப் போரின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சாகர வர்தன கப்பலின் கப்ரன் போயகொட கடற்படை தகவல்கள் பலவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது. அத்தகவலின்படியே கடந்த 16ஆம் திகதி காங்கேசன்துறைத் முகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான ''எடிதர'' (நிலையான) கப்பலைக் குண்டு வைத்துத் தகர்க்க முடிந்ததாம். தேசிய புலனாய்வுப் பிரிவின் (NIB) பேச்சாளரொருவர் கூறியபடி கப்ரன் போயகொடவுக்கும், அவரது குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் வெளிநாடொன்றில் புகலிடம் அளிக்கத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முற்பட்டுள்ளது. இத்தகவல் பாதுகாப்புப் படையினருக்குக் கிடைத்தவுடன் படையினர் திருமதி. போயகொடவை வீட்டுக் காவலில் வைக்கத்தீர்மானித்துள்ளதுடன், அதுவரைஅவரிற்கு வழங்கப்பட்டு வந்த திரு. போயகொடவிற்குரிய வேதனத்தை வழங்குவதையும் இடை நிறுத்தியுள்ளனர்.

- ஹிறு - 1995.07.23.

## இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்க நெல்சன் மண்டேலா அரசு தடை!

தமிழ் மக்களைப் படுகொலை செய்யப் பாவிப்பதனால் இலங்கைக்கு ஆயுத உபகரணங்களை விற்பனை செய்ய வேண்டா மெனத் தென் ஆபிரிக்காவின் நெல்சன் மண்டேலா அரசிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த கோரிக்கையின் படி இலங்கைக்கு மேலும் தென் ஆபிரிக்காவில் இருந்து ஆயுத உபகரணங்களைப் பெற முடியாத நிலமையொன்று தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

நோபல் பரிசு பெற்ற டெஸ்மண்ட் ருட்டு (Desmond Tutu) கடந்த சில தினங்களிற்கு முன் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசிற்கு எதிரான கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்ததுடன், இலங்கைக்கு அனுப்பப்படவிருந்த ஆயுத உபகரணக் கப்பலொன்றைக் கடந்த சில தினங்களிற்கு முன் திரும்ப அனுப்பியிருந்தது. ஜூலை 07 வெள்ளிக்கிழமையன்று கூடிய நெல்சன் மண்டேலாவின் அமைச்சரவையினால் இலங்கை உட்பட இன்னும் சில நாடுகளிற்கு ஆயுதங்களை வழங்குவதை இடை நிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

- றஷ்மிய - 1995.07.09.

## இராணுவ இரகசியங்கள் வெளிவருவது கொழும்பிலிருந்தே!

இலங்கை அரசாங்கத்தின் இராணுவ/ யுத்த திட்டங்கள், தயாரிப்புக்கள் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகத் தகவல்களைத் தமக்கு வழங்குவது கொழும்பு இராணுவத் தலைமையகங்களில் உயர் பதவி வகிக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்தாகும் எனக் கடந்த வாரம் ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்துள்ளது. இன்னும் இலங்கை இராணுவ அதிகாரிகளைப் பணத்தினால் விழுங்கக்கூடியதாக இருப்பதால் தமது இயக்கத்திற்கு எதிர்பாராத நிலைமையொன்றிற்கு முகங்கொடுக்க எதுவித காரணமும் இல்லையென அதில் தெரிவித்ததாக வட பகுதித் தகவல் வட்டாரங்கள் கூறுகிறது.

- ஹிறு -1995.07.23

## இராணுவத்துள் அரசியல் செல்வாக்கு

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பிரிகேடியர் ஷாந்த கோட்டகொட உடனடியாக மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு இடமாற்றப்பட்டது தொடர்பாக இராணுவ வட்டாரங்களில் இதுவரை பாரிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

அப் பதவிக்குப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிற்கு மிகக் கிட்டிய நண்பரும், உறவினருமான ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந் நடவடிக்கை அரச இராணுவப் பிரிவுகளினுள், அரசியல் கட்சி சார்புத் தன்மையை ஏற்படுத்தும் நடவடிக்கை என இராணுவம் கருதுகிறது.

மண்டைதீவுத் தாக்குதல் நடக்க முன் அத்தாக்குதல் பற்றி அபாய அறிவிப்புச் செய்த பிரிகேடியர் கோட்டே கொடவை அப்பதவியிலிருந்து அகற்றுவது திறமையற்ற தன் மீது நடைபெற்றதொன்றாக அடையாளப்படுத்த முடியாதது என்பதும் இராணுவ விமர்சகர்களது கருத்தாகும்.

- யுக்திய - 1995.07.16.

## பாடசாலையில் இராணுவமுகாம்

வட மத்திய மாகாணத்தின் கிராமங்கள் மீதும், பொலீஸ் காவல் அரண்கள் மீதும் அடிக்கடி தாக்குதல் நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திட்டமொன்று தொடர்பாகப் பாதுகாப்புப் பிரிவுகளிற்குக் கிடைத்துள்ள தகவல்களின் படி வட மத்திய மாகாணத்தில் பாதுகாப்பு இராணுவ நடவடிக்கை வலையமொன்றாக ஆக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அனுராதபுர மாவட்டத்திலுள்ள பாடசாலைக் கட்டிடங்களை இராணுவத்தின் கீழ் கொண்டு வந்து பாடசாலைகளில் இராணுவ முகாம்களையும், ஆரம்பச் சிகிச்சை மத்திய நிலையங்களையும் அமைக்கவுள்ளதாகத் தெரிய வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பலத்தை முறியடிப்பதற்காக இராணுவ நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்த அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் இராணுவத் தயாரிப்புகளிற்கு இராணுவ வல்லுனர்கள் உடன்படாததனால் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்கள் தாமதமாவதாகவும் அறியக் கிடைக்கிறது.

- ஹிறு - 1995.07.16.

## நிறைவேற்று அதிகாரத்தைப் பேண மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு!

யுத்தத்தை முடிக்கக் கூடிய காலப்பகுதியை உறுதியாகத் தீர்மானிக்க முடியாததனால் அதுவரை நிறைவேற்று அதிகாரத்தைப் பேண மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டுமென அரசாங்கத்திற்கு யோசனைகளை முன் வைக்க அதன் பின் வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தயாராகின்றனர். அவ்வாறு செய்தால் வாக்குறுதிகளை மீறிய குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது மேற்கூறிய அரசியல்வாதிகளின் கருத்தாகும். இது தொடர்பாக இரகசிய கலந்துரையாடலொன்று ஜூலை 03ம் திகதியன்று கொழும்பில் நடைபெற்றுள்ளதுடன், பொதுசன ஐக்கிய முன்னணியின் சிவப்புக் கட்சியொன்றின் பிரதி அமைச்சரொருவரும் அதிலிருப்பதாக ஹிறுவிற்குத் தெரிய வருகிறது.

- ஹிறு- 1995.07.16



## விமானப் படைக்கு அமெரிக்க உதவி!

இலங்கை அரசின் கோரிக்கைக் கிணங்க அமெரிக்க விமானப் படை அதிகாரிகள் இருவர் இலங்கை விமானப் படைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குக் கடந்த சில தினங்களிற்கு முன் நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்கள் வந்துள்ளது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து விமானப் படை விமானங்களுக்கு ஏவப்படக் கூடிய ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்பாக விமானப் படைக்கு ஆலோசனைகள் வழங்கவேயெனவும் தெரியவருகிறது. இது தொடர்பாக இலங்கை அரசு அமெரிக்காவிடம் இதற்கு முன்பு கோரிக்கை விடுத்திருந்ததுடன் ஜுன் மாத நடுப்பகுதியில் அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதர் ஜயந்த தனபால அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் வலயத் தளபதியை ஹவாயில் சந்தித்துப் பேசியுள்ளார்.

- ரஷ்மிய- 1995. 07. 09

## இன்னும் 5000 கோடிக்கு ஆயுத உபகரணங்கள் கொள்வனவு!

வட-கிழக்கு யுத்தத்திற்காகப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பத்து இலட்சத்து ஆயிரம் ரூபா அமெரிக்க டொலர் (5,000 கோடி ரூபா ) பெறுமதி வாய்ந்த ஆயுதக் கொள்வனவு ஒன்றிற்கு ஒப்பந்தம் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. இவற்றில் இதுவரை கிடைத்துள்ளவை அவற்றில் 5% அளவு மட்டுமே எனவும் முழு ஆயுதத் தொகையையும் கொண்டு வந்து முடிக்க இன்னும் இரு மாதங்களாவது செல்லும் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை, ஐக்கிய அமெரிக்கா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விரோதமான நிலைப்பாடொன்றில் இருந்து செயற்பட்டாலும் இலங்கை மீது நடைமுறைப்படுத்திவரும் ஆயுதத் தடையை இன்னும் கைவிடவில்லை எனவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க, விமானப் படையினர் ஏவுகணை எதிர்ப்புத் தாக்குதலுடன் கூடிய MI (17) இன ஹெலிகொப்ரர்கள் ஆறை விலைக்கு வாங்க முடிவுவெடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது. இந்த வழங்கலைத் தாம் பெற்றுக் கொள்ள Furnt என்ற முகவர் நிறுவனம் பாரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அதற்குச் சில செல்வாக்கானவர்களினதும் அனுசரணையைப் பெற்றுக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது. Furnt முகவர் பெற்றுக் கொள்ளப் போகும் கொள்வனவு ஒப்பந்தத்தின்படி கசான்(Kazan) ஹெலிகொப்ரரொன்றின் விலை பத்து இலட்சத்து 9 ஆயிரம் டொலர் என்றும் தெரியவருகிறது.

- றாவயவில் - 1995. 07.23

## புலிகளிடம் யுத்தத் தாங்கிகளை அழிக்கும் புதிய பிரிவு!

கெரில்லாக்களுக்கு எதிரான யுத்தமொன்றில் யுத்த களத்திற்கு அத்தியாவசியமான ஆதார தாக்குதல் யுத்தத் தாங்கி (MBT) யும், ஆயுதப் படைகள் போக்குவரத்து வாகனங்களையும்(APC) வெடிக்க வைப்பதற்காக யுத்தத் தாங்கிகள் அழிப்புப் பிரிவொன்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கட்டியெழுப்பியுள்ளதுடன், யுத்தத் தாங்கிகளை அழிப்பதற்காக அதி சக்தி வாய்ந்த நிலக் கண்ணிவெடி வகைகளைப் பாவித்துள்ளதாக ''முன்னேறித் பாய்ச்சல்'' தாக்குதலை அவதானிக்கும் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

- ராவய - 1995.07.23

## படையினர் நூறு பேர் சமன் புலிகள் எட்டுப் பேர்

கடந்த சில தினங்களுக்கு முன்பு மண்டைதீவு முகாம் மீது நடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தாக்குதலில் இலங்கை இராணுவத்தின் நூற்றுக்குமேற்பட்டோர் கொல்லப்படுகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் சிறு தொகையினரான எட்டுப் பேரே கொல்லப்பட்டனர் எனத் தெரிய வருகின்றது.

ஆனாலும் கடந்த சில தினங்களிற்கு முன் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்ஹ பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் 50 இற்கும் அதிகமான எண்ணிக்கையினர் பதில்த் தாக்குதல்களின் போது கொல்லப்பட்டதாகக் கூறியிருந்தார்.

- றஷ்மிய - 1995.07.09

## றஹுமான் - யுத்தத் தாங்கி வியாபாரத்தில்

இலங்கை இராணுவத்திற்கு ஆயுத வழங்குனராக நீண்ட காலமாகவே செயற்பட்டுள்ள றஹுமான் என்ற இராணுவ ஆயுத வியாபாரியினால் எதிர்வரும் சில தினங்களினுள் 18 யுத்தத் தாங்கிகள் வரவழைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவை உக்றேனில் தயாரிக்கப்பட்டவை.

- ஹிறு - 1995.07.23

## ராஜீவ் படுகொலைக்கு வேறு குழுக்களும் கூட்டு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் புறம்பாக இந்தியாவின் ஆயுத இயக்கமான பஞ்சாப், காலிஸ்தான் கொமாண்டோ இராணுவமும், காஷ்மீரின் ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியும் கூட்டுச் சேர்ந்துள்ளதாக அகாலிக் கட்சித் தலைவ ரொருவரான மஹன்த் சேவதாஸ், ஜீத் ஆணைக்குழு முன் தெரிவித்திருப்பதால் ராஜீவ் காந்தி படுகொலை விசாரணைகள் புதிய திருப்பமொன்றை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

- ராவய - 1995.07.23.

தொகுப்பு : சி. விவேக்

# மனிதம் உருவழிகையில் மௌனத் திரையிறக்கி நிஷ்டை கூடுவது எனக்கு அப்பாற்பட்டது....

- சுனிலா அபேசேகரா



**சுனிலா அபேசேகரா:**
**இலங்கைப் பெண் உரிமை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்; மிக நீண்டகாலமாக மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் என்பவற்றுக்காக போராடி வருபவர்; பெண்ணிலைவாதி; பாடகர்;**

கொழும்பு நகரின் தெருவோரச் சுவர்களிலெல்லாம் நீலநிறப் பின்னணியில் ஒரு வெண்தாமரை பூக்கிறது; பூவோடு இருக்கிற சுலோகம் சொல்கிறது: எதிர்காலம் எனக்கல்ல; உனக்குமல்ல; எங்களுடைய குழந்தைகளுக்கு

எனக்கு முன்னாலோ ஒரு வயோதிபர் அமர்ந்திருக்கிறார். வெள்ளை சாரம்; நீல நிறச் சட்டை; கண்ணீர் குமிழியிடும் விழிகள். இரண்டு வாரங்களுக்கு முன்பு கொழும்பில் ''காணாமல் போய்விட்ட'' தன்னுடைய மகனைப் பற்றிய விவரங்களைச் சற்று முன்புதான் அவர் என்னிடம் தந்திருந்தார். முரண்நகையுடன் கூடிய சிந்தனையொன்று என் மனதைத் தொட்டுச் செல்கிறது. யாருடைய குழந்தைகளைப் பற்றிப் பேசுகிறோம் இப்போது?

பதினைந்து வருடங்களுக்கு மேலாக வன்முறைச் சூழலுக்குள்ளும் பயங்கரத்துள்ளும் சிக்குண்டிருந்தது எமது தேசம். ஆயிரக்கணக்கான மக்கள் வடக்கில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கிழக்குக்கும் நாட்டின் மற்றைய பகுதிகளுக்கும் யுத்தமும் பயங்கரமும் பரவின. எண்பதுகளின் பிற்பகுதியில் வடக்கு யுத்தத்தின் கோரமுகங்கள் தென்னிலங்கை மக்களுக்குத் தெரிய வந்தது.

இந்தப் பயங்கரமான கால கட்டத்திலும் நீதியையும் சமாதானத்தையும் வேண்டி, நிலைதவறாது உழைத்த ஒரு சிறு குழுவினராக நாங்கள் இருந்தோம். இலங்கை மக்கள் அனைவரினதும் ஜனநாயக உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதே எம் அனைவரையும் ஒன்றிணைத்து செயற்பட வைத்த அம்சமாகும். குற்றவியல் நீதிக்கான ஆணைக்குழு மேலிருந்து திணிக்கப்பட்ட போது நாம் அதனை எதிர்த்தோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அவசரகால நிலையையும் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறோம். 1987க்குப் பிற்பாடு மனித உரிமை மீறல்கள் பயங்கரமாக நாடளாவிய ரீதியில் அதிகரித்த போது சர்வதேச அரங்கில் இந்த மீறல்கள் குறித்த கவனத்தை ஏற்படுத்தப் பிரச்சார இயக்கங்களை நடத்தினோம்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக சுதந்திரம், படுகொலைகள் போன்ற விஷயங்கள் நாட்டு மக்களில் நூற்றுக் கணக்கானோரைத் தம்முடைய உரிமைகளுக்காகப் போராட அணிதிரட்டின. மரணத்தையும் பயங்கரத்தையும் நேருக்கு நேர் சந்திக்க வேண்டியிருந்தது. எம்மில் சிலர் தப்ப முடியவில்லை. சிலர் தப்பியிருக்கிறோம். அடிப்படை உரிமைகள், நீதி - இவை தொடர்பாகக் கொள்கை தவறாமலும் பக்கஞ்சாராது, சுதந்திரமாக அரசியல், தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் குரல் கொடுக்கவும் எம்மால் முடிந்திருக்கிறது என்று பெருமைப்பட்டோம்.

கடந்த வருடம் எல்லாம் மாறிற்று. பதினேழு வருடப் பயங்கர ஆட்சிக்குப் பிறகு, ஒரு வழியாக நல்ல சமுதாயம் உருவாகும் என்பதற்கான ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது என்றிருந்தோம். பொ.ஐ.முன்னணி பற்றிய எங்களுடைய எதிர்பார்ப்புகள் மிகவும் அதிகமாக இருந்தன. கடந்த காலப் பயங்கரங்களும் அனுபவங்களும் யதார்த்தத்தை மீறிய ஒரு எதுர்பார்ப்பை பொ.ஐ.முன்னணி மேல் எங்களை முதலிட வைத்து விட்டது என்று இப்போது தோன்றுகிறது. எங்களில் பலர் அரசின் பல்வேறு பிரிவுகளில் பூரணமாக இணைந்து விட்டனர். எம்மில் சிலர் முற்றாகவும் நேரடியாகவும் அரசுடன் ஐக்கியமாகி விட்டனர். பொ.ஐ.மு அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் இந்த நாட்டின் இனப் பிரச்சினையைக் கௌரவமாகத் தீர்த்து வைக்கும் என்ற முற்றான நம்பிக்கையுடன் பொ.ஐ.முன்னணியின் சமாதானத் திட்டத்தை நாம் ஆதரித்தோம்.

இந்த நம்பிக்கைகள் சிதறுண்டு போனதாலேயே நான் இதனை எழுத நேர்கிறது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சிங்கள பௌத்த பேரினவாதியாக நான் இருந்ததில்லை. ஜனநாயகம், நீதி, பன்முகப் பாங்கான அரசியல் சமூகக் கட்டமைப்பு என்பவற்றையே நான் நம்பியும் வலியுறுத்தியும் வந்திருக்கிறேன். என்னைச் சூழ இப்போது திரும்பிப் பார்க்கிற போது பல கடந்த காலத் தோழர்களையும் நண்பர்களையும் தொலைத்து விட்டேன்என்று தெரிகிறது. எவ்வகையிலும் எதிர்ப்புக் குரல் கொடுக்க முடியாமல் முடங்கிப் போய்க் கிடக்கிறார்கள் அவர்கள்.

இது ஏன் என்று நான் கேட்க விரும்புகிறேன். அடிப்படை உரிமைகள் நீதி தொடர்பாக ஒரு சுதந்திரமான நிலைப்பாட்டை வைத்திருப்பது என்பது அவ்வளவு கடினமான காரியமா? தமிழ் இளைஞர்கள் இப்போது காணாமல் போகிறபோது ஏன் போதுமான அளவு கவனம் செலுத்தப்படுவதில்லை? (சென்ற மாதம் மட்டுமே பதினைந்து பேர் ''காணாமல் போய்'விட்டார்கள்.) எங்களுடைய மௌனத்தில் புதைந்திருக்கும் அபாயத்தை ஏன் நாங்கள் இன்னும் உணரவில்லை.

கடந்த காலங்களில் துணிவும் ஆற்றலும் வாய்க்கப் பெற்ற சுதந்திரமான உரிமைப் போராட்டக்காரராக இருந்த எம்மில் பலருக்கு எப்படி இன்று அரச யந்திரத்துடனும் அரச நிறுனவங்களிலும் இணைந்ததிலும் இயைந்ததிலும் விமர்சன ஆளுமையை இழக்கப் போயிற்று?

தப்பித்தவறி ஏதாவது விமர்சனம் செய்தாலும் அது குறியற்றதாகவும் நழுவுவதாகவும் தனிநபர்கள் மீது குற்றம் சாட்டி விட்டுத் தப்பித்துக் கொள்வதாகவுமே இருக்கிறது. இன்றைய நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கெதிராக அணிதிரண்டிருக்கும் சக்திகள் பயங்கரப் பலம் வாய்ந்தவை என்பது உண்மைதான். ஐ.தே.கட்சி, சிங்களப் பேரினவாதிகள், இராணுவவாதிகள் சுதந்திரமாக இயக்குவதாகக் கூறிக் கொள்கிற பல பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி இவை அனைத்துமே அரசாங்கத்துக்கு எதிராக உள்ளன. இதனால் மோசமான சக்திகளின் பிரச்சாரங்களிலிருந்து விலகிய வேறொரு தளத்தில் எங்களுடைய விமர்சனங்களை வைக்க நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.

எப்படியிருப்பினும் இந்தக் கணத்தில் அரசாங்கத்தை விமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டியது ஒரு மிக முக்கியமான விஷயம் என்று நான் கருதுகிறேன். ஏனெனில் மக்களுக்கு நியாயமும் நீடித்த சமாதானமும் கிடைப்பதற்கு இது அவசியம், இந்தப் பின்னணியிலேயே எமது மௌனத்தை நான் கேள்விக்குள்ளாக்குகிறேன். யுத்த முனைப்பை வெளிப்படையாகவே தீவிரப்படுத்தும் பல அரசாங்க அமைப்புக்களிலும் ஏஜென்சிகளிலும் இருந்து தம்மை விலக்கிக் கொள்ளத் தயங்குவதைக் கேள்விக்குள்ளாக்குகிறேன். அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதைப் பற்றி எவ்வித அக்கறையோ கவனமோ அரசாங்கத்தில் பல மட்டங்களிலும் கிடையாது.

யுத்தத்தை எதிர்க்கிற நிலைப்பாட்டை நாம் எடுக்க வேண்டும். சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக யுத்தம் என்பது ஒரு மோசடி. ''அரசியல் தீர்வுத் திட்டம்'' கண்ணுக்கும் கையுக்கும் எட்டாத ஒரு விஷயமாகவே இருக்கிறது. யுத்தம் தொடர்கிறது. நாட்டின் எல்லாத் தரப்பு மக்களிடமும் பாதுகாப்பு உணர்வின்மை அதிகரிக்கிறது.

மரணத்தையும் அழிவையுமே யுத்தம் எங்களுக்குத் தரப்போகிறது. யுத்தத்தினால் நம் சமூகங்களுக்கிடையே ஏற்படப்போகிற இடைவெளி இல்லாமல் போவதற்கு நூற்றாண்டுகள் செல்லும். யுத்தத்தில் கிடைக்கும் வெற்றி எவ்வளவு கசப்பானது என்பதைப் பற்றி தம்மபதம் ஓரிடத்தில் பேசுகிறது என்பதை நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களிடம் இருந்து பிரிப்பது என்பதான கோஷங்கள் அனைத்தும் நடைமுறையில் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதில்தான் முடிகிறது என்பது தானே யதார்த்தம்?

உண்மையில் வடக்கில் இப்போது நடப்பதென்ன? அங்குள்ள மக்களின் மனோநிலை, உணர்வுகளைப் பற்றி எங்களுக்கு என்ன தெரியும்? இங்குள்ள அவர்களின் குடும்பத்தினர் என்ன மனோநிலையில் இருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரிகிறதா? வடக்கில் உள்ள மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான் என்றால் அரசாங்கம் ஏன் தங்களை இப்படிக் கொல்கிறது என்று தெரிந்து கொள்ளும் சிறுஉரிமையாவது அவர்களுக்கு இருக்க வேண்டாமா?

கடந்த சில வாரங்களாக என்னுடைய இந்த மன உணர்வுகள் பற்றி நண்பர்கள் சிலருடன் பேசிக்கொண்டிருந்த போது ஒரு 'தூய்மை வாத' நிலைபபாட்டை நான் எடுப்பதாக அவர்கள் சொன்னார்கள். அரசாங்கத்தை அளவுக்கதிகமாக விமர்சிப்பதாகவும் சிலவேளைகளில் என்னுடைய விமர்சனம் அழிவுத் தன்மை பொருந்தியது என்று கூட அவர்கள் குற்றஞ் சாட்டினார்கள். என்னுடைய ஏழு வயதுப் பெண் குழந்தை என்னுடைய வளர்ப்புத் தமிழ் மகனைப் பார்த்து '' நீ தமிழன் அல்லவா? எனவே என்னைக் கொன்று விடுவாய்!'' என்று சொல்லியதைக் கேட்க நேர்ந்த போது என்னுடைய குருதி உறைந்து போனதை நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

மனித உரிமைகளும் ஜனநாயக அரசியல் முறைகளும் தூக்கி எறியப்பட்டு மனிதம் அழியும் யுத்தமே தவிர்க்க இயலாத விதியாக மாறிவிட்ட ஒரு கடந்த காலத்திற்கு மறுபடியும் தள்ளப்பட்டு விடுவோமோ என்று நான் அஞ்சுகிறேன் என்பதை நான் அவர்களுக்குச் சொல்கிறேன். குறைந்த பட்சம் எங்களில் ஒருசிலராவது யுத்தத்திற்கு எதிராக குரல் கொடுக்க முடியாவிட்டால் நாங்கள் என்றென்றும் வெட்கத்துள் வாழ வேண்டியே ஏற்படும்.

வரலாற்றை மறந்து விடுபவர்கள் அதே வரலாற்றையே திருப்பி வாழ நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்பதை நான் மீண்டும் ஒருமுறை சொல்லித்தான் ஆகவேண்டுமா?

“வெண்தாமரை இயக்கம் எனும் பெயரில் நாட்டின் பாதுகாப்பிற்கு கை கொடுக்கும் ஒரு புதிய சக்தி, ஸ்ரீ பௌத்த ஆண்டு 2539, பொசன் மாதம் 12ம் திகதி சனிக்கிழமை அதாவது 1995 ஜுன் 24ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படுகிறது''

இரு மாற்றுப் பத்திரிகைகளும் கூட இதுபற்றி முழுப் பக்க விளம்பரம் செய்திருந்தன.

''பயங்கரவாதத்துக்கும் இனவாதத்துக்கும் எதிராக பொ. ஐ. முன்னணி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து அமைத்த நிறுவனமான வெண்தாமரை இயக்கம்

வெண்தாமரை கூறும் சமாதான விரோதிகளால் பாதிக்கப்படும் மக்களை விட அரச படைகளின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளினால் பாதிக்கப்படும் மக்களின் தொகையே பாரிய அளவிலானது என்பதை இன்னமும் இவர்கள் ஒத்துக் கொள்ளத் தயாரில்லை என்பதையே புலப்படுத்துகிறது.

# ‘சு(த்து மாத்)து நெலும்’ வியாபாரம்

அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏரிக்கரை நிறுவனத்தின் ‘தினமின’ பத்திரிகையின் தலைப்புச்செய்தி இது.

வெண்தாமரை இயக்கம் பற்றி அரச சார்பு பொதுத் தொடர்பு சாதனங்கள் முழுவதும் அவ்வியக்கம் ‘நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப போகின்ற ஒரு இயக்கமாகவே காட்ட முயற்சிக்கின்றன. ''யுத்தத்தை மையமாக வைத்து இராணுவத் தேவைகளுக்காக இந்த இயக்கத்தை ஆரம்பிக்காமல், அரசியல் தீர்வு நோக்கோடு இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது வரவேற்புக்குரியது. இனவெறியர்களின் ஈனத்தனமான பிரச்சாரங்களும் காடைத்தனமான நடவடிக்கைகளுமே இந்த மண் சீழ் வடிந்து நாறக் கரணமாகின. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா இன்று ஆரம்பித்து வைக்கும் ‘வெண்தாமரை’ இயக்கம் சமாதானப் பண்பாடட்டும். யுத்தப்புண் மறையட்டும்''

இது யூலை 7ம் திகதி வெளியான தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம்.

''முதலாவது இது ஒரு அரசியல் இயக்கம். புலிகளின் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் உயிர்தியாகம் புரியும் முப்படைகள் மற்றும் பொலிஸ் படைவீரர்கள் உறுதியை பலம் கொள்ளச் செய்வதற்காக மக்களின் ஒத்துழைப்பை சகல வழிகளிலும் பெறச் செய்வது இதன் இன்னொரு நோக்கம்'' என்று எழுதுகிறது ‘தினமின’ தனது யூலை 7ம் திகதிய இதழின் ஆசிரிய தலையங்கத்தில்.

வெண்தாமரை இயக்கம் வெளியிட்டுள்ள ‘சாம சங்ராமய’ (சமாதான யுத்தம்) எனும் பெயரிலான நூலும் கூட அதைத்தான் சொல்லுகின்றது.

''பாதுகாப்புப் படையினரின் கௌரவத்தை மீண்டும் பெறச் செய்வதற்கு பொதுஜன முன்னணி நடவடிக்கை எடுத்து வருகிறது. இது சமாதானத்துக்கு எதிராக இருக்கும் புலிகளின் யுத்தவாதத்துக்கு எதிரான யுத்தம். இதில் எமக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதற்கு காரணம் சரியான தலைமைத்துவம் இப்போது இருக்கிறது. புலிகளின் யுத்த யந்திரத்தை முறியடிக்க சகலரும் கைகோர்ப்பதற்கான சந்தர்ப்பமிது சமாதான யுத்தத்தை வெற்றிபெறச் செய்வோம் ''

ஆக, சமாதானத்திற்காக நடக்கும் யுத்தத்திற்கு ஆதரவாக அதாவது சமாதானத்துக்காக இயங்கும் ஒரு இயக்கமாகவே இந்த வெண்தாமரை இயக்கம் வெளிக்காட்டப்பட்டு வருகிறது..

வீரகேசரி தினகரன் ஆகிய பத்திரிகைகளில் யூலை 8ம் திகதி வெளிவந்த விளம்பரங்கள்கூட ''இனிவரும் காலம் உனதும் எனதும் அல்ல; எம் பிள்ளைகளினதே. சாவுக்கு எதிராக வாழ்வு; அழிவுக்கு எதிராக எதிர்பார்ப்பு'' என்கின்றன.

யூலை 9ம். திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியான ‘யுக்திய’, ‘ராவய’ ஆகிய

எதிர்வரும் 9ம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும்''

இது யுக்திய பத்திரிகையில் வந்த விளம்பரம். இதேவேளை அரச பத்திரிகையான தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் வெண்தாமரை இயக்கத்தின் இணைப்பாளர் மங்கள சமரவீர இப்படிகூறுகிறார்.

''.. பிரிவினைவாத வன்முறைகளை தோற்கடிக்கும் காரியத்திற்கு உழைக்கின்ற வீரமிக்க படைவீரர்களுக்கும் சமாதான விரோதிகளின் குரூரச் செயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காகவும் செழிப்பான

இதே கருத்து மங்கள சமரவீர, வெண்தாமரை இயக்கம் பற்றி பிரச்சாரம் செய்யுமாறு கோரி பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்த அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் பிரிவினைவாத பயங்கரவாதத்துக்கும் சமாதான விரோத நடவடிக்கைகளுக்கும் எதிராக மக்களை விழிப்பூட்டுவது தேசிய தேவை' என குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர தொடர்ந்து கூறுகிறார்: ''இப்போது போர்புரியும் படைவீரர்களை தைரியமளிக்கச் செய்யவும் அவர்களுக்குத் தேவையான




சமாதான யுகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் முன்னணி மேற்கொள்ளும் பெரிய சக்தி இது....''

இந்த பகட்டான அறிவிப்புக்களும் விளம்பரங்களும் சமாதானத்தின் பேரால் நடாத்தப்படும் வடக்குக்

சகல வசதிகளையும் பெற்று கொடுக்கவும் அவர்களது குடும்பங்களுக்கு நிவாரண நடவடிக்கைகளைப் பெற்றுக் கொடுக்கவும், எல்லைக்கிராமங்களில் வாழும் மக்களை பாதுகாப்பது மட்டுமல்லாமல் சமாதான விரோதிகளால் மோசமாக்கப்பட்டுள் ஐக்கியத்தை

> “எந்தப் பேயானாலும்
> துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு
> நம்மைக் கொல்ல வருகின்றது என்றால்
> அதற்கு முன்னமே அப்பேயைக்
> கொன்று விட வேண்டும்.”
>
> \- ஜனாதிபதி

கிழக்கு மக்கள் மீதான யுத்தத்திற்கு மக்களின் அங்கீகாரத்தை வென்றெடுக்க செய்யப்பட்ட நடவடிக்கைகள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. குறிப்பாக சமாதான விரோதிகளின் குரூரச் செயலினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணம்' என்று மங்கள கூறும் போது அவற்றிற்குள் அரச படை களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதில்லை என்பது சொல்லாமல் சொல்லப்படுகிறது. இன்று

மீளக் கட்டியமைப்பதும்'' இதன் பணிகள் எனக் கூறியுள்ளார்.

வெண்தாமரை இயக்கத்தின் கிளைகள் இது வரைக்கும் தெகிவளை, குளியாப்பிட்டி, கொலன்னாவை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. தொகுதிவாரியாக இது அமைக்கப்படும் என சரிநிகர் வெண்தாமரை இயக்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது குறிப்பிட்டார்கள். எல்லைப்புறக் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் நலன்களைப்பற்றி அதிகளவு

பேசியிருக்கிறபோதும் ஏன் கிளையமைப்பதில் கொழும்புக்கே முக்கியத்துவமளிக்கிறீர்கள் என கேட்டபோது ''நாங்கள் எல்லைப்புற கிராமங்கள் என்ற பதத்தை பாவிப்பதில்லை, பீதிக்குள்ளாகிற கிராமங்கள் ' என்ற பதத்தையே பாவிக்கிறோம் அங்கு கிளைகளை அமைப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொடே வருகிறோம் என கூறினார். (வெண்தாமரை இயக்கதுடன் சரிநிகர் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது தமிழிலேயே உங்களுக்கு தகவல் பெறுவதற்கு தமிழ் தெரிந்த ஒருவரிடம் கொடுக்கிறோம் என கூறி தமிழ் தெரிந்த பிரமுகரை அழைத்த போது, அவர் ‘அந்த ஆளை எனக்குத் தெரியும் நான் போய்விட்டதாகக் கூறவும்’ என கூறியது தொலைபேசியில் கேட்டது. அவர் வேறுயாருமல்ல. முன்னாள் வடகிழக்கு மாகாண சபையின் ஈ. பி, ஆர். எல். எவ்இன் சபையில் அமைச்சராக இருந்தவரும் சமாதான இயக்கத்தைச் சேர்ந்தவருமான ஜோசெனவிரத்ன தான் என்பதை குரலில் அடையாளம் காண முடிந்தது. ஏற்கனவே அவர் வெண்தாமரை இயக்கத்துடன் இருக்கிறார் என்பதை கேள்விப்பட்டவுடன் அவருடன் தொடர்பு கொண்டு பேட்டியொன்றை தருமாறு கேட்ட போதும் அவர் தான் வெறும் ஆதரவாளர் மட்டுமே என்றும் தன்னால் அது தொடர்பாக பேட்டி வழங்க முடியாது எனவும் கூறியிருந்தார். வெண்தாமரை இயக்கத்தால் வெளியிடப்பட்ட ‘சமாதான யுத்தம்’ எனும் பெயரிலான நூலும் ஜோ சௌனவிரத்னவாலேயே எழுதப்பட்டிருந்தது தெரியவருகிறது.

அவர் ஏன் சரிநிகருடன் பேசத் தயங்கினார் என்பது எமக்குப் புரியவில்லை)

வெண்தாமரை இயக்கத்தின் பிரச்சாரத்துக்கான விளம்பரத் தட்டிகள் (பனர்கள்), போஸ்டர்களுக்காக மட்டும் முப்பத்து நான்கு லட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது என லக்பிம பத்திரிகை தெரிவிக்கிறது.

வெண்தாமரை இயக்கத்தைச் சுகததாசா உள்ளரங்கில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி தமது உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

'... நாங்கள் எங்களுடைய யுத்த வீரர்களின் மரணச் சடங்குகளைக்கூட பெரியளவில் ஒழுங்கு செய்யலாம் அத்துடன் அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கலாம். தண்ணீர் போன்ற அடிப்படைத் தேவைகளும் இன்றி கஷ்டப்படும் எல்லைப் புறங்களில் உள்ள மக்களுக்கு உதவி செய்யலாம்... இதற்கும் மேலாக இந்த இயக்கத்தின் மூலம் இந்த நாட்டில் பிரிவினைவாத அரசியலை தோற்கடிக்க எம்மை அர்ப்பணிக்க வேண்டும் '' எந்த பேயானாலும் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு தம்மை கொல்ல வருகின்றது என்றால் அதற்கு முன்னமே அப்பேயை கொன்று விட வேண்டும். ஆனால் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என்பதை முதலில் கலந்துரையாட வேண்டும் ஜனநாயக அரசாங்கள் என்ற ரீதியில் நாங்கள் முதலாவது பேச்சுவார்த்தை வழிமுறையில் சென்றோம். மக்களிடம் சமாதானம் பற்றிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தினோம்.'' இக்கூட்டத்தைப்பற்றி கருத்து தெரிவிக்கும் ‘லக்பிம’ பத்திரிகையின் ஆசிரியர் பந்துல பத்மகுமார,

‘வெண்தாமரை இயக்க ஆரம்பவிழா பிரேமதாச யுகத்தை ஞாபகப்படுத்துகிறது. வித்தியாசம் என்னவென்றால் இக்கூட்டத்திற்கு ஜனாதிபதி சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்தது மட்டுமே என்கிறார்.

''.. நான் ஒருவரோடு வெண்தாமரை இயக்கம் பற்றி கதைத்துக் கொண்டிருந்த போது அவர் வெண்தாமரை என்பதை ‘யுத்த தாமரை,’ என கூறினார். அவர் சொல்வதில் உண்மை இருக்கிறது. நானும் அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். யட்டிநுவர பகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் கட்டப்பட்டிருந்த ஒரு பெனரில் ‘இன்று யுத்தம் நாளை சமாதானம் என சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இன்றைய யுத்தம் நாளை இன்னொரு யுத்தமாக மாற முடியாதா?...''

இப்படி பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளரான திரு. சுமனசிறி லியனகே யூலை 23 யுக்திய பத்திரிகையில் குறிப்பிடுகிறார்.

இவ் வெண்தாமரை இயக்கம் ‘ஒரு யுத்தப் பிரகடனம் எனச் சொல்லக் கூடியவகையில் அதன் உருவாக்கத்தைக் கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது.

இதற்கிடையில் சிங்கள மாற்றுப் பத்திரிகைகளில் ஒன்றான ஹிரு பத்திரிகை ஒரு முக்கியமான செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் வெள்ளைத்தாமரை இயக்கம் என்ற போர்வையில் புதிதாக ஒரு துணைப்படையொன்றை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும், இப்படைக்கு ஆயுதப் பயிற்சி பலமாக வழங்கப்படவிருப்பதாகவும் இந்த அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்கள் மட்டுமே சேர்ந்து கொள்ளப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை மெய்ப்பிப்பது போல் யூலை 16ம் திகதி ஹிரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சிறு கைத்தொழில் நில அபிவிருத்தி அமைச்சரும் பொ. ஜ. ஐ. மு. செயலாளருமான தி. மு. ஜயரத்ன

'' ஆனால் இப்படைக்கு எங்களுக்கு நெருக்கமாவனர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் அது உண்மை. அப்படியில்லாமல் யு. என். பியை சேர்ந்தவர்களை இதற்கென்று எடுக்க முடியாதே'' என்கிறார்.

இப்படைக்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் 10 பேர் என்ற ரீதியிலும் தேர்தல் தொகுதி வாரியாக 125 பேர் என்ற ரீதியிலும் மொத்தம் 60,000 பேர் சேர்க்கப்பட இருக்கிறார்கள்.

ஐ. தே. க ஆட்சிக் காலத்திலும் கூட இவ்வாறுதான் இன்று அமைக்கப்பட்டு பின்னர் அவ்வமைப்பைக் கொண்டு 87-89 காலப்பகுதியிங்ல் ஜே.வி.பி இளைஞர்கள் படு பயங்கரமாக ஒடுக்கப்பட்டனர். இப்போது வெண்தாமரை இயக்கம் தொடங்கியுள்ளது இதுமட்டும் வேறு விதத்தில் செயற்படும் என்று எப்படிச் சொல்வது.

மொத்தத்தில் வெண்தாமரை இயக்கம் சொல்வது இதுதான்.

நாங்கள் யுத்தம் செய்து சமாதானம் கொள்ளப்போகிறோம். யுத்தத்தில் சிக்கும் தமிழ் சிவிலியன்கள் மூன்றாம் பட்சத்துக்குரியவர்கள் யுத்தத்தில் சிக்கும் சிங்கள சிவிலியன்கள் இரண்டாம் பட்சத்துக்குரியவர்கள். யுத்தத்தில் ஈடுபடும் அரச படையினர் மட்டும் முதலாம் பட்சத்துக்குரியவர்கள். இதில் ஈடுபடுபவர்களுக்கு இனமத மொழி வேறுபாடில்லாமல் சகல சமூகத்தவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதே'' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தார் எமது அலுவலகத்துக்கு வந்திருந்த நண்பி ஒருவர்.

என். எஸ். குமரன்

# அமைச்சரவைக்கு நேரமில்லை! தமிழ்க் கட்சிகட்கு கவலையில்லை!! மக்களுக்கோ தீர்வு இல்லை!!!

சென்ற வாரம் முழுவதும் யுத்த வெற்றிக் களிப்புடன் 'பெருமளவு பயங்கரவாதிகளை' கொன்றும் ஏனையோரை ஓட ஓட விரட்டியும் விட்ட பெருமையை இலங்கை தொடர்பு சாதனங்களுக்கு அரசாங்கம் அறிவித்துக் கொண்டிருக்கும் போது, வடக்கில் இராணுவத்தினர் தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிக் கொண்டிருந்தனர். அரசாங்கம் எவ்வளவோ முயன்று முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டபோதும் உண்மைகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. அரச படைகளின் முன்னோக்கிய பாய்ச்சல்களின் ஆரம்ப ஐந்து நாட்களின் முன்னேற்றம் ஆட்டங்காணத் தொடங்கியதுடன், பின் வாங்குவது புத்திசாலித்தனமானது என்ற முடிவுக்கு அவர்கள் வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. புக்காரா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதும், புலிப்பாய்ச்சல் நடவடிக்கையும் அடித்தாரா கப்பலை உடைத்த கடற் புலிகளின் தற்கொலைத் தாக்குதலும் அரசு படைகள் இந்த முடிவுக்கு வர முக்கிய காரணங்களாக இருந்தன. இங்குள்ள அரச செய்தித்துறை ஒரு விமானி சுடப்பட்டதற்காக நாம் சோர்ந்துவிடவில்லை, தொடர்ந்தும் விமானங்கள் பறக்கின்றன என்றும், புலிப்பாய்ச்சலில் புலிகள் பலத்த சேதத்துடன் ஓடிப் போய் விட்டார்கள் என்றும், கப்பல் உடையவில்லை, அதை திருத்திக் கொண்டிருக்கிறோம் என்றும் உண்மைக்கு முற்றிலும் நேர்மாறான தகவல்களை அறிவித்துக் கொண்டிருந்தன. கொல்லப்படுபவர்கள் 'பயங்கரவாதிகள்' அல்ல, மக்களே என்ற அறிவிப்புக்களை ஏளனம் செய்தபடி தமது தாக்குதல் இலக்குத்தவறாமல் புலிகளையே தாக்குவதாக அது அறிக்கை விட்டுக்கொண்டிருந்தது. நிலைமைகள் தமது ஆசைக்கு முற்றிலும் நேர்மாறாக மாறிவிட்டன என்ற உண்மையை இன்னமும் மூடிமறைப்பது சாத்தியமில்லை என்று தெரிந்தபின், அழிவுகளை குறைத்து, வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக தற்காலிகமாக முன்னேறித்தாக்குதல் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்று முணுமுணுத்தது.

இதேவேளை, கடந்த சனியன்று வெளியிடப்படும் என்று அறிவிக்கப்படிருந்த அரசாங்கத்தின் 'தீர்வுதிட்டம்' அமைச்சரவை கூடித் தீர்மானம் எடுக்க அவகாசம் இல்லாததால் வெளியிடப்படாமல், வெளியிடும் தேதி பின் போடப்பட்டுள்ளதாக அரசு அறிவித்தது. பத்திரிகைகட்கு இதுபற்றி தகவல் தெரிவித்த பேராசிரியர் பீரிஸ், 'நாம் தீர்வுத்திட்டத்தை வெளியிடத்தான் போகிறோம். அமைச்சரவை ஒரு திகதியை தீர்மானித்ததும் அது வெளியிடப்பட்டுவிடும்' என்று தெரிவித்தார். (ஆடி மாதத்தில் நல்ல நாட்கள் இல்லை என்பதால் ஒரு நல்ல நாள் குறித்து தரும்படி கூட்டணிச் 'செல்வ'ங்களிடம் பீரிஸ் கேட்டிருக்கிறாரோ என்னவோ?)

உண்மைதான். அமைச்சரவைக்குத்தான் எத்தனை சோலிகள்? இந்த மாதிரி சில்லறை விவகாரங்களுக்காக கூடிப்பேச நேரம் கிடைக்குமா என்ன? 'சுது நெலும்' (வெள்ளைத் தாமரை)' 'வியாபாரத்துக்கும், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு (?) உணவுப் பொருட்களை அனுப்புவதற்கும், சு. கட்சியினருக்கு கூட்டுத்தாபன பதவிகள் தேவையா அல்லது வேறு பதவிகள் தேவையா என்று ஆராய்வதிலும், பயிற்சி எடுத்த இராணுவத்தினர்களுக்கு வாழ்த்துப்பாவும், ஆசிச் செய்தியும் வழங்குவதிலும் அவர்கள் தமது நேரங்களை செலவளிக்க வேண்டி இருக்கையில், இதற்கெல்லாம் நேரம் ஒதுக்க முடியுமா என்ன?

ஜனாதிபதியைப் பொறுத்தவரை அவருக்கு ஏகப்பட்ட சோலிகள். சமாதானத்துக்காக யுத்தத்தை நடாத்துவதும், யுத்த முனையிலுள்ள இராணுவத்தினரின் நலன்கள், பாதுகாப்பு விவகாரங்கள் பற்றிப் பேசுவதற்கும், முழு நாட்டையும் யுத்தத்தினை நே;ாக்கி அணிதிரட்டுவதற்கும், ஐ.தேசியக் கட்சி அரசாங்கத்தை விமர்சிப்பதற்கும், ஆதரவை நிறுத்திவிடுவோம் என்று 'மிரட்டுகின்ற' தமிழ் முஸ்லிம் கட்சிகளை தாஜா பண்ணுவதிலும் அவர் ஈடுபட வேண்டியிருக்கும் போது, இவை பற்றி பேச அவருக்கு நேரம் ஏது?

பேராசிரியர் பற்றி சொல்லவே தேவையில்லை. அவருக்கு ஜனாதிபதி முறைமை மாற்றத்தை பின்போடல், பௌத்த பிக்குகளுடன் பேசுதல், அரசியலமைப்பை உருப்போடல், புலிகளை தடைசெய்வதுபற்றி ஆராய்தல், செய்தியாளர்களை சந்தித்தல் என்று அவரது வேலைகள் அம்பாரம்!

ஆக, அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்படாத காரணத்தால் வெளியிடப்படாமல் இருக்கும் இந்த தீர்வுத்திட்டம், இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்கு வெளியிடப்படுவதற்கான வாய்ப்புக்களே இல்லை என்று தெளிவாகி விட்டது.

தீர்வை முன்வைக்குமாறு அறிக்கை விட்டுவிட்டு, பின்கதவால் அதை முன்வைக்கக் கோரும் அமைப்புக்களை தாஜா பண்ணுவதிலும் அவ்வாறு கோர வேண்டாம் என்று வேண்டுகோள் விடுப்பதுடன் அரசுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கூறுவதிலும் தமக்குள்ளே சச்சரவு பட்டுக் கொண்டிருக்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணி.

எவ்வாறாயினும் தீர்வுத்திட்டம் ஒன்றை அரசு உண்மையிலேயே வைத்திருக்கிறதா அல்லது அப்படி ஒன்று அதனிடம் இல்லையா என்பதைவிட, அப்படிப்பட்ட ஒரு தீர்வு என்ன விடயங்களை உள்ளடக்கி இருக்க வேண்டும் என்பது முக்கியமானது. ஆனால் இது பற்றிய அக்கறையை தமிழ் மக்களின் சார்பில் பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் எவையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை.

இன்றைய பிரச்சினையின் அடிப்படையை அவர்கள் விளங்கி வைத்திருக்கின்ற விதம், சிங்கள இனவாதிகளது கண்ணோட்டங்களிலிருந்து வேறுபட்டதாக இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சமாதான விரோத ஜனநாயக விரோதப் போக்குகள் ஒழிக்கப்பட வேண்டுமானால், தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் புலிகள் அடக்கப்பட வேண்டும், அவர்கள் பலவீனப்பட்டால் மட்டுமே, சமாதானப் பேச்சுக்கள் சாத்தியம் என்பது தான் இவர்களதும் நிலைப்பாடாக உள்ளது.

இன்னுமொரு அபிப்பிராயத்தையும் இவர்கள் கொண்டிருக்கிறார்கள். இந்த அபிப்பிராயத்தை இவர்கள் அரசாங்கத்திற்கும் சொல்லி வைத்திருக்கிறார்கள். தனது கருத்துக்கு சாதகமான அபிப்பிராயம் என்பதால் அரசும் இதைக் கேட்டு சந்தோசப்பட்டுக் கொண்டிருப்பதுடன், இவர்களை தனது செல்லப்பிள்ளைகளாக அங்கீகரித்தும் உள்ளது. அதுதான் புலிகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் எத்தகைய ஆதரவும் இல்லை என்பது. புலிகள் அழிக்கப்பட்டால் அதுவும் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அழிக்கப்பட்டால் தமிழ் மக்கள் அது பற்றி ஒன்றுமே செய்ப் போவதில்லை. உண்மையில் அவர்கள் புலிகளிடமிருந்து காப்பாற்றப்பட்ட உணர்வையே கொண்டிருப்பார்கள் என்பது தான் அந்த அபிப்பிராயம்.

புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் இருக்கும் முரண்பாட்டை மிகைப்படுத்தி, அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டை எளிமைப்படுத்தி யதார்த்தத்திற்கு புறம்பான கனவுகளில் இவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

போகட்டும்! ஆனால் உண்மை மிகவும் தெளிவானது.

வடக்கு கிழக்கு மக்கள் தம்மை ஒரு தேசமாக உணர்கின்ற வரை, இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது புலிகளுக்கு இடப்படும் தீனியாக ஒரு போதும் அமைய முடியாது. புலிகளை பலவீனப்படுத்தியோ, சமாதானப்படுத்தியோ 'சரிக்கட்டி' விடுகின்ற மனோபாவத்தின் பின்னணி, ஒரு சிங்கள பெருந்தேசிய வாதத்தின் பின்னணியே என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை.

எனவேதான் பலமுறை இப்பந்தியில் சுட்டிக்காட்டியது போலவே, தீர்வுத் திட்டம் , அது தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினையை கணக்கிலெடுத்திருக்கிறதோ இல்லையோ என்பதை தெரிந்து கொள்வதற்காக வேறும் உடனடியாக வைக்கப்படாக வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகின்றோம்.

வைக்கப்படும் தீர்வுத்திட்டம் தமிழ் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அங்கீகரிப்பதாய் இந்த நாட்டின் அரசு இனமத சார்பற்ற அரசு என வெளிப்படுத்துவதாய், இனங்களுக்கிடையிலான சுதந்திரமும் தனித்துவமும், சமத்துவமும் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் ஏற்படும் கூட்டமைப்பை ஏற்பதாக அமைய வேண்டும். அவ்வாறு அமையாத எந்த தீர்வும் நாட்டின் நிலைமையில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என்று திரும்பவும் கூறிவைக்க விரும்புகிறோம்.

எங்கே அரசு தீர்வுத்திட்டத்தை முன்வைத்து அதை ஆதரிக்க வேண்டிவந்தால் தமிழ் முஸ்லிம் மக்களிடம் இருந்து தாம் தனிமைப்பட்டு விடுவோமோ என்றோ, எதிர்த்தால், அரசினால் கிடைக்கும் லாபங்கள் இல்லாமல் போய்விடுமோ என்றோ பயப்படும் த.வி.கூ வேண்டுமானால் இந்த விட யம் குறித்து வழமை போல சந்தர்ப்பவாத வேலையில் ஈடுபடட்டும். அல்லது எந்த அவசரகாலசட்ட விதிகளின் கீழ் வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு எதிராக அரசாங்கம் யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கிறதோ, அந்த அவசரகாலச் சட்டத்திற்கு மாதந்தோறும் வாக்களித்தபடி, நாம் மக்கள் கொல்லப்படுவதற்கு எதிரானவர்கள் என்றும், காணாமல் போதல், எதேச்சையான கைதுகள் போன்றவற்றிற்கு எதிராக குரல் கொடுக்கிறோம் என்றும் கூறிக்கொண்டு இருக்கட்டும், அல்லது ஏதாவது தவிர்க்க முடியாததாக, தாம் தமிழ் மக்கள் மத்தியில் அம்பலமாகிப் போகிற நிலமை ஏற்படும் என்று தோன்றினால் வாக்கெடுப்பு நேரத்தில் பாராளுமன்ற கழிப்பறைகளுக்குள் ஒழிந்து கொண்டிருக்கட்டும். அரசாங்கத்தை எதிர்த்து நிற்பது பிழைப்பை கெடுத்துவிடும் என்று தெளிவாக தெரிந்து வைத்திருக்கும் கூட்டணி நீலங்களுக்கும், மற்றைய ஈ. பி. டி. பி, புளொட்களுக்கும் இது பொருத்தமானதுதான்.

ஆனால் பிற சமாதான அரசியல் ஜனநாயக விருப்புள்ள சக்திகளின் நிலை என்ன? அவர்களும் இதற்கு ஒத்துப் போவதுதான் சரி என்று நினைக்கிறார்களா?

நாட்டின் எரியும் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க நேரமில்லாத அமைச்சரவையையும், யுத்தத்தை நடாத்துவதற்காக படை திரட்டிவரும் அரசாங்கத்தையும் எத்தனை காலத்துக்குத்தான் அனுதாபத்துடன் இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?

**நாசமறுப்பான்**

---

# போர்க்காலத்திற்குப் பொருத்தமானவன் அல்ல நான்!

~வசந்தராஜா

நான் ரூபவாஹினியின் தலைவராக இருந்த காலத்தில் அந்த நிறுவனத்தினுள் இருந்த சில போக்குகளை அவதானிக்க நேர்ந்தது. அவை என்னை மிகவும் கவலைக்குள்ளாக்கின. செய்தி அறையில் நடக்கும் வேலை முறைகள் என்னை மிகவும் பாதித்தன. செய்தி சேகரிப்பவர்கள் நாளுக்கு நாள் மாறுகின்ற முரண்பாடான அரசியல் பிரச்சினைகளை வெளிக் கொணர்வதில் ஆர்வமற்றே இருக்கின்றனர். உணர்ச்சி பூர்வமான பிரச்சினைகளுடன் தொடர்பான செய்திகளை ஆழமாக ஆராய்வதற்கும் அவர்கள் அஞ்சுகின்றார்கள். சில நேரங்களில் அவை அரசாங்கத்திற்கு பாதகமாகத் திரும்பக்கூடும் என்ற பயமே இதற்குக் காரணம். வெளி இடங்களில் இருந்து வரும் கருத்துக்களைச் சேர்த்து நடுநிலைமையைக் கடைப் பிடிக்கும்படி அவர்களுக்கு அறிவித்த போதும், அவர்கள் அவற்றைத் தவிர்ப்பதற்கே விரும்புகின்றனர்.

தொடர்பூடக கலாசாரத்தின் ஒரு பகுதியாகவே இந்தப் பயம் அங்கு காணப்படுகிறது. தன்னியல்பான தணிக்கைகள் இங்கு சாதாரணம். அரசாங்கம் அவர்களுடைய தொடர்பூடக ஆலோசகர்களின் உதவியுடன் தொடர்பூடகக் குழுக்களை உருவாக்கிற்று. இந்தக் குழுக்கள் காவல்நாய்கள் போலத்



தொழிற்படுகின்றன. மேலும் இக் குழுக்கள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களிடையே பயத்தையும், பீதியையும் ஊட்டி வைத்திருக்கின்றன. இலத்திரனியல் தொடர்பூடக தலைவர்களை எப்படி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. தொடர்ச்சியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோ அல்லது சந்தித்தோ உணர்ச்சிபூர்வமான நிகழ்ச்சிகள் தொடர்பாக பல்வேறு கேள்விகளையும் கேட்டோ தமது கட்டுப்பாட்டை இவர்கள் அமுலாக்குகின்றனர்.

என்னுடைய மிகப் பெரிய இலக்காக இருந்தது நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஆழமாக வேரூன்றியிருந்த பயத்தையும் பீதியையும் போக்கும் நடவடிக்கையே. இதனால் நான் தொடர்ச்சியாகப் பல கூட்டங்களை நடத்தி அவர்களது அச்சத்தைப் போக்கி நம்பிக்கையளிக்க வேண்டியிருந்தது. அவர்கள் ஏதாவது பிரச்சினைகளை எதிர்நோக்கினால் அவர்கள் சார்பாக வாதாடவும் பாதுகாக்கவும் நான் முன்வருவேன் என உறுதிமொழிகள் கூறினேன்.

இவர்கள் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதற்கு மிகவும் தடையாக இருப்பது இந்தப் பயப்பீதிதான். என்னுடைய உறுதிமொழியானது கணிசமான அளவுக்கு வேலை செய்தது. குறிப்பாகச் சில புதிய நேரடி ஒளிபரப்புகளைத் தயாரிக்க முடிந்தது. சில நேரடிக்காட்சியில் பார்வையாளர்கள் தொலைபேசி மூலமாக அமைச்சர்களையும், அரசியல்வாதிகளையும் சில உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகள் தொடர்புடைய கேள்விகளைக் கேட்டுத் திக்குமுக்காடச் செய்தனர். ரூபவாஹினி பார்வையாளர்களுக்கும் இது புதுமையான விடயமாகவே இருந்தது.

இவை மீண்டும் நம்பிக்கையை உருவாக்க உதவிசெய்தன. ஆனால், செய்தி அறையில் நிலவிய பயப்பிராந்தி மிகவும் பயங்கரமான ஆழத்திற்கு ஊடுருவியிருப்பதை நான் கண்டேன். உதாரணத்திற்காக கடற்படைக் கப்பலை மூழ்கடித்துப் புலிகள் யுத்த நிறுத்தத்தை முறியடித்த நாள். மதிய செய்தியின் போது மேற்படி சம்பவத்தை குறிப்பிடவே இல்லை.நான் ஆத்திரமடைந்து என்ன நடந்தது எனச் செய்தி அறையில் விசாரித்தேன்.

அரசாங்கம் தன்னுடைய சொற்களில் பத்திரிகைச் செய்தியைத் தரத் தவறிவிட்டது என்று எனக்குக் கூறப்பட்டது. அதேநாள் மாலை செய்தி ஒளிபரப்புக்கு முன்பு செய்தி தலைப்புக்களைப் பார்ப்பதற்காக, செய்தி அறைக்குள்

தொடர்ச்சி பக்கம் 15இல்

# புல்மோட்டை: கிழக்குவாசலின் அஸ்தமனம்?



ஏ.எம்.எம்.மிஹ்ழார்

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள புல்மோட்டை கிராமம் திருகோணமலைக்கு வடக்கே 34 மைல் தொலைவில் அமைந்துள்ளது. வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் வாவியையும் கிழக்கே கடலையும் தெற்கே திருகோணமலை மாவட்டத்திலுள்ள யான் ஓய நதியையும் மேற்கே வயற்பிரதேசங்களையும் சில மைல்களுக்கப்பால் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள சிங்களக் கிராமங்களான மகாசேனபுர, பராக்கிரமபுர போன்ற பிரதேசங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. சுமார் 15,000 க்கும் அதிகமான சனத்தொகையைக் கொண்ட இக்கிராமத்தில் ஏறக்குறைய 95% ஆனோர் முஸ்லீம்களாவர். பழங்குடி மக்களான இவர்களில் பெரும்பாலானோர் விவசாயத்தையும் கடற்றொழிலையும் பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டுள்ளனர் இலங்கைக்கு வருமானங்களை ஈட்டிக் கொடுக்கும் பிரதான கனிப்பொரும் ஏற்றுமதிகளான இல்மனைட், றூட்டைல் என்பன இங்கிருந்துதான் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. இல்மனைட் சுத்திகரிக்கும் தொழிற்சாலை இங்கேதான் நிறுவப்பட்டுள்ளது. ''இல்மனைட்'' என்றால் ''புல்மோட்டை'' ஞாபகம் வருமளவிற்கு இக்கிராமம் பிரபல்யம் அடைந்துள்ளது. கிழக்கு மாகாணத்தின் ஆரம்பமாக, நுழைவாயிலாக புல்மோட்டை அமைந்திருப்பதும் அதன் சிறப்பிற்கு, புகழுக்கு மற்றொரு காரணம். ''கிழக்கு வாசல்'' என்று கூட இது அழைக்கப்படுவதுண்டு. இவ்வாறான சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்ட இம்முஸ்லீம் கிராமமானது கடந்த பல வருடங்களாக இலங்கையில் எழுந்துள்ள இனப்பிரச்சினைகள் காரணமாக பலவகைகளில் பாதிக்கப்பட்டு வருவது அதன் துரதிர்ஷ்ட நிலையாகும். விவசாயம், கடற்றொழில் என பொருளாதார ரீதியாகவும், திருகோணமலை, அநுராதபுரம், முல்லைத்தீவு என முக்கோண வழிகளிலும் போக்குவரத்துப் பாதைகளைக் கொண்டிருப்பதால் போக்குவரத்துரீதியாகவும், மற்றும் சமூக, கலாசார, கல்வி ரீதியாகவும் பல இயற்கை வளங்களையும் பெற்றுள்ள இக்கிராமம் இன்று அனைத்து வழிகளிலும் பாதிப்புக்குள்ளாகி, அநாதரவாக வறுமைநிலையை அனுபவிக்கின்றது.

தரை, கடல் மார்க்கமாக பாதுகாப்பை இக்கிராமம் பெற்றுள்ளபோதிலும் பல தடவைகளில் புலிகளின் ஆள்கடத்தல், தனிநபர் கொலை, கொள்ளை போன்ற நேரடி மறைமுக தாக்குதல்களுக்கு உட்பட்டு வந்துள்ளது. அத்துடன் புலிகள் பாதுகாப்புப் படை மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள் காரணமாக பல தடவைகளில் பாதுகாப்பு படையினரின் அத்துமீறல்களுக்கும் இக்கிராமம் உட்பட்டு வந்திருக்கிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் புலிகள் புல்மோட்டை கிராமத்தில் இரு பொலிஸாரை சுட்டுக் கொன்றதையடுத்து பொலிஸார் பலரை கைது செய்து கொடுமைப்படுத்தியமையும், பல வீடுகளை கடைகளை தீயிட்டமையும் இதற்குத் தக்கசான்று. அவ்வாறே கடந்த மே மாதம் 06ம் திகதி புலிகள் இராணுவதரப்பில் ஐந்து பேரை சுட்டுக் கொன்றதையடுத்து இராணுவ வீரரொருவர் மேற்கொண்ட வெறியாட்டம் மனிதாபிமான மற்றதொன்றாகும். இதில் குறித்த இராணுவ வீரர் திடீரென வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு அங்கு இருந்த ஐவர் மீதும் வேட்டுக்களைத் தீர்த்து தனது தாகத்தைத் தணித்தார். சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பாதிக்கப்பட்ட இக்குடும்பம் வறுமையால் பீடிக்கப்பட்ட நாளாந்த உழைப்பினூடாக வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டும் வழமையைக் கொண்டது. கொல்லப்பட்டவர்களில் எம்.அவ்வா உம்மா (70வயது) என்ற வயோதிப விதவை, கே.பதீஸ் (03வயது) என்ற பாலகன் உட்பட எம்.ஹாரிஸ் (11வயது), கே.வல்கீஸ் (33வயது), எம்.மீரா சாஹிபு (55 வயது) போன்றவர்களும் அடங்குவர்.

குறித்த இராணுவ வீரர் மேற்கொண்ட தொடர்ந்தேர்ச்சியான வன்முறையில் ஏ.எஸ்.ஐயூப் (25 வயது), வி.குறைஸா (24வயதைக் கொண்ட இப்பெண்மணி ஏழு மாதக் கர்ப்பிணியும் கூட) ஏ.அஸீஸ் (26வயது), ஒன்பது மாதக் குழந்தையொன்று போன்றோர் காயமடைந்துள்ளார்கள். இதில் ஏ.எஸ்.ஐயூப் என்பவர் ஒரு காலையும் ஒரு கையையும் இழக்குமளவிற்கு மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளார். வன்முறையில் ஈடுபட்ட இராணுவ வீரர் ''சில்வா'' என இனங்காணப்பட்டுள்ளார். இவர் உளவியல்ரீதியாகப் பாதிப்புக்குள்ளானவர் எனவும் தற்போது இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறே இச்சம்பவத்திற்கு முன் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் திடீரென அப்துல் மவாப் (55வயது) என்பவரை அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொன்றமையும் அவர்களது வன்முறையின் மறுபிரதிபலிப்பாகும்.

புலிகளும் இலங்கை அரசும் செய்து கொண்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெடித்த மூன்றாவது ஈழப்போரில் புலிகளும் அரசும் கையாண்ட புதிய நடவடிக்கைகளால் புல்மோட்டை மக்கள் வழமைக்கு மாறாக பல பாதகமான, மோசமான விளைவுகளுக்கு உட்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் எல்லைப்புறம் என்பதால் தான் புல்மோட்டை இவ்வாறான மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஏனெனில் புலிகள் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபடுவதாகவும் அதனால் எல்லைப்பகுதியான புல்மோட்டை மீது தொடர்ந்தேர்ச்சியான பல தாக்குதல்களை தொடுப்பதாகவும் பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். புலிகளின் படையினர் மீதான இத்தாக்குதல்களால் புல்மோட்டையில் குறிப்பாக எல்லைப்புற சிறு கிராமங்களான அரபாத்நகர், ஜின்னாபுரம் என்பன பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இக்கிராமங்களில் வசிக்கும் பெரும்பாலானோர் அச்சம், பீதி காரணமாக தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். வெளியேறிய இம்மக்களில் சிலர் புல்மோட்டை பிரதேசத்தின் மத்திய பகுதியில் வசிக்கும் தங்களது உறவினர்களோடு கலந்து மிகுதி வாழ்க்கையை தொடர்கின்றனர். பலர் புல்மோட்டைப் பிரதேசத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

பதட்டம் காரணமாக ஊரைவிட்டு வெளியேறிய மக்கள் அநுராதபுர மாவட்டத்தின் கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்திலுள்ள கிரிப்பாவெவ, நெலுகொல்லா கட பகுதிகளிலும், ஹொரவப்பொத்தானை பிரதேசத்திலுள்ள நிக்கவெவ, அங்க நாச்சிய, பத்தாவ பகுதிகளிலும் கெக்கிராவ பிரதேசத்திலுள்ள கனேவல்பொல, ஹோராப்பொல, கட்டுகளியாவ பகுதிகளிலும், புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலங்குடா பகுதியிலும் முந்தல் பிரதேசத்திலுள்ள கடையாமோட்டை, கணமுல்லை, சமீரகமை பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இதுவரை சுமார் 475 குடும்பங்களுக்கும் அதிகமானோர் வெளியேறியுள்ளதாக கிடைக்கப்பெற்ற விபரங்களிலிருந்து தெரிய வருகிறது. இது வரையில் வெளியேறாத மக்களில் பலர் தங்களது பெறுமதி வாய்ந்த பொருட்களை மாத்திரம் புல்மோட்டைப் பகுதிக்கு வெளியே உள்ள பிரதேசங்களுக்கு நகர்த்திவிட்டு வெறுமனே குடும்பங்களோடு மாத்திரம் தங்கியுள்ளனர். சிலர் அச்சம், பீதி காரணமாக யாது செய்வதென தெரியாது பதட்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

வடக்கு முஸ்லீம்கள் தங்களது தாயகங்களிலிருந்து எவ்வாறு புலிகளால் வெளியேற்றப்பட்டார்களோ, அதே நிலையும் கதியும் புல்மோட்டை முஸ்லீம்களுக்கும் இடம்பெறலாம் என்ற எதிர்கால எதிர்பார்ப்பும், புலிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெறுவதால் இருதரப்பினருக்குமிடையே அகப்பட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக் கொள்ள நேரிடும் என்ற அச்சமும், பாதுகாப்பு படையினர் உறுதியான நம்பகரமான பாதுகாப்பை புல்மோட்டை மக்களுக்கு வழங்குவார்களா? என்ற கேள்விக்குறியும், போராட்ட வேளையில் இருதரப்பினரும் பொது மக்களை கேடயங்களாகப் பயன்படுத்தலாம் என்ற சந்தேகமுமே மக்கள் நாளாந்தம் தங்களது பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்கான பிரதான காரணங்களாகும். அத்துடன் தாக்குதல்களின்போது பாதுகாப்புத்தேடி ஓடுவதற்கான பாதை மார்க்கங்களையும் புல்மோட்டை மக்கள் பெறவில்லை. இவர்களின் மரபுவழி பாதையான திருகோணமலை - புல்மோட்டை பாதை பல வருடங்களாக மூடிய நிலையில் இருந்து வருவதோடு, தற்சமயம் இது தடை செய்யப்பட்ட பிரதேசமாகவும் மாற்றப்பட்டுள்ளது. இதனால் திருகோணமலை நோக்கி செல்லக் கூடிய வாய்ப்பை மக்கள் இழந்துள்ளனர். இன்று போக்குவரத்துக்காக பயன்படுத்தும் ஏக பாதையான புல்மோட்டை - அநுராதபுரம் பாதையிலேயே மக்கள் சென்று வர வேண்டிய நிலையிலுள்ளனர். இதன் காரணமாக இறுதி வேளையில் அதாவது, மோதல்கள் உக்கிரமடைந்தால் தப்பிக்க வழி இல்லை என்பதால் ஆரம்பத்திலேயே பாதுகாப்பை, நிம்மதியை தேடிச் செல்வது சிறந்தது என்ற நோக்கமும் மக்கள் வெளியேறிச் செல்வதற்கான மற்றொரு காரணமாகும்.

புல்மோட்டைப் பிரதேசத்தை விட்டு வெளியேறாது, தங்களது இருப்பிடங்களிலே முடங்கிக் கிடக்கும் மக்களைப் பொறுத்தவரையில் பல கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். புலிகளின் படையினர் மீதான தாக்குதல்கள் அடிக்கடி இடம் பெறுவதால் பாதுகாப்பு படையினரும் பல சட்டதிட்டங்களை நாளாந்தம் புதிதாக கொண்டு வருகின்றனர். இது நேரடியாகவும், மறைமுகமாகவும் மக்களையே பாதித்து வருகிறது. குடும்ப அங்கத்தவர்களின் பெயர் விபரங்களை எழுத்து வடிவில் முன் வாசலிலே பார்வைக்கு வைத்தல் வேண்டும், இரவில் நடமாடுவது நடை, ரோர்ச்லைட் பாவிப்பது தடை, பெற்றரி ஊருக்குள் கொண்டு வருவது தடை, கடைக்காரர்கள் அதிகமான பொருட்களை, சாமான்களை கொள்வனவு செய்யமுடியாது. விவசாயம் செய்வது தடை (வயற்பிரதேசங்கள் புல்மோட்டையின் எல்லைப்பகுதிகளில்தான் அதிகமாக அமைந்துள்ளன) மீன்பிடித்தடை போன்ற பல சட்டதிட்டங்களால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இரவு வேளைகளில் மக்கள் படும் வேதனை வர்ணிக்க முடியாதது. நேரகாலத்தோடு இராப்போசனங்களை பூர்த்தி செய்துவிட்டு சிலர் தமது சொந்த வீடுகளிலும் இன்னும் சிலர் தமது உறவினர்களின் வீடுகளிலும் முடங்கி, கதவுகளை இறுக்கமாக அடைத்துக் கொண்டு அச்சத்தை, பீதியை உள் வாங்கியவர்களாக, தூக்கத்தைத் துறந்து, வெடியோசை, ஷெல் முழக்கம் அற்ற அமைதியான இரவாக அன்றைய இரவு அமைய வேண்டுமென பிரார்த்தித்த வண்ணம் காலைப் பொழுதுகளை வரவேற்கின்றனர். பலதடவைகளில் இம்மயான இரவுகள் சப்த இரவுகளாக வேட்டிரைச்சல் மிக்க இரவுகளாக மாறி மக்கள் அடங்கி, ஒடுங்கிப்போன சம்பவங்களும் உள்ளன. ''சூரியன் மேற்கில் மறையுமுன்பே கிழக்கு வாசல் உறங்கி விடும் நிலை'' என மக்கள் கவலையோடு கூறுவதையும் அறியக் கூடியதாக உள்ளது.

மறுபுறத்தில் பொருளாதார கஷ்டங்கள் மக்களை வாட்டிவதைக்கின்றன. இராணுவத்தினரின் சட்டதிட்டங்களுக்கு அமையவும், அச்சம், பதட்டம் காரணமாகவும் விவசாயம் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு கடலில் மீன்பிடிக்க அரசு விதித்த தடை கடற்றொழிலை செயலிழக்க செய்துள்ளது. இவை மூலமாக தங்களது அன்றாட வாழ்க்கையை நடாத்தியவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அதிகமான மக்கள் வறுமைக்கோலம் பூண்டுள்ளனர். அத்துடன் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அண்மையில் தீவிரவாதிகளின் கொள்ளைச் சம்பவத்துக்கு இருதடவைகள் உட்பட்டதனால் மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் கட்டுப்பாடு காரணமாக பட்டினி, பஞ்சத்தை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு வருவது கவலைக்குரிய ஓர் விடயமாகும். அரசினால் இருதடவைகள் நிவாரணம் வழங்கப்பட்டாலும் கூட அந்நிவாரண வேலைகள் தொடர்ந்தும் இடம்பெறுமா? என்பது சந்தேகமே. அத்துடன் புலிகள் இங்குள்ள முக்கிய கடைகளையும் விட்டுவைப்பதாக இல்லை. அண்மையில் நள்ளிரவு வேளையில் புல்மோட்டைப் பிரதேசத்தில் நுழைந்த இவர்கள் பல கடைகளை சூறையாடிச் சென்றமை உணவுத் தட்டுப்பாட்டை இன்னும் அதிகரித்துச் செல்கிறது.

புல்மோட்டையில் வழமையாக இடம்பெற்றுவந்த நிருவாக வேலைகள் சிறிது காலம் ஸ்தம்பித நிலையை அடைந்து தற்போது வரையறுக்கப்பட்ட விதத்தில் சில கட்டுப்பாடுகளுடன் இடம் பெற்று வருகின்றன. புல்மோட்டை முஸ்லீம் மகா வித்தியாலயம் உப அதிபரின் நிருவாகத்தில் மாணவர்களின் 10%-15% வரையிலான வரவுகளுக்கு மத்தியிலும் ஆசிரியர்களின் 60% வருகைக்கு மத்தியிலும் இயங்கி வருகிறது. தி/அறபா முஸ்லீம் வித்தியாலயம் பதட்டம் காரணமாக மூடப்பட்டுள்ளது. தி/ஜின்னா முஸ்லீம் வித்தியால்யம் மாணவர்களின் 10% வரவுக்கு மத்தியில் இயங்கி வருகிறது. புல்மோட்டை தபாலகம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உப அஞ்சல் அலுவலகம் என்ற நிலையிலிருந்து அஞ்சல் அலுவலகம் என்ற நிலைக்கு தரமுயர்த்தப்பட்டிருந்தது. இத்தபாலகம் தற்போது தொலைபேசி இணைப்பு, தபால் பதிவு வேலைகள், காசுக்கட்டளை அனுப்பல் , பெறல் போன்ற முக்கிய கருமங்கள் இன்றி அஞ்சல் அலுவலகம் என்றில்லாமல் அஞ்சல் பெட்டி என்ற நிலையில் இயங்கி வருகிறது. இதில் கடமையாற்றிய வெளியூர் தபாலதிபர் பதட்டம் காரணமாக இதற்கு மூடுவிழா நடாத்தி விட்டு சென்றமை இதனது பின்தங்கிய நிலைக்கு முக்கிய காரணம் எனக் கருதப்படுகிறது. தொலைபேசி வசதிகள் துண்டிக்கப்பட்டதனால் மக்கள் வெளித்தொடர்புகள் இன்றி பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

புல்மோட்டை -அநுராதபுர வீதியில் இடம் பெற்றுவந்த பஸ்சேவை வழமைநிலையை விட சற்று வித்தியாசமான முறையில் மேற்கொள்ளப்படுகிறது. புல்மோட்டை - கொழும்பு பஸ்சேவையானது புல்மோட்டை - அநுராதபுரம், புல்மோட்டை - கெபித்திகொல்லாவ என குறைக்கப்பட்டுள்ளது. இது நாளாந்தம் ஒரு தடவை பாதுகாப்பு படையினரின் நேரடிக்கண்காணிப்புக்கு் மத்தியில் நடாத்தப்படுகிறது.

வைத்தியசாலை அதனது சுமுகமான நிலையில் இயங்குகிறது. எனினும் அவசர சிகிச்சைகளுக்கு புல்மோட்டையிலிருந்து 20 மைல் தொலைவிற்கப்பாலுள்ள பதவியா மாவட்ட வைத்தியசாலைக்குத்தான் நோயாளிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். அதுவும், பாதுகாப்புப் படையினர் வீதியை புலிகளின் நடமாட்டம், தாக்குதல்கள், வெடிகுண்டுகள் இவைகளிலிருந்து துப்புரவு செய்து சோதனை இட்டதன் பின்னரே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அவசர சிகிச்சைகள், இதனால் பாதிக்கப்பட்டு பலர் இறந்து விட்ட சம்பவங்களும் உள. திடீர் மரண விசாரணை, பிரேதப் பரிசோதனைக்காக மரணித்த உடல்கள் மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளதால் மரணித்த உடல்கள், அதனது உறவினர்களிடம் சில நாட்கள் தாமதித்தே ஒப்படைக்கப்படுகின்றன. இதனால் குறித்த உறவினர்கள் சில அசௌளகரியங்களை எதிர்நோக்குவதோடு, மரணித்த உடலுக்கான மார்க்க கடமைகளைக் கூட செய்ய முடியாத அவல நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். இதற்கு அண்மையில் அரபாத்நகரில் சுட்டுக் கொல்லப்பட் ஐந்து முஸ்லீம்களின் சடலங்களும் தக்க சான்றுகளாகும். புல்மோட்டையில் அமைந்திருக்கும் இல்மனைட் தொழிற்சாலையைப் பாதுகாப்பதில் அரசு கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறது. இது பலகோடிக்கணக்கான ரூபாய்களை வருடாந்தம் அரசுக்கு ஈட்டிக் கொடுப்பது பலரும் அறிந்த உண்மை. புல்மோட்டை மக்கள் அவர்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறினால் இல்மனைட் தொழிற்சாலையை மூடிவிடும் அபாய நிலையேற்படும். ஏனெனில் அங்கு தொழில் புரிபவர்களில் அதிகமானோர் வெளியூர் சிங்களவர்களாக இருந்தாலும் புல்மோட்டை முஸ்லீம்களும் சில பதவிகளிலும் பொறுப்புக்களிலும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் பொதுமக்கள் இன்றி ஊழியர்கள் மாத்திரம் தரித்திருக்கும் சூழ்நிலைகள் அங்கு இல்லை. இவர்களது வெளியேற்றம் தொழிற்சாலையின் இயக்கத்துக்கு பலவகைகளிலும் முட்டுக்கட்டையாக அமைந்து விடும் என்பதால் அரசு ஆயிரக் கணக்கில் தரைப்படையினரையும் கடற்படையினரையும் புல்மோட்டைப் பிரதேசத்தில் குவித்துள்ளது. அண்மையில் வெளிநாட்டு கப்பலொன்றில் இல்மனைட்டை ஏற்றும் பணி இவர்களின் பாதுகாப்பில்தான் சில நாட்களாக இடம்பெற்றது. இதனை மையமாக வைத்தே புல்மோட்டை முஸ்லீம்களின் வெளியேற்றம் கடந்த மே மாதம் 31ம் திகதி முதல் பாதுகாப்பமைச்சின் உத்தரவுக்கிணங்க தடுக்கப்பட்டுள்ளது. சுமார் 60% மான மக்கள் தற்சமயம் வெளியேறாது தடுக்கப்பட்டுள்ளனர். சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுவது போன்று புல்மோட்டை மக்கள் அனைவரும் தங்களது தாயகத்தை விட்டு வெளியேறுவதற்கான சாத்தியக் கூறுகள் மிக அரிதாகவே உள்ளன. ஏனெனில் மேற்குறிப்பிட்டது போன்று அரசு மக்களைப் பாதுகாக்காவிட்டாலும் தொழிற்சாலையை பாதுகாப்பதில் அக்கறையாக இருந்து வருகிறது. அத்துடன் கிழக்கு மாகாணத்தின் ஆரம்பம், புல்மோட்டை என்ற வகையிலும் அதனைப் புலிகள் கைப்பற்றினால் அரசுக்கு அவப்பெயர் ஏற்பட்டு விடும் என்பதாலும் அப்பகுதியைப் பாதுகாப்பதில் அரசு விழிப்பாக இருந்து வருகிறது.

# அரசின் யுத்தம் ஜனநாயக அடிப்படைகளுக்கு எதிரானது!

~ நிர்மால் ரஞ்சித் தேவசிறி

***சமாதானம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற உறுதிமொழி மீது ஆட்சிக்கு வந்த பொ.ஐ.மு அரசாங்கத்தின் யாழ்ப்பாண யுத்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

பொதுசன ஐக்கிய முன்னணி மூன்று தேர்தல்களில் வெற்றியீட்டியுள்ளது. தென்மாகாண சபைக்கான தேர்தல், பாராளுமன்றப் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய மூன்றுமே இவை. இம் மூன்று தேர்தல்களிலும் பொ.ஐ.முன்னணியினர் இந் நாட்டு வாக்காளர்களிற்கு மிகத் தெளிவான வாக்குறுதியொன்றளித்துள்ளனர். இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்கு யுத்தம் ஒரு தீர்வல்ல என்பதே அது. இது பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரகடனத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதேபோல் தேர்தல் பிரசாரத்தின் போதும் அநேக சந்தர்ப்பங்களில் அக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு இந்நாட்டு வாக்காளர்களுடன் ஏற்படுத்திய உடன்பாட்டின் மீதுதான் பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் பின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்தது. ஆனாலும் இரு சாராருக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை புலிகள் ஒரு தலைப்பட்சமாக மீறியதன் பின் அரசாங்கமும் மீண்டும் யுத்த வழிமுறைகளிற்குள் இறங்கியுள்ளது. தற்போது யாழ்ப்பாணத்தை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்கக் கடுந் தாக்குதலொன்றை ஆரம்பித்துள்ளது. ஆனால் எவ்விதத்திலுமே இனப் பிரச்சினைக்கு யுத்த வழிமுறை மூலம் தீர்வைக் காண இயலாது. இந்நாட்டு வாக்காளர்களுக்கு இவ் அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியின்படி இனப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முயற்சிப்பதற்கு அரசாங்கத்திற்கு எதுவித அரசியல் உரிமையும் இல்லையென் நான் கருதுகிறேன்.

***இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் பொ.ஐ.முவிடம் இருந்தது என்று சொல்வீர்களா?***

இக் கேள்விக்குப் பல விதங்களில் பதில் அளிக்க முடியும். விசேடமாக ஒருவர் இப் பிரச்சினையை விளங்கிக் கொள்வது எப்படி என்பதைப் பொறுத்துத் தான் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு இப் பிரச்சினையைத் தீர்க்கும் நேர்மையான தேவை இருந்ததா? இல்லையா எனத் தீர்மானிக்க முடியும். பொதுசன ஐக்கிய முன்னணி அதிகாரத்திற்கு வந்தது இனப் பிரச்சினையை மையப் படுத்திக் கொண்டிருந்த முக்கிய அரசியல் சிக்கலின் மத்தியிலாகும். இப் அரசியல், சிக்கல்களுக்கு ஜனநாயக முறையிலான மாற்றுத் தீர்வொன்றை வழங்க முன்பு இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் முடியவில்லை. இந்தச் சூழலில்தான் பொ.ஐ.மு தோற்றம் பெறுகிறது. ஐ.தே.கவின் செயன்முறைகளிற்கும் இந்த யுத்தத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரசியல் முரண்பாட்டிற்கும் ஜனநாயக மாற்றொன்றை வழங்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. தமிழ் சமூகத்திற்கும் சிங்கள சமூகத்திற்குமிடையே புதிய சமூக உடன்பாடொன்றை ஏற்படுத்துவது என்பதே அவர்கள் முன்வைத்த வழிமுறை. பொதுசன ஐக்கிய முன்னணியின் அரசியல் இருப்புக்கு இவ்வாறான செயன்முறைகள் அவசியமாயிருந்தது. இந்த அர்த்தத்தில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கப் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு, ஆகக் குறைந்தது அதன் தலைமைக்காவது நேர்மையான தேவையொன்று இருந்தது என நான் நம்புகிறேன்.

***சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடைந்ததைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?***


இருதரப்புக்கும் வேறுபட்ட அபிலாஷைகள் இருந்தன. அது ஒரு முக்கியமான பிரச்சினை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அடிப்படை குணாம்சம் அது முற்றாகவே ராணுவ - அரசியல் திட்டமொன்றின் மீது கட்டியெழுப்பப் பட்டது என்பதாகும். அந் நிலைமையினுள் புலிகள் யுத்தவழி சாராத செயன்முறையொன்றிற்கு மாறுவது என்பது இலகுவானது அல்ல. இதனால் ஒருவிதத்தில் பேச்சுவார்த்தைக்குச் செல்ல புலிகளுக்குத் தந்திரோபாயமான தேவைகள் மட்டுமே இருந்தன எனத் தெரிகிறது.

அதே சமயம் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் இயக்கம் தொடர்பாக யதார்த்தமாகச் சிந்திக்கவில்லை எனக் கூறலாம். பேச்சுவார்த்தை வழிமுறையினூடாகப் புலிகள் இயக்கத்தை அரசியல் ரீதியாகத் தோல்வியுறச் செய்வதற்கே அரசாங்கம் முயற்சி செய்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குள் பொதிந்திருந்த இந்த இலக்கைப் புலிகள் இனங் கண்டு கொண்டு விட்டனர். அரசாங்கத்தின் சமாதானத் திட்டம் வெற்றி பெற்றால் தமது அரசியல் திட்டம் சிதைந்து விடும் எனப்புலிகள் கருதினர். அதாவது புலிகள் சமாதானம் எனக் கூறியதும் அரசாங்கம் சமாதானம் எனக் கூறியதும் வேறுவேறு காரணங்களுக்காகவாகும். இந்த முரண்பாட்டாலேயே பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன என நான் நினைக்கிறேன். இவ்வாறான பேச்சுவார்த்தைச் செயல்முறைகளில் இரு சாராருமே ஒருவருக்கொருவரின் அரசியல் நிலைநிறுத்தல் தொடர்பான விடயம் பற்றி அறிந்து கொண்டு, விளங்கிக் கொண்டு செயற்பட்டாலே அன்றி இவ்வாறான பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுதல் சாத்தியமில்லை.

***இனப்பிரச்சினை தொடர்பான முன்னைய அரசினது அணுகுமுறைக்கும் பொ.ஐ.மு அரசினது அணுகுமுறைக்கும் வேறுபாடுகள் உண்டா?***

ஐ.தே.க, பொ.ஐ.மு இரண்டு அரசாங்கங்களிடையேயும் கருத்திலெடுக்க வேண்டிய பல விடயங்களில் வேறுபாடுகள் உள்ளதென நான் கருதுகிறேன். எனினும் அவ் வேறுபாடு இப்போதைய யுத்தம் தொடர்பானது அல்ல. இனப் பிரச்சினை தொடர்பாகவே இந்த இரண்டு அரசாங்கங்களும் கொண்டிருந்த மனப்பாங்கிலேயே வித்தியாசங்கள் உள்ளன. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதென்பது முழுமையான இலங்கைச் சமூகத்தினதும் ஜனநாயக நிறுவனத்தினதும், பலப்படுத்தலுடன் இணைந்ததொன்றாகும். ஐ.தே.க அரசாங்கத்தின் செயன்முறை ஜனநாயகமற்ற ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. பொதுசன ஐக்கிய முன்னணி பிரதிநிதித்துவப்படுத்தியது ஐ.தே.க. அரசாங்கத்தின் ஜனநாயகமற்ற அரசியல் செயன்முறைக்கு எதிராகச், சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடமிருந்து கிளர்ந்தெழுந்த ஜனநாயக அபிலாஷைகளையாகும். இனப் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட நிலைப்பாடு இதனைத் தெளிவாக்குகிற ஒரு உதாரணமாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணி தேர்தல் இயக்கத்தினுள் எழுந்த சிங்களத் தீவிர இனவாத சக்திகளிடமிருந்து தெளிவாகவே மாறுபட்டிருந்தமை இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது என நான் நம்புகிறேன். இந் நிலைமையினுள் ஒருவித முக்கியமான அர்த்தத்தில் இரு அரசாங்கங்களினதும் அடிப்படைகளில் வேறுபாடொன்று இருந்ததென நான் நினைக்கிறேன். ஆனாலும் இந்த யுத்தத்தை பொதுசன ஐக்கிய முன்னணி தொடர்ந்து நடத்துவதென்பது இந்த ஜனநாயக அடிப்படைக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது.



நிர்மால் ரஞ்சித் தேவசிறி கொழும்புப் பல்கலைக் கழகத்து அரசியல் விஞ்ஞானப் பிரிவில் விரிவுரையாளராகக் கடமை புரிகிறார் நிர்மால். மக்கள் விடுதலை முன்னணி (JVP), ஜாதிகச் சிந்தனை ஆகியவற்றின் இனவாதங்களுக்கு எதிராகப் போராடி வந்த சுதந்திர மாணவர் அமைப்பின் முன்னோடிகளில் ஒருவரான நிர்மால், சமூக விஞ்ஞானிகள் சங்கம் வெளியிடும் பிரவாத எனும் சிங்களச் சஞ்சிகையின் ஆசிரியர்களிலும் ஒருவர்.

***இந்த யுத்தம் அரசின் மீது திணிக்கப்பட்ட ஒன்று என்றும், தவிர்க்க முடியாத ஒரு யுத்தம் என்றும் ஒரு தற்காப்பு யுத்தம் அவசியமானது என்றும் பலவகையான நியாயப்படுத்தல்கள் சிங்கள மாற்றுப் பத்திரிகைகள் உள்ளிட்ட பல தரப்புகளிலிருந்தும் வெளியாகியுள்ளதைப் பற்றி உங்களுடைய அவதானம் என்ன?***

யுத்தமும், சமாதானமும் எனக் கூறுவது அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்ள ஒன்றிற்கொன்று முரணான இரண்டு வழிமுறைகளாகும். சில குறிப்பான நிலைமைகளின் கீழ் இனக் குழுவொன்றின் மீது யுத்தமொன்று புகுந்த நிலைமைகளின் கீழ் யுத்தத்திற்கு முகங்கொடுப்பதைத் தவிர வேறு வழி இல்லாது போகலாம். ஆனால் இந்த யுத்தம் அவ்வாறானதொன்றல்ல. விசேடமாக இலங்கை அரசின் பக்கத்தில் இத்தகைய நியாயம் எதுவுமில்லை. எனவே இது ஒரு தற்காப்பு யுத்தம் எனக் கூறுவது நடைமுறையில் பிழையானது. யுத்தத்தின் வளர்ச்சிமுறைகளைப் பார்க்கிற போது இந்த யுத்தம் தாக்குதல் யுத்தம் என்பதாக மேலோங்கிச் செல்வது நிச்சயமானதாகும். இப்போது நடைபெற்றுள்ளதும் அதுவேதான்.

***யாழ்ப்பாணம் மீதான யுத்தத்திற்கெதிராக இம்முறை தென்னிலங்கையில் இருந்து ஒரு கண்டனக் குரல்தானும் எழவில்லையே ஏன்?***

எதுவித குரலுமே எழவில்லை எனக் கூறமுடியாது. ஆனாலும் எழுந்த குரல்களும் சமூகத்தில் அவ்வளவு தூரம் பலமானதாக இல்லை. கடந்த காலத்தில் சமாதானச் செயல்முறைகளிற்காகச் செயற்பட்ட பிரிவினர் கூட இச் சந்தர்ப்பத்தில் ஒருவித சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோல்வியுறச் செய்ய யுத்த வழிமுறைகள் அவசியமென நினைக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோல்வியுறச் செய்வதற்காகத் தமிழ்ச் சமூகத்தின் உள்ளேயே ஜனநாயகச் செயன்முறைகளை ஏற்படுத்துவது அவசியமாகும் என நான் கருதுகிறேன். அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமானால் சிங்கள சமூகத்தில் சமாதானம் விரும்பும் பிரிவினர் மத்தியில் ஏற்பட்டுள்ள சிக்கலைக் குறைக்க அதுவும் முக்கியமாக பங்களிப்பை வழங்கலாம்.

***வெள்ளைத் தாமரை இயக்கம் யுத்தத்தால் பாதிப்புறும் மக்களுக்கு உதவவே உருவாக்கப்பட்டது என்று கூறப்படுவதைப் பற்றி....***

இன்றைய யுத்தத்தின் கருத்தியல் முன்னணிதான் வெள்ளைத் தாமரை இயக்கம் என்று கருதுகிறேன். யுத்தம் வளர்ச்சியடைகிறபோது தென்பகுதியில் சிங்கள இனவாத சக்திகளின் அரசியல் பலத்தையும் அது அதிகரித்துச் செல்கிறது. அது அரசாங்கத்திற்கு நஷ்டமானதாகும். அதனால் யுத்தத்தின் கருத்தியல் முன்னணியான வெள்ளைத் தாமரை இயக்கம் சிங்கள இனவாத சக்திகளுக்கு உடல் கொடுத்து அதனை பொ.ஐ.மு அரசாங்கத்தின் அரசியல் தலைமையின் கீழ் வைத்திருப்பதைத் தான் குறிக்கோளாக வைத்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

**நேர்காணல்: சி.செல்வன்**

***பேசாப் பொருளைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிற போது வார்த்தைகளும் பிரச்சிலைக்குரிய பொருளாகி விடுகின்றன. புதிய வார்த்தைகள் தேவைப்படுகின்றன. Homosexuality, Sexism Gays and Lesbians, Hetero sexism போன்ற விஷயங்கள் தென்னாசியக் கலாசாரத்துக்குப் புதியவை அல்ல என்றாலும் பேசாப் பொருள் தான்.***

***தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்திருந்தாலும் கனடாவில் றொறன்ரோ நகரில் வாழ்ந்து வருகிற பெண் நிலைவாதி/இனவாத எதிர்ப்புப் போராளி லீலா ஆச்சார்யா உடனான நேர் காணல் தொடர்பாக இந்த வார்த்தைச் சிக்கல்கள் எழுந்தன.***

***பாலுறவுகள் (Sexual relaonships), ஒரு பால் உறவுகாரர் (Homosexuals), ஒத்த பாலியல்பு (Homosexuality), பால்வாதம் (Sexism), பாலியல்பு (Sexuality) ஆகிய சொற்களை நாங்கள் பயன்படுத்துகிறோம்.***

***லீலா ஆச்சார்யா கனடாவின் தென்னாசியப் பெண்கள் அமைப்புக்கள் பலவற்றில் நீண்ட காலம் பணியாற்றியவர். திவா (DIVA) எனும் பெண்ணியச் சஞ்சிகையின் கூட்டாசிரியர்களில் ஒருவர். இனவெறி, நிறவெறி எதிர்ப்பு இயக்கங்களில் தீவிரமாகப் பங்கெடுத்து வருபவர் அவருடனா சிறப்பு நேர் காணலை இங்கு வெளியிடுகிறோம்.***

***பாலியல்பு, பாலுறவு போன்றவை குறித்தும் பால் வாதம் (Sexism), இனவாதம் (Racism), ஆகியவற்றுக்கிடையேயான உள்ளார்ந்த தொடர்புகள் குறித்தும் புதிய பார்வைகளும், புதிய சமூக ஆய்வுகளும் கடந்த பல வருடங்களாக வெளியாகியுள்ளன. இவற்றின் அரசியல் முக்கியத்துவம் உலகின் பல பாகங்களிலும் இன்று உணரப்பட்டு வருகிறது.***
***இந்தப் பின்னணியில் லீலா ஆச்சார்யாவின் நேர்முகம் முக்கியத்துவம் பெறுகிறது. பாலியல்பு, பாலுறவுகள், குடும்ப உறவுகள் பற்றியும் இவையனைத்தூடாகவும், தொழிற்படும் அதிகாரம் (power) பற்றிய கருத்துக்கள் தொடர்பாகவும் தமிழில் பேசப்படவேண்டிய அவசியத்தையும் இந்த நேர்முகம் தெளிவாக்குகிறது.***
***(ஆ-ர்)***

***ஒரு பால் உறவு (Lesbian and gay Relationships) என்பது இயற்கைக்கு மாறானது. விலங்குகளுக்கிடையில் இத்தகைய உறவுகள் காணப்படுவதில்லை என்பதால் மனிதரிடையேயும் இத்தகைய உறவுகள் இயற்கைக்கு மாறானவையாகவே கருதப்பட வேண்டும். ஒருபால் உறவுகள் மனித மூலப் பெருக்கத்துக்கும் மனித குலத்தின் உயிரியல் தொடர்ச்சிக்கும் வழிவகுக்காது என்பதால் இவை சமூகத்துக்கு எதிரானவை மட்டுமல்ல மனிதர்களின் முடிவையே குறிக்கும் என்று சொல்லப்படுவதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?***

மிகவும் அடிப்படையான ஒரு தளத்தில் மனிதர்கள் விலங்குகளைப் போல என்பது சரிதான். விலங்குகளைப் போலவே சில அடிப்படையான உள்ளுணர்வுத் தூண்டல்கள் எமக்கும் உள்ளன. உதாரணமாக அபாயத்தை உணர்ந்து கொள்வது. இது போலவே உணவு, நீர், இருப்பிடம் போன்றவை தொடர்பாகவும் விலங்குகளைப் போலவே எமக்கும் அடிப்படையான தேவைகள் உள்ளன. எனினும் இவ்வ எமக்கும் விலங்குகளுக்குமிடையேயான பொதுவான சில ஒத்த இயல்புகள் மட்டுமே. மனிதர்களின் திறனும் ஆற்றலும் எவ்வளவோ அதிகமானவை. புத்திபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும், ஆத்மபூர்வமாகவும் மனிதர்களுடைய கொள்ளளவு விலங்குகளை விட எவ்வளவோ மேலானது. மனிதர்களுடைய மூளையின் அமைப்பும் அவர்களை மேலும் சிக்கலானவர்களாக ஆக்குகிறது. விஷயங்களைப் பகுத்தாய்வு செய்ய எங்களால் முடிகிறது. பல தரப்பட்டதும் பல தளப்பட்டதுமான அனுபவங்களையும் உணர்வுகளையும் மற்றைய மனிதர்கள் தொடர்பாக நாம் பேணமுடிகிறது. எனவே மனிதர்கள் மிகவும் இலகுவான விலங்கியல் உள்ளுணர்வுத் தூண்டல்களுக்கும் நடத்தைகளுக்கும் அப்பாலானவர்கள் என்பது தெளிவு.

ஒருபால் உறவுகள் என்பன மிகவும் இயற்கையானவையே. இத்தகைய உறவுகள் இயற்கைக்கு மாறானவை என்னும் வாதம் பிற்போக்காளர்களாலும் வலதுசாரித் தீவிரவாதத்தாலும் திருச்சபையினராலும் வழமையாக முன்வைக்கப்படும் ஒன்று. குழந்தைகளைப் பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளும் பெண்கள் தொடர்பாகவும் திருச்சபையும் அரசும் இது ''இயற்கைக்குமாறானது'' எனும் வாதத்தை முன்வைக்கின்றனர்.

இந்த வாதத்தின் அடிநாதம் என்னவென்றால் பெண்களுக்கு அவர்களுடைய வாழ்வின் ஒரேயொரு குறிக்கோள் குழந்தைகளைப் பெறுவதுதான் என்பதாகும். உண்மையில் குழந்தைகளைப் பெறுவது என்பது பெண்களுடைய உயிரியல் உரிமையாகும். இந்த உரிமைக்கு எப்போது அர்த்தம் ஏற்படுகின்றதென்றால் குழந்தைகள் பெறுவதைத் தீர்மானிப்பது நாங்களாக இருக்கும் போது மட்டுமே. ஆனால் பிரச்சினை என்னவெனில் தென்னாசியாவின் வறுமைப்பட்ட லட்சக் கணக்கான பெண்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு இது தொடர்பாக முடிவு எடுக்கும் எவ்வித அதிகாரமும் இல்லை என்பதே. எங்களுடைய கலாசாரத்தில் உடலுறவும் குழந்தைகள் பெறுவதும் ஒன்றாகவே அணுகப்பட்டு வந்துள்ளது. பெண்கள் என்று வந்து விட்டால் இனப்பெருக்கத்திற்கான உறவையும் இன்பநாட்டத்திற்கு மட்டுமேயான உடலுறவையும் அவர்கள் பிரித்துப் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலையே இருக்கிறது. ஆனால் ஆண்களைப் பொறுத்தவரை நிலைமை அப்படியல்ல. குழந்தைகளைப் பெறுவதும் சுமப்பதும் பெண்களுடைய 'கடமை'களுள் ஒன்று என்பதும் குழந்தை இல்லாதவள் மலடி என்று பரிந்துரைக்கப்படுவதும் எமது சமூகத்து யதார்த்தம். பெண்களின் தன்னாதிக்கம் என்பதோ அல்லது அவர்களுக்கான எவ்வகையான சுயநிர்ணயமோ அச்சந்தரும் ஒன்றாகவே அரசு, திருச்சபை மற்றும் பாரம்பரியமான ஆணாதிக்க சமூக குடும்ப அமைப்புக்களால் பார்க்கப்படுகிறது.

ஆணாதிக்கச் சமூக அமைப்புக்களும் நிறுவனங்களும் காலங்காலமாகவே பெண்களின் உழைப்புச் சக்தியையும் பாலியல்பையும் கருவளத்தையும் கட்டுப்படுத்தி வந்துள்ளன.

ஒருபால் உறவுகள் எமது சமூகத்தையோ அல்லது மனித குலத்தொடர்ச்சியையோ அழிக்கப்போவதில்லை. ஒருபால் உறவினராகிய நாம் காலங்காலமாகப் பெற்றோர்களாகவும் குழந்தைகளைப் பேணுபவர்களாகவும் இருந்து வந்திருக்கிறோம்; இருந்து வருகின்றோம். மற்றைய எல்லாச் சமூக அங்கத்தவர்களைப் போலவே நாமும் ஆக்கபூர்வமான படைப்பாற்றல் மிக்க அங்கத்தவர்கள்.

***ஒருபால் உறவுகள் எங்களுடைய கலாசாரத்துக்கு அந்நியமானவை. மேலும் இவை மேலைத்தேசத்துப் பழக்கவழக்கங்கள் என்பதால் எமது கலாசாரத்தை அழித்துவிடும். தென்னாசியக்கலாசார மரபிலும் கலை இலக்கியங்களிலும் ஒரு பால் உறவு பற்றிய உதாரணங்கள் உள்ளன என்று சொல்ல முடியுமா?***

ஒருபால் உறவுகள் எமது கலாசாரத்திற்குப் புறம்பானவை என்னும் வாதமும் ஒருபால் உறவுகள் மேலைத்தேச வழக்கங்கள் எனும் வாதமும் ஏற்கெனவே பெண்ணிலைவாதம் தொடர்பாகவும் முன் வைக்கப்பட்டவைதான். தென்னாசியாவில் இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்து பணிபுரிந்த பெண்கள் தமது ஆண்தோழர்களின் பால்வாதத்தை விமர்சிக்க ஆரம்பித்ததும் இதேவகையான வாதங்களே முன்வைக்கப்பட்டன. பெண் நிலைவாதம் ஒரு மேலைத்தேச இறக்குமதி என்றும் தென்னாசியக் கலாசாரத்துக்கு அது அந்நியமானது என்றும் அந்த ஆண்கள் வாதிட்டனர். பெண்நிலை வாதத்துக்கு பூர்ஷ்வா என்ற முத்திரை வேறு குத்தப்பட்டது.

உங்களுடைய முதலாவது கேள்விக்குப் பதிளித்தது போலவே இந்தக் கேள்விற்கும் பதில் தர வேண்டியிருக்கிறது. பெண்களது தன்னாதிக்கம் அல்லது சுயநிர்ணயம் தொடர்பாக உறுதியாக இருக்கும் பெண்கள் எப்போதுமே பிற்போக்களர்களாலும் பெண்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த விரும்புபவர்களாலும் பெண்களின் சுயநிர்ணயம் என்றாலே அச்சமூட்டப்பெறும் ஆண்களாலும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்துள்ளனர். சமுதாயத்தில் இவர்களுடைய விமர்சனங்கள் எப்போதுமே அந்நியமானவை அல்லது மேலைத்தேய வழக்கம்அல்லது பூர் ஷ்வா என்பதுபோவே இருந்துவந்துள்ளன. இந்த விமர்சனங்களில் உண்மை இல்லை.

ஒரு பெண் என்ற முறையிலும் மற்றும் பெண்நிலைவாதி, ஒருபால் உறவில் ஈடுபட்டிருப்பவள் என்ற முறையிலும் தென்னாசியக் கலாசாரத்தின் பல அம்சங்கள் என்னை ஒடுக்குவதாகவே நான் உணர்கிறேன். எனினும் நான் முற்றாகவே தென்னாசியக் கலாசாரத்தை ஒதுக்கி விடுகிறேன் என்பது அல்ல இதன் அர்த்தம். எனது கலாசாரத்திலிருந்து முக்கியமாதும் ஆதர்ஷம் மிக்கதுமான விஷயங்களை நான் எடுத்துக் கொள்கிறேன். ஒடுக்கு முறை அம்சங்களை மாற்ற என்னாலியன்ற வரை தீவிரமாக முயல்கின்றேன்.

ஏகாதிபத்தியம், கொலனித்துவம் போன்றவற்றாலேயே அழிக்கப்பட முடியாமல் போன தென்னாசியக் கலாசாரத்தைப் பெண்நிலைவாதிகள், ஒருபால் உறவுக்காரர்கள் அழித்து விடப்போவதில்லை. அவர்கள் மிகவும் நியாயமான விமர்சனங்களையே முன்வைக்கிறார்கள். எங்களுடைய கலாசாரத்தின் பன்முகத்தன்மையையும் செழுமையையும் உண்மையிலேயே சிதைப்பவர்கள் மத அடிப்படைவாதிகளும் அவர்களைப் போன்ற ஏனைய பிற்போக்குவாதிகளுமேயாவர். இவர்கள் தான் கலாசாரத்தின் பெயரால் வெறுப்பையும் இனவாதத்தையும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் வளர்த்து விடுபவர்கள்.

**ஒருபால் உறவுகள் என்பன மிகவும் இயற்கையானவையே. இத்தகைய உறவுகள் இயற்கைக்கு மாறானவை என்னும் வாதம் பிற்போக்காளர்களாலும் வலதுசாரித் தீவிரவாதத்தாலும் திருச்சபையினராலும் வழமையாக முன்வைக்கப்படும் ஒன்று. குழந்தைகளைப் பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளும் பெண்கள் தொடர்பாகவும் திருச்சபையும் அரசும் இது ''இயற்கைக்குமாறானது'' எனும் வாதத்தை முன்வைக்கின்றனர்.**


எங்களுடை கலாசாரத்தில் பாலியல் என்பது எப்பொழுதுமே வெளி வெளியாகப் பேசப்படாத ஒரு பொருளாகவே இருந்து வந்துள்ளது. எங்களுடைய உடம்பு பற்றிய விஷயங்களும் கூட அப்படித்தான்.
உடம்பு, பாலியல், பாலியல்பு தொடர்பான இத்தகைய மௌனமும் மறுப்பும் நிலவுகிற சூழ்நிலையில் ஆண்-பெண் உறவு தொடர்பாகக் கூட திட்டவட்டமான உதாரணங்கள் பெற்றுக் கொள்வது அரிது!
உதாரணத்துக்குத் தமிழ், ஹிந்திப்படங்களைப் பாருங்கள். ஆணும் பெண்ணும் முத்தமிடும் காட்சிகளே இடம்பெற மாட்டா. அப்படி இடம் பெற்றாலும் அது பண்பற்ற ஒன்றாகவே கருதப்படும்.
எப்படியோ ஆண்-பெண் உறவு என்பது இயற்கையானதாகக் கருதப்படுகிறது. தென்னாசியாவில் ஒருபால் உறவுக்கும் ஒரு வரலாறிருக்கிறது. எனினும் இந்த வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. ஆணாதிக்க ஆண்-பெண் உறவுமுறையை மட்டுமே ஆட்சி பெற்ற இயல்பாகக் கொண்டிருக்கும் வரலாறு இந்த மறைப்பிற்குக் காரணமாகும். காமசூத்ராவையே நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் புராதனத் தென்னிந்தியக் கோவில் சிற்ப வேலைப்பாடுகளில் ஒருபால் உறவு இடம் பெறுவதை நாம் பார்க்கிறோம். எனினும் கால ஓட்டத்தில் இந்தச்சிற்ப வேலைப்பாடுகள் அழிக்கப்பட்டு ஒரு முற்றுமுழுதான ஆண்-பெண் உறவுச் சிற்பங்களால் பிரதியீடு செய்யப்பட்டன. யோனி வழிபாடும் பரவலாக இருந்ததெனினும் லிங்கவழிபாடும் லிங்கம் குறித்த விளக்கமுமே பின்னர் மேலோங்கலாயிற்று. இலக்கியம், கலைகள் போன்றவற்றில் ஒருபால் உறவுக்கான ஆதாரங்களைத் தேடுவது எதிர் நீச்சல் பேடுவது மாதிரி. ஏனெனில் வரலாற்றில் இவை புதைக்கப்பட்டோ மறைக்கப்பட்டோ அன்றி ஒதுக்கப்பட்டோதான் காணப்படுகின்றது. இந்தியாவிலுள்ள ஒருபால் உறவுப் பெண் ஒருவர் இந்தத்துறையில் ஆய்வில் ஈடுபட்டுள்ளார். வேதங்களில் காணப்படும் ஒருபால் உறவுமுறை பற்றிய குறிப்புக்கள் மற்றும் இனப்பெருக்கத்துக்காக அல்லாத பாலியல் போன்ற அம்சங்கள் குறித்து இவர் ஆய்வு செய்து வருகிறார். குறிப்பாக **ஜாமி** பாரம்பரியத்தில் வரும் தேவாம்சம் மிக்க ஒருபால் உறவுத் தம்பதிகள் பற்றி அவர் ஆய்வு செய்து வருகிறார்.

வேதங்களிலும் அவற்றுக்குப் பின்னர் எழுந்த நூல்களிலும் சாக்த மற்றும் தாந்திரீக விக்கிரக இயலிலும் (Iconography) இடம் பெறும் ஒருபால் இணை கொண்ட கடவுளரது சித்திரிப்பு ஒருபால் உறவில் இருக்கக்கூடிய ஆத்மிகப் பரிமாணத்தையும் ஒருபால் உறவில் எழும் மோகத்தின் பலமான அம்சங்களையும் காட்டுகிறது என்று அவர் வாதிடுகிறார்.

***ஒருபால் உறவுகள் ஆணாதிக்கத்துக்குச் சவாலாக விளங்குகின்றனவா?***

ஆணாதிக்கம் என்பது அரூபமானதும் எப்போதுமே ஒரே இயல்பைக் கொண்டதுமான ஒன்றல்ல என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பெண்களின் உழைப்புச்சக்தி, பாலியல்பு, கருவளம் என்பவற்றின் மீதான ஆண்களின் ஆதிக்கமே ஆணாதிக்கம் என்று இலகுவில் நாங்கள் விளங்கப்படுத்தலாம். பெண் ஒருபால் உறவுகள் நிச்சயமாகவே ஆணாதிக்கத்துக்குச் சவாலாக விளங்குகின்றன. ஏனெனில் அவை பெண்களுக்கான தன்னாதிக்கத்தையும் சுயநிர்ணயத்தையும் வாழ்க்கையின் எல்லாத் தளங்களிலும் எல்லா அம்சங்களிலும் வலியுறுத்துகின்றன.

இதே வகையில் தான் ஆண் ஒரு பால் உறவுகளும் ஆணாதிக்கத்துக்குச் சவாலாக விளங்குகின்றனவா என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை. எனினும் ஆண் ஒரு பால் உறவுக்காரரின் இயல்புகள் பெண்மை சார்ந்தவையாகவும் அவர்களால் வெளிப்படுத்தப்படுகிறது. உதாரணமாக சில ஒரு பாலுறவு ஆண்கள் வாழ்க்கையில் உணர்ச்சி பூர்வமான இயல்புகளுக்கு (emotional) அதிக அழுத்தங் கொடுக்கிறார்கள். இது ஆணாதிக்கத்துக்கு எதிரானது தான்.




***ஒருபால் உறவுகளுக்கும் பெண்நிலை வாதத்துக்கும் இடையேயான தொடர்பு என்ன?***
ஒருபால் உறவுப்பெண் என்ற வகையில் நாங்கள் ஆணாதிக்கம், பால்வாதம், இருபால் உறவு வாதம் (Heterosexism) போன்றவை தொடர்பாக ஒருமித்த அனுபவங்களைக் கொண்டிருக்கிறோம். எனவே பெண்களின் தன்னாதிக்கம் சுயநிர்ணயம் குறித்து ஒரு இணைவு எல்லாப் பெண்களுக்குமே உள்ளது. ''ஆண்மை'' "Macho" போன்றவற்றை கேள்விக்குள்ளாக்குவதால் ஒரு பால் உறவுகள் பெண் நிலைவாதத்துடன் தொடர்பு படுவதோடு அதற்கு ஆதரவானவர்களாகவும் இருக்கிறார்கள். ஆண் ஒருபால் உறவுகாரர் உண்மையான ஆண்களாகக் கணிக்கப்படுவதில்லை. இதன் காரணம் அவர்களுடைய பெண்மை. மேலும் அவர்கள் பகிரங்கமாகவே ஆணாதிக்கத்தையும் இருபால் உறவுவாதத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறார்கள். எல்லா வகையான ஒடுக்கப்பட்ட மக்களுமே தமக்கிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதுதான் எம்முடைய அரசியல் இலட்சியங்களை வென்றெடுப்பதற்கான திறமையான வழி முறையாகும்.
***கனடாவில் இடதுசாரி அரசியலில் ஈடுபட்டுள்ள நமது ஆண்களுக்கு இவ் விஷயங்கள் ஏன் பிரச்சினைகளாகத் தெரியவில்லை?***
நீங்கள் அவர்களைத்தான் கேட்க வேண்டும். இங்குள்ள நமது இடதுசாரி ஆண்கள் தமக்குள்ளே இருக்கும் பால்வா தத்தை ஏற்றுக் கொள்வதிலேயே பிரச்சினைப்படுபவர்கள். சோஷலிஸப் பெண் நிலைவாதம் சோஷலிஸத்தை எவ்வாறு உருமாற்றியுள்ளது என்பதைக் கூட அவர்கள் கற்றறியவில்லை. ஏராளமான முற்போக்கு இடதுசாரி ஆண்கள் உள்ளனர்தான். இவர்களை

நான் பரோப
(Benevolet patri
விரும்புகிறே
வுள்ளவர்கள
கவும் இவர்க
கள் என்று வ
களாகவும்
தான் இவர்கள

மார்க்ஸின் வ
துதான். எனி
போன்றவை
டம் காணப்
மார்ஸியம் ப
களை முன்
பெண்நிலை
பெண் ஒருபா
பிடத்தக்கதாகு

சோஷலிஸப்
பெண்களின்
வீட்டு உழைப்
சார்ந்தன எ
வலியுறுத்திய
பாலியல்பு, வ
ஒன்றிற்கு
டுத்தாது இ
சேரப்பார்த்து
லையும் முன்

எனவே இங்
பணிபுரியும்
விஷயங்களை
அது அவர்க
யையும் மூடு
குறிக்கிறது.
யதார்த்தங்கள்
வருவதை இ
வைதிகத்தனமே




# இயற்கைக்கு மாறானதல்ல

– லீலா ஆச்சார்யா

ாதிக்கவாதிகள் அழைப்பதையே ில் புரிந்துணர் வு மிக்கவர்களா போதிலும் பெண் முழு பால்வாதி வாதிகளாகவும் ர்கள்.

வு உன்னதமான ாலியல்பு, இனம் புகள் மார்க்ஸி . உண்மையில் ான விமர்சனங் ள் சோஷலிசப் இவர்களுட் பலர் ர் என்பது குறிப்

வாதிகள் தான் ருக்க உழைப்பு, வயும் உற்பத்தி ழதன் முதலில் பும் பால், இனம், ற அம்சங்களை ற முக்கியப்ப தையும் ஒருங்கு சியும் அரசிய ் இவர்களே.

ரி அரசியலில் ண்கள் இந்த ருகிய பார்வை மையும் தான் ழ இருக்கும் வேசமாக மாறி ளாதிருப்பது

**ஒரு பெண் என்ற முறையிலும் மற்றும் பெண்நிலைவாதி, ஒருபால் உறவில் ஈடுபட்டிருப்பவள் என்ற முறையிலும் தென்னாசியக் கலாசாரத்தின் பல அம்சங்கள் என்னை ஒடுக்குவதாகவே நான் உணர்கிறேன். எனினும் நான் முற்றாகவே தென்னாசியக் கலாசாரத்தை ஒதுக்கி விடுகிறேன் என்பது அல்ல இதன் அர்த்தம். எனது கலாசாரத்திலிருந்து முக்கியமானதும் ஆதர்ஷம் மிக்கதுமான விஷயங்களை நான் எடுத்துக் கொள்கிறேன். ஒடுக்கு முறை அம்சங்களை மாற்ற என்னாலியன்றவரை தீவிரமாக முயல்கிறேன்.**

***எங்களுடைய சமுதாயத்தைப் பொறுத்த வரை ஒருபால் உறவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. வறுமை, இனவாதம், அகதிகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறை போன்றனவே எமக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள். எங்கள் சமூகத்திற்கு ஒரு பால் உறவுகள் முக்கியத்துவமற்றறவையாக இருப்பதற்கு என்ன காரணம்?***

ஏன் உங்களுக்கு இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகப்படவில்லை? நான் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவள் என்றபடியால் வறுமை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல என்று நான் சொல்ல முடியுமா? நீங்கள் குறிப்பிடும் பிரச்சினைகள் முக்கியமானவைதான். ஒருபால் உறவுச் சமூகத்திலும் எமது சகோதரர்கள் சகோதரிகள் மத்தியிலும் இருக்கும் ஒருபால் உறவு வெறுப்பு (Homo phobia) காரணமாக எங்களைப் போன்ற ஒருபால் உறவுக்காரர் பகிரங்கமாக எமது அடையாளங்களை வெளிப்படுத்துவதற்குத் தயங்குகிறார்கள். வரலாற்று ரீதியாக ஒருபால் உறவுக்காரர்கள் மேற்சொன்ன பிரச்சினைகளைத் தீர்க்க உழைத்து வந்திருக்கிறார்கள். எனினும் தங்களுடைய பாலியல்பு பற்றி அவர்கள் மௌனமாகவே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். இந்த நிலை இப்போது மாறி வருகிறது. ஒருபால் உறவு பிரச்சினையாக எழ முடியாது. ஏனெனில் அப்படி ஒன்று இல்லை என்று சொல்வதே பெருவழக்காக இருக்கிற நிலைமையும் நிலவுகிறது. நீங்கள் என்னைக் கேட்கும் கேள்விகளையே எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றிலேயே இத்தகைய நிலைமையை மறுக்கிற ஒரு தொனிதானே உள்ளது!

***ஒருபால் உறவுகாரருக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்தான். எனினும் அது எங்களுடைய பிரச்சினையல்ல என்று எமது சமூகத்தைச் சேர்ந்த சிலர் கருதுகிறார்களே?***

ஒடுக்குமுறையைப் பற்றிப் புரிந்து கொள்ளும் ஒரு உணர் நிலை ஒருவருக்கு இருக்கும் என்றால் பால், வர்க்கம், இனம் போன்ற பலதரப்பட்ட அம்சங்களூடாகவும் வரும் பலதரப்பட்ட ஒடுக்குமுறைகளையும் அவற்றுக்கிடையான ஊடாட்டங்களையும் இவ்வொடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களைப் பற்றியும் புரிந்து கொள்ள வேண்டிய பொறுப்புணர்வு அவருக்கு இருக்க வேண்டும். எமது அரசியல் வேலைகள் மேலும் திறன் வாய்ந்ததாக இருக்கவேண்டுமானால் இயலுமானவரை அதிகளவு மக்களை பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பல்வேறுபட்ட போராட்டங்களிடையேயான இணைப்புக்களை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அப்படியான சூழலில் தான் மற்றைய இயக்கங்களுடன் பணிபுரிய முடியும். உதிரிக்குழுக்களாகச் சிறு சிறு பிரச்சினைகளையே மையப்படுத்தி வேலை செய்வதை விட இது பிரயோசனமானது.

வர்க்கப் பிரிவினை என்ற யதார்த்தம் உண்மைதான் எனினும் அது எனக்கு ஒரு பெரிய பிரச்சினை இல்லை என்று ஒருவர் சொல்வது பயன் மிக்க ஒரு அரசியல் தந்திரோபாயம் அல்ல. தீவிர மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் அது உதவப் போவதில்லை.

***தன்னுடைய நண்பன் ஒருவனுடனான உறவைப் பற்றிக் குறிப்பிடும் போது தானும் தனது நண்பனும் மிக நெருக்கமானவர்கள் என்றாலும் அவனுடன் ஒன்றாகப் படுத்தெழும்ப முடியாது என்று ஒரு தமிழ் ஆண் சொன்னார். இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?***

அப்படி என்றால் இவர்கள் உணர்ச்சிபூர்வமாக நெருக்கமானவர்கள். ஆனால் பாலியல் ரீதியாக அல்ல என்று தெரிகிறது. உண்மை என்னவென்றால் பாலியல் ரீதியாகவும் ஒருவரோடு ஒருவர் நெருக்கமான ஆண்கள் உள்ளனர் என்பதே. இதனை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களோ இல்லையோ இது உண்மை. ஒரு பால் உறவு வெறுப்பு (Homophobia) என்பது ஒருபால் உறவு பற்றிய பயமும் மறுப்புமே ஆகும். இது உள்ளார்ந்தும் இருக்கலாம் வெளிப்படையாகவும் இருக்கலாம். தனது நண்பனுடன் மிகவும் நெருக்கம் ஆனால் படுத்தெழும்பமாட்டேன் என்று சொல்வதும் ஒருவகை உள்வாங்கிய ஒருபால் உறவு வெறுப்பே ஆகும். இது உள்வாங்கிய/ உள்ளார்ந்த இனவாதம் போன்றது தான்.

***உறவுகளை வரையறை செய்வதில் இங்கே ஐயப்பாடுகள் எழுகின்றன. ஆண்/பெண் ஒருபால் உறவுகள் பாலியல்ரீதியானதாகவும் இருக்கும் போது மட்டுமே அவை உறவுகள் (Relation ships) என்று வழங்கப்படுகின்றன என்ற அபிப்பிராயம் நிலவுகிறதே?***

அப்படியென்றால் ஆண் - பெண் உறவுகளைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்? அவர்கள் மட்டும் பாலியல் உறவுகளை வைத்திருக்கத் தேவையில்லையா? ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படக் கூடிய பாலியல் உறவுசாராத நெருக்கம் உறவு என்று அழைக்கப்பட முடியுமானால் ஏன் ஆணுக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படக் கூடிய பாலியல் உறவு சாராத நெருக்கம் உறவு என்று அழைக்க்ப்பட முடியாது? இது மிகவும் சுவாரசியமானது. ஒருபால் உறவுகள் பற்றிய மாயைகள் வகைமாதிரிகள் என்பவற்றை மக்கள் நம்பிவிடுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒருபால் உறவுகாரர் என்றாலே எப்போதும் காதல் புரிபவர்கள் என்பது உண்மை அல்ல. பாலியல் உறவு இல்லாமலே ஒரு பெண்ணுடன் எனக்க உறவை வைத்திருக்க முடியும். உணர்ச்சிபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் மிகவும்நெருக்கமான உறவாக அது இருக்கலாம். கட்டாயமாகப் பாலியல் உறவாக அது இருக்க வேண்டியதில்லை. இப்படி இருப்பது எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் உறவு இல்லை என்பதையோ நான் ஒரு ஒருபால் உறவுக்காரர் அல்ல என்பதையோ குறிக்க வேண்டிய கட்டாயமில்லை. எனவே நீங்கள் குறிப்பிடுகிற அபிப்பிராயம் என்பது ஒரு வெறும் வகைமாதிரி (Stereo type) தான்.

***மேலைநாட்டு உல்லாசப் பிரயாணிகளால் ஊக்குவிக்கப்பட்டு வருகிற சிறுவர் ஆபாசப்படத்துறை (child pornography) யும் தீவிரவாத இயக்கங்களுக்குள் இடம்பெற்றுவந்த ஒருபால் உறவுப் பலாத்காரங்களும் இலங்கையின் அனுபவங்களாக உள்ளன. இத்தகைய சூழலில் ஒருபால் உறவுக்காரர் சிறுவர்களைத் தகாத உறவுகளுக்கு உட்படுத்து பவர்களாகவும் பலாத்காரம் புரிபவர்களாகவும் நோக்கப்படுகிறார்கள். இது பற்றி?***

இந்தக் கண்ணோட்டமும் பழையபடி மாயைகளிலும் வகைமாதிரிகளிலுமே தங்கியிருக்கிறது. சிறுவர்கள்மேலான பலாத்காரமும் பெண்நிலைவாதிகளைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமான விஷயங்கள்.

**ஆணாதிக்கச் சமூக அமைப்புக்களும் நிறுவனங்களும் காலங்காலமாகவே பெண்களின் உழைப்புச் சக்தியையும் பாலியல்பையும் கருவளத்தையும் கட்டுப்படுத்தி வந்துள்ளன.**

**ஒருபால் உறவுகள் சமூகத்தையோ அல்லது மனிதகுல தொடர்ச்சியையோ அழிக்கப் போவதில்லை. ஒருபால் உறவினராகிய நாம் காலங்காலமாகப் பெற்றோர்களாகவும் குழந்தைகளைப் பேணுபவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றோம்: இருந்து வருகின்றோம். மற்றைய எல்லாச் சமூக அங்கத்தவர்களைப் போலவே நாமும் ஆக்கபூர்வமான படைப்பாற்றல் மிக்க அங்கத்தவர்கள்.**

சிறுமிகள் மீதான பாலியல் வன்முறையை நான் ஆணாதிக்க வன்முறையின் (Patnarchal violence) பகைப்புலத்திலேயே பார்க்கிறேன். இங்கு பாதிக்கப்பட்டவருக்கும் பாதிப்பையேற்படுத்தியவருக்கும் இடையே அதிகாரச் சமநிலை நிலவுவதில்லை. பரஸ்பர இணக்கமும் இருப்பதில்லை. திருமணத்துள்ளேயே காணப்படும் பலாத்காரம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தம்மைப் பாலியல் ரீதியாகத் திருப்திப்படுத்துவது மனைவிமாரின் கடமை என்றே பெரும்பாலான ஆண்கள் கருதுவதால் மனைவிமாரின் சம்மதமின்றியே தம்மை அவர்கள் மீது திணிக்கவும் செய்கிறார்கள். எனினும் இவ்வகையான பலாத்காரம் ஒருபோதுமே பாலியல் பலாத்காரம் என்று கொள்ளப்பட்டதில்லை. மாறாக மனைவியின் கடமை என்பது கணவன் நினைக்கிற போதெல்லாம் உடலுறவு கொள்வது என்பதே நிலைத்து விட்டது. இது ஒரு மாயையாகும். பாலியல் உறவில் ஈடுபடுவதற்கு முன்பாகப் பரஸ்பர இணக்கம் இருக்க வேண்டுமென்பது கட்டாயமாகும். சிறுவர் மீதான காமம் (Paeodophila) தொடர்பாகப் பெண் நிலைவாதிகளும் ஒருபால் உறவுக்காரரும் தீவிரமாகவே விமர்சித்து வந்திருக்கிறார்கள். சர்வதேச ஒருபால் உறவுகாரர் சங்கத்திலிருந்து நம்ப்லா (NAMBLA - NORTH AMERICAN MAN-BOY LORE ASSOIATION) உறுப்பினர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டமையை நான் இங்கு குறிப்பிடவேண்டும்.

சிறுவர் மீதான காமம் எப்போதுமே இருந துவந்துள்ளது. இதனை ஒருபால் உறவுகளோடு இணைப்பது இன்னொரு வகை மாதிரிக்குள் விழுவதாகும்.

***இடது சாரிப் போராட்டங்களையும் ஒருபால் உறவுகாரரின் போராட்டங்களையும் நாம் எவ்வாறு இணைக்கலாம்?***

இந்த இணைப்புக்கள் எப்போதுமே இருந்து வந்துள்ளன. ஏகாதிபத்தியம், இனவாதம், பால்வாதம், வர்க்க ஒடுக்குமுறை, ஒருபால் உறவு எதிர்ப்பு போன்ற அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்பானவை. உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு கறுப்பு ஒருபால் உறவுப் பெண் மேற் குறிப்பிட்ட அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்கொள்கிறார். இந்தப்பலதள ஒடுக்குமுறை அவளை ஏனைய ஒடுக்குமுறைகளின் அனுபவத்துடன் இணைக்கிறது. வேறு வேறு அரசியல் தளங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் இத்தகைய இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதே பயன்பாடு அதிகம் மிக்க ஒரு அரசியலுக்கு உதவும்.

***ப்டிப்படியாக ஒருபால் உறவுக்காரர் இருபால் உறவுகாரராக (Bisexuals) மாறிவிடுவார்கள் என்று சொல்லப்படுவதில் எவ்வளவு உண்மை இருக்கிறது?***

சில பேர் அப்படி மாறலாம். எனினும் இதனைப் பொதுமைப்படுத்த முடியாது. ஆண் -பெண் உறவுகளில் மட்டுமே ஈடுபட்டிருப்பவர்கள் என்ன மாதிரி? அவர்களும் காலப்போக்கில் ஒருபால் உறவுகாரராக மாறிவிடுவார்களா? இல்லை என்றால் ஏன் ஒருபால் உறவுக்காரரைப் பற்றி மட்டுமே இந்த எடுகோள்?இருபால் உறவுகளில் ஈடுபடுவது என்பது அவரவர் தெரிவு. ஒருவருடைய பாலியல்பு எப்போதுமே மாறற்ற ஒன்று என்று நான் நினைக்கவில்லை.

***இங்கு வளரும் குழந்தைகள் ஒருபால் உறவுபற்றிய பாதமான எண்ணங்களுடனேயே வளர்கின்றனர். குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வகையில் எவ்வாறு இந்த விஷயத்தை அறிமுகப்படுத்தலாம் என்று கருதுகிறீர்கள்?***

பாலியல் பற்றி மேலும் கற்பித்தல் அவசியம். சிறுவயதிலிருந்தே ஒருபால் உறவு, ஆண்-பெண் உறவுபற்றிய அறிவுடன் குழந்தைகள் வளர்வார்களாயின் வளர்ந்த பின்னால் அவர்கள் தமக்கான தேர்வை மேற்கொள்ளும் போது ஆண்- பெண் உறவுகளையே இயற்கையானது என்று கருதுகிற மனோநிலையில் இருக்க மாட்டார்கள். இது ஆணாதிக்க ஆண் பெண் உறவுச் சமூக நிர்ப்பந்தங்களையும் அவர்கள் மீது திணிக்காது. ஆண்-பெண் உறவுகள் போலவே ஒருபால் உறவுகளும் இயல்பானவை என்ற உணர்வு குழந்தைகளுக்கு ஏற்படவேண்டும். அப்படி ஏற்படாதவரையில் ஒருபால் உறவுகள் பற்றிய எதிருணர்வுகளே மேலோங்கும் சமுதாயத்தின் கல்வியாளர்கள் புத்தி சீவிகள் போன்றவர்கள் ஒருபால் உறவுகளைப் புரிந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைக்கு வளராவிட்டால் எங்களுடைய குழந்தை களும் இது பற்றி வெறுப்புணர்வுள்ளவர்களாகவே வளர்வார்கள். ஒருபால் உறவுகள் என்பது ஆண் -பெண் உறவுகளுக்கான இயல்பான ஆரோக்கியமான மாற்று என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இன்று ஏராளமான குழந்தைகள் ஒருபாலுறவுப் பெற்றோரிடம் வளர்கின்றனர். பெற்றோர் என்ற வகையில் இவர்கள் நல்ல முன்னுதாரணத்தைத் தருகிறார்கள் என்றே நான் சொல்வேன்.

***ஒருபால் உறவினரே AIDS நோயைப் பரப்புகிறார்கள் என்று பலர் நம்புகிறார்களே?***

இது ஒரு பெரிய மாயை. நீங்கள் இலங்கையரா, ஒருபால் உறவுகாரரா, ஆண்-பெண் உறவுகாரரா அல்லது கறுப்பர் என்பதிலெல்லாம் AIDS நோய் தொற்றுவது தங்கியிருக்கவில்லை. எவ்வகையான பாலியல் செய்கைகளில் ஒருவர் ஈடுபட்டிருக்கிறார் என்பதும் அவற்றை அவர் பாதுகாப்பான முறைகளில் செய்கிறாரா என்பதும்தான் AIDS ஐப் பொறுத்தவரை முக்கியமானது. சில பாலியல் செய் கைகள் அதிகளவு ஆபத்தைக் கெண்டவை. சில குறைந்தளவு ஆபத்தைக் கொண்டவை. எனவே திருமணமாகிக் குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண்ணும் கூட AIDS நோயினால் பாதிக்கப்படலாம்.

# மட்டக்களப்பில் மலையகம் பற்றிய கருத்தரங்கு

பூவரசுகள் இலத்திய அமைப்பின் அறிமுகமும் அதன் முதற்கருத்தரங்கும் சில வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு நகரிலுள்ள சாள்ஸ் மண்டபத்தில்இடம் பெற்றது.

''மலையகத் தமிழ் இலக்கியம் அன்றும் இன்றும்'' என்பது கருத்தரங்கத் தலைப்பு. (கருத்தரங்கு பிற்பகல் 3.30 மணிக்கு எனப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்த போதும் தமிழர் பண்பாட்டிற்கு ஏற்ப 3.45 மணிக்கே ஆரம்பமானது. தலை மை வகித்த சாருமதி அவர்கள் ஆரம்பத் தில் தனக்கே இயல்பான போக்கில் உணர்ச்சி கலந்த நிலையில் பேசினார்.

எஸ்.பொன்னுத்துரை,சுபத்திரன்போன்றோரின் இலக்கிய முயற்சிகளைக் குறிப்பிட்டு அதனால் மட்டக்களப்பு மாவட்ட இலக்கியங்கள் வளம் பெற்றன என்றார் பெரும் பத்திரிகையாசிரியர் எஸ். டி. சிவ நாயகத்தின் இலக்கிய ஊக்குதல் முயற்சிகள் ஏன் நினைவில் இல்லாமல் போனது? என்பது எமக்கு விளங்கவில்லை.

மேலும் வாசகர் வட்டம் மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம், கலை இலக்கியப் பேரவை போன்றவற்றின் பணிகளைப் பற்றியும் தமதுரையிலே குறிப்பிட்டார். ஆனால் இலக்கிய முயற்சியிலும் வெளியீட்டு முயற்சியிலும் குறிப்பிடப்பட வே.ண்டியவை, குறிப்பாக உதயம் பிரசுராலயம் தனது ஏழு வருட காலத்தில் பதினாறு வெளியீடுகளைச் செய்தமை பற்றிக் குறிப்பிடப்படாதமை கவனிக்கத்தக்கது. தலைமையுரையை எப்படிச் சுருக்கமாக அமைப்பது என்பதைத் தலைவர்களுக்கு யாராவது சொல்லிக் கொடுக்கத் தான் வேண்டும்.

இதனைத் தொடர்ந்து அன்றைய முக்கிய நிகழ்வான மலையகத்தமிழ் இலக்கியம் அன்றும் இன்றும் என்னும் கருத்தரங்கு இடம் பெற்றது. கருத்துரை வழங்கியவர் ரி. ஜோதிகுமார் (நந்தலாலா சஞ்சிகை ஆசிரியரும் சட்டத்தரணியுமாவார்)

இவர் தனது கருத்துரையில் மலையக மக்களின் இலக்கியம் தனித்துவமாகக் காணப்படுவதற்கு அவர்களின் சமூக பொருளாதார அமைப்பே காரணம் என்றார். ஆரம்ப கால கவிதை இலக்கிய மானது நாட்டார் பாடல்களைப் பின் பற்றியே படைக்கப்பட்டதென்றார். குறிப்பாக சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகளில் ஏராளமானவை நாட்டார் பாடல்களின் மறு வடிவமாகவே காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப படைக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

அவரால் கருத்துரையில் கூறப்பட்ட விடயங்கள் மிக மிகச்சுருக்கமாகவே அமைந்திருந்தன ஆய்வுரீதியான அணுகுமுறை ஜோதிகுமாரிடம் காணப்படவில்லை. இங்கு வியப்புன விடயம் என்னவெனில் தலைமையுரையை விட கருத்துரை மிகக்குறுகிய நேரத்தில் முடிவுற்றதாகும்.

பின்னர் சபையில் இருந்து பலர் பல்வேறு கணைகளைத் தொடுத்தனர். இங்கு ஓர் விடயத்தைக் குறிப்பிடலாம் எனத் தோன்றுகின்றது. அது பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் கூற்றாகும் விடைகள்இல்லையென்பதற்காக வினாக்களை எழுப்பத்தவறக் கூடாது என்று அவர் அடிக்கடி கூறுவார். அவ்வாறே அன்றைய கருத்ரங்கிலே கேட்கப்பட்ட கேள்விகள் தரமானவையாகவும் ஆராயப்பட வேண்டியவையாகவும் சிந்தனையைக் கிளறுபவையாகவும் கருத்தரங்கினை முழுமை செய்தவையாகவும் அமைந்தன.

குறிப்பாக வீ. ஆனந்தன் அவர்களின் மூன்று கேள்விகளும் மிகவும் சிறப்பானவை பயன்கருதி அவற்றை இங்கு தருகிறேன்.

(அ) தலித் இலக்கியம்பற்றிய மலையகத்தின் நிலை என்ன?

(ஆ) மலையகத்தவர்கள் படைக்கும் மலையக இலக்கியத்திற்கும் மலையகம் சாராத ஏனையவர்கள் படைக்கும் மலையக இலக்கியத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன?

(இ) இவ்வாறு படைப்பதில் யார் படைப்பது சிறந்தது?

இந்தக் கேள்விகளுக்கு ஆய்வாளர் சரியான விடையினைக் கொடுக்கவில்லை. அதே நேரம் எனக்குத் தெரியாது என்று தனது இலக்கிய நேர்மையைக் காட்டினார்.

## பூவரசு: வரவும் எதிர்காலமும்

இவரைத் தொடர்ந்து செ. யோகராசா அவர்கள் வினாக்களைத் தொடுத்தார். அவ்வினாக்களும் சிந்திக்க வேண்டியவையாகும். அவரது வினா, மலையக மக்கள் குறிப்பாகத் தொழிலாளர் இந்நாட்டின் ஏனைய பிரதேச மக்களை விட தனித்துவமானவர்கள். நீண்டகாலமாக அவலங்களையும் சுரண்டல்களையும் அனுபவித்து வந்தவர்கள் பல்வேறு அமுக்கங்களுக்கு உள்ளாவர்களாதலினால் தமது துயரங்களை சிறந்த முறையில் வெளிப்படுத்தியிருக்க முடியும்; வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அவர்கள் கல்வியில் பின் தங்கியிருந்தமையை இதற்கான காரணமாக்க முடியாது. (தலித் எழுத்தாளர் அமரர் டானியல் பாடசாலையிலே நீண்ட காலம் கற்காதவர்) எனவே நீங்கள் இதற்கு என்ன காரணம் கூறுகின்றீர்கள்? என்பதாகும்.

இதனை அடுத்து மலையகக் கவிதை இலக்கியத்துக்குப் பெண்களின் பங்களிப்பு எத்தகையது? என்றும் அவ்வாறாயின் அவர்களது விபரங்களைக் குறிப்பிட முடியுமா? என்றும் கேள்வி எடுக்கப்பட்டது. இதற்கும் ஆய்வாளர் அவர்கள் தெரியாது என்றே கூறினார்.

மேற்கூறியவாறு கருத்தரங்கில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ''தெரியாது'' என்றோ முழுமையற்ற விதத்திலோ பதில் கொடுத்தமை பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும் இந்த நிகழ்வும் அமைப்பும் மட்டக்களப்பு பிரதேசத்துக்குப் புதியவை. ஆய்வளரும் புதியவர் ஆகையினால் இது போன்ற நிகழ்ச்சிகள் வர வேற்கத்தக்கன.

எனினும் இப்பூவரசுகளின் எதிர் காலச் செயற்பாடு எப்படி அமையுமோ என்பது தான் மட்டக்க ளப்பு மாவட்ட இலக்கிய நெஞ்சங்களில் எழும் கேள்வி.

சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

# அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும்-08

# சிறுபான்மை மக்களை பாதிக்கும் சட்டங்கள்

சுதந்திர இலங்கையின் யாப்புகள் எதுவும் சிறுபான்மை மக்களது, குறிப்பாக மலையக மக்களது, பிரதிநிதித்துவத்தையும் உரிமைகளையும், பாதுகாக்கக்கூடிய ஏற்பாடு எதையும் கொண்டிருக்கவில்லை. இதனால் அரசியல் யாப்பில் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் திருத்தங்கள் மாற்றங்கள் கொண்டு வராமலேயே சிறுபான்மை மக்களை பாதிக்கும் சட்டங்களை சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடிந்தது. இதற்கு சிறந்த 4 உதாரங்கள்:-

1) 1948ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை பிரஜா உரிமைச் சட்டம்,
2) 1949ம் ஆண்டு 3ம் இலக்க இந்தியர் -பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச்சட்டம்,
3) 1956ம் ஆண்டு 7ம் இலக்க அரசகரும மொழி சட்டம் அமுலாக்கல்,
4) 1967ம் ஆண்டு 14ம் இலக்க இலங்கை - இந்திய ஒப்பந்த - சட்டம் ஆகியவையாகும்.

1947ம் ஆண்டு அமுலுக்கு வந்த சோல்பரி அரசியலமைப்பு சிறுபான்மை மக்களைப் பாதுகாப்பதற்கென 29, சரத்துகளைக் கொண்டிருந்தது. இதன்படி ''ஒரு சமூகத்தின் மீது அல்லது மதத்தின் மீது விதிக்கப்படாத கட்டுப்பாடுகளும் பொறுப்புகளும் மற்றொரு சமூகத்திற்கு மாத்திரம் ஏற்புடைய தாக்கும் படியானதோ அல்லது ஒரு சமூகத்தை அல்லது மதத்தைச் சேர்ந்த ஒருவர் பெற்றிராத எந்த ஒரு சலுகையையும், சாதகமானவற்றையும் மற்றொரு சமூகத்தை அல்லது மதத்தைச் சார்ந்த ஒருவர் பெறக் கூடிய விதத்திலோ பாராளுமன்றம் சட்டம் எதையும் இயற்றலாகாது.

ஆனால் மேலே தரப்பட்டுள்ள நான்கு சட்டங்களும் 29ம் சரத்து நடைமுறையில் இருக்கும் போதுதான் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டன. மலையக மக்களின் பிரஜாவுரிமையை பறிமுதல் செய்த 1948-1949சட்டங்கள் முறையே 53:35, 52:32 என்ற வாக்குகளால் நிறைவேற்றப்பட்டன. 1956 தனிச் சிங்கள மொழிச் - சட்டம் 66:29 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மலையக தமிழ் மக்களை பெரிதும் பாதித்த ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு சட்ட வடிவம் கொடுத்த ''1967- அமுலாக்கல் சட்டம்'' கூட சாதாரண பெரும்பான்மை வாக்குகளினாலேயே பாராளுமன்றில் சட்டமாக்கப்பட்டது.

எனவே, ஒரு சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டிருக்கும் இலங்கையில் உள்ளது போன்ற ஒரு பாராளுமன்றில் சிறுபான்மை மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என நம்பிக்கை வைக்க முடியாது. அவர்களது நலனைப் பாதுகாக்க நான்கு விசேட ஏற்பாடுகள் தேவை. அவை:

1. அவ்வச் சமூகங்களிலிருந்து தெரிவான பிரதிநிதிகளின் சம்மதத்தை அந்தந்த சமூகத்தின் பெரும்பான்மை ஆதரவினைப்) பெறாத எந்தச் சட்டத்தையும் பாராளுமன்றால் நிறைவேற்ற முடியாது என்பதை அரசியலமைப்பு உறுதிப்படுத்த வேண்டும். இத்தகைய ஒரு நடைமுறை கனடாவிலே பரிசீலனை செய்யப்பட்டது. இதற்கு இரட்டைப் பெரும்பான்மை (Double Majority System) என்று பெயர். இதன்படி ''கியூபெக்'' மாநிலத்தில் வாழும் சிறுபான்மை பிரான்சு மொழி பேசும் மக்களோடு தொடர்புடைய பாராளுமன்ற சட்டங்களை கியூபெக் - பிரெஞ்சு பாராளுமன்ற பிரதிநிதிகளின் பெரும்பான்மை வாக்கைப் பெறாமல் நிறைவேற்ற முடியாது. இத்தகைய ''இரண்டாவது சபை'' ஒன்றை அமைப்பது அவசியம்.

2. அதிகாரம் பரவாலாக்கப்பட்டு சிறுபான்மை மக்கள் தமது மொழி, கலாசார, சமூக, அரசியல் உரிமைகளைத் தாமே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தெளிவான ஏற்பாட்டை அரசியல் யாப்பு வகுத்துக் கொடுத்தல் வேண்டும். பல்தேசிய அரசுகளில் அனைத்து இனங்களோடும் கூட்டாக அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள மறுக்கும் ஒரு -இன சார்பு அரசு அந்நாட்டின் ஐக்கியத்தைக் குலைத்து அந்நாட்டின் அரசியல் அமைதியை சீரழித்து விடும். எல்லாக் காலத்திலும் உரிமை மறுக்கப்படும் சிறுபான்மை சமூகம் மௌனமாக தனது அடிமைத்தனத்தை சகித்துக் கொண்டிராது.

1953ல் அரசுகள் புனரமைப்பு ஆணைக்குழுவை நிறுவி 16 மாநில அரசுகளையும் 3 யூனியன் பிரதேசங்களையும் வகுத்து சிறுபான்மை மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் திறன் இந்திய அரசுக்கு இருந்தமையினாற்தான் பாரதம் இன்னும் சிதைந்து சின்னாப் பின்னமாகாமல் பரந்த ஒரே நாடாக இருக்கிறது.

பீ.ஏ.காதர்

மறுபுறத்தில் இத்தகைய ஏற்பாடுகள் இல்லாமல் பல்தேசிய அரசொன்றில் சிறுபான்மை நலன்கள் பாதுகாக்கப்படமாட்டா. சின்னஞ்சிறிய சுவிற்சர்லாந்தில் (15,950 ச.மைல்) 22 கென்டன்கள் உள்ளன. சீனாவிலே உலகின் மிகச் சிறிய தேசிய இனமான ''ஷோச்சே'' மக்களுக்குக் கூட (சனத்தொகை: 7,000) பிரதேச சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. கனடா, பெல்ஜியம், சைப்ரஸ், பிறேசில், இத்தாலி போன்ற நாடுகளிலும் இத்தகைய ஏற்பாடுகள் உள்ளன.

3. சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சங்களை, அநீதிகளை உடனுக்குடன் விசாரித்து நீதியும் நிவாரணமும் வழங்கக்கூடிய அதிகாரமுள்ள சபை/ குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

அமெரிக்கா போன்ற ஒரு காலத்தில் கறுப்பர்களை அடிமைகளாகக் கொண்டிருந்த, நாடுகளில் கறுப்பர்களை இழிவாக மதிக்கும் ''வெள்ளைக்காரர்'' களின் மனோபாவத்தில் ஒரு சில தசாப்தங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவதில் இத்தகைய விசேட ஏற்பாடுகளும் சட்டங்களும் பெரும் பங்கு வகித்துள்ளன. இன்று கறுப்பர்களை இகழ்ந்து பேச, இகழ்ச்சியாக நடத்த வெள்ளையர்கள் பயப்படுகிறார்கள். ஏனெனில் அவ்வாறு செய்தால் கறுப்பர்களுக்கு நம்பிக்கையுடன் முறைப்பாடு செய்வதற்கு ஒரு இடம் (விசேட குழு) இருக்கிறது. இது உடனடியாக நடவடிக்கை எடுத்து தவறிழைத்தவருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கும்; பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்கும். கனடாவிலும் இத்தகைய ஒரு குழு இருக்கிறது. ''பாரபட்சத்திற்கு எதிரான ஆணைக்குழு என அது அழைக்கப்படுகிறது. (Anti - Discrimination Commission) பிரித்தானியாவிலேயே ''இன சமத்துவத்திற்கான ஆணைக்குழு'' (Commission For Racial Equality) எனப்படுகிறது.

4. சிறுபான்மையினரது வாக்குப் பலமும், எண்ணிக்கைப் பலமும் சிதறடிக்கப்படாத விதத்தில் அவர்களது பிரதேசங்கள் பாதுகாக்கப்படுவதோடு தேர்தல் தொகுதிகளும், நிர்வாக மாவட்ட, மாகாண எல்லைகளும் வரையப்படுதல் வேண்டும். அத்துடன் பாராளுமன்றிலும் தொழில் வாய்ப்பிலும், நிர்வாகத்திலும் அவர்களது பிரதிநிதித்துவம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இந்த நான்கு அடிப்படைகளும் இல்லாமல் சிறுபான்மை மக்களின் நலன்களை எந்த அரசியல் யாப்பும் உறுதிப்படுத்தாது.

சுதந்திர இலங்கையின் அரசியல் யாப்புகள் மூன்றும் சிறுபான்மை மக்களுக்கு அநீதியே இழைத்துள்ளன. ஒவ்வொரு தேர்தல் முறையும் மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை கட்டுப்படுத்தியே வந்துள்ளன.

# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்-8

என்.சரவணன்



### 1956 தேர்தல்

இலங்கையின் அரசியற் சரித்திரத்திலேயே 1956ஆம் ஆண்டு தேர்தல் 'பெண்கள் அரசியற்துறை'யில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகிறது. இத்தேர்தலின் பின் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் பெண் ஒருவர் அமைச்சர் பதவி வகிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1956 தேர்தலுக்கு அடிகோலிய அரசியற் பின்னணிச் சம்பவங்களை இங்கு நோக்குவது அவசியமாகிறது.

1952 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி, பாராளுமன்ற ஆசனங்கள் 94 இல் 54 ஐக் கைப்பற்றியிருந்தது. டட்லி சேனநாயக்கா பிரதமராகப் பதவியேற்றார். அவரது அரசாங்கத்தின் ஆயுட்காலம் 1957 வரைக்கும் இருந்த போதும் 1956 இலேயே தேர்தலை வைக்க வேண்டியேற்பட்டதற்கான காரணங்கள் பல. 1953 '**ஹர்த்தால் போராட்டம்**' அக்காரணங்களில் முக்கியமானது. அதேபோல் நாடு முழுவதும் ***சிங்களம் மட்டும் அரசமொழி*** எனும் கோஷம் முக்கிய இடம் பெறுகிறது.

அரிசி விலையை 25 சதத்திலிருந்து 70 சதத்திற்கு உயர்த்தியமை, தபால் மற்றும் ரயில் போக்குவரத்து கட்டண உயர்வு, பாடசாலை மாணவர்களின் மதிய உணவு நிறுத்தம் என்பனவற்றை டட்லி அரசாங்கம் தமது வரவு செலவுத் திட்டத்தினூடாக மக்களுக்கு சுமையாக்கியது. இதைத்தொடர்ந்து லங்கா சமசமாஜக்கட்சி தலைமையில் இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒகஸ்ட் 12 இல் நடாத்திய ஹர்த்தால் போராட்டத்தின் போது 12 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி இறந்து போயினர். இந்த மாபெரும் ஹர்த்தாலின் போது மிரண்டு போன டட்லி அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த HMS - New Found land எனும் யுத்தக்கப்பலை தமது தற்காலிக வதிவிடமாகக் கொண்டது. இக்கப்பலில் இருந்தபடியே அமைச்சரவைக் கூட்டத்தையும் கூட்டி ஒகஸ்ட் 8ம் திகதி ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பதற்கான தீர்மானத்தையும் எடுத்தது. இதைத்தொடர்ந்து சில நாட்களிலேயே டட்லி பதவியைவிட்டு விலகினார்.

டட்லி பதவி விலகிய ஒக்டோபர் 12ம் திகதி சேர் ஜோன் கொத்தலாவல இடைக்கால பிரதமராகப் பதவியேற்றார். ஹர்த்தால் நாட்களில் பெண்கள் வீதியெங்கும் அடுப்பை வைத்து அதில் ரொட்டி - அப்பம் என்பவற்றை சுட்டுச்சாப்பிட்டு அரசாங்கத்திற்கு தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

சிங்களம் மட்டும் அரசமொழி எனும் கோஷம் 1955ம் ஆண்டு காலப்பகுதியில் பெரும் கோஷமாக வெளிக்கிளம்பியது. ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டுமே அந்தக் கோஷத்திற்கு யார் தலைமை கொடுப்பது எனும் போட்டியில் ஈடுபட்டன. மொழியை பிரச்சினையாக்கி வாக்குகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களை தங்களை நோக்கி திசைதிருப்ப மொழிப்பிரச்சினையை ஆயுதமாக்கினர்.

அதுவரைகாலம் சிங்களமும் தமிழும் அரசமொழியாக அங்கீகரித்திருந்த கட்சிகள் (லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தவிர்ந்த) ***"சிங்களம் மட்டும்"*** யோசனையை அங்கீகரித்தன. நாடு முழுவதும் எழுந்த அந்தக் கோஷத்தைத் தொடர்ந்து தமிழ்க்கட்சிகள்; அரசியலமைப்பில் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளுமாறு வேண்டினர். அரசு அதை உதாசீனம் செய்ததைத் தொடர்ந்து அதுவரை அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்து வந்த தமிழ் உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து விலகினர்.

ஐக்கிய தேசியக்கட்சி 1956 பெப்ரவரி 18ம் திகதி நடாத்திய 'களனி மாநாட்டில்' '***சிங்களம் மட்டும்***' அரச மொழியாக்கப்பட வேண்டும் எனும் யோசனையை கட்சி ரீதியில் தீர்மானித்தது. அதே தினம் ஆளுநருக்கு பிரதமர் வழங்கிய ஆலோசனைப்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அடுத்த தேர்தலுக்கும் அத்திவாரமிடப்பட்டது. வேட்புமனுத் தாக்கல் மார்ச் 8ம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் பெண்கள் 5பேர் வேட்புமனுத் தாக்கல் செய்தனர். மேற்படி பெண் போட்டியாளர்களில் தெடிகம தொகுதியில் போட்டியிட்ட விமலா கன்னங்கர புதியவர். இவர் டட்லி சேனநாயக்க அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டதைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் தெடிகம தொகுதியில் போட்டியிட்டார். இவர் ஒதர கம்தொழாபத்து கிராம நிர்வாக சடையின் தலைவியாக இயங்கிக்கொண்டிருந்தவர்.

பதவியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சியை பொது எதிரியாகக் கொண்டு அதனை தோல்வியுறச் செய்யும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன போட்டித்தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டன. பின்னர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் தலைமையில் விப்லவகாரிசமசமாஜக்கட்சி, சிங்கள பாஷா பெரமுன மற்றும் இன்னும் சில சுயேட்சை உறுப்பினர்களையும் கொண்டு 1956 பெப்ரவரி 22ம் திகதி மக்கள் ஐக்கிய முன்னணி எனும் அமைப்பை ஏற்படுத்தினர்.



S.W.R.D.பண்டாரநாயக்க

இத்தேர்தலில் போட்டியிட்ட 5 பெண்களில் 3 பெண்கள் வெற்றிபெற்றனர். தெடிகம தொகுதியில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட விமலா கன்னங்கர 16,456 வாக்குகளால் தோல்வியடைந்தார். அவிஸ்ஸாவெல்ல தொகுதியில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட கிளோடா ஜயசூரிய 22,252 வாக்குகளால் தோல்வியடைந்தார். இத்தொகுதியில் பிலிப் குணவர்தன வென்றார். லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட விவியன் குணவர்த்தனா அத்தொகுதியில் 7352 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார். கிரிஎல்ல தொகுதியில் போட்டியிட்ட குசுமா குணவர்த்தன 9963 வாக்குகளால் வெற்றி பெற்றார். மீரிகம தொகுதியில் போட்டியிட்ட விமலாவும் வெற்றி பெற்றார்.

### 1956ஆம் ஆண்டு தேர்தலில் பெண்கள்

| | | |
|---|---|---|
| **கொழும்பு வடக்கு** | | |
| 1. திருமதி விவியன் குணவர்தன | (LSSP) - | 16841 |
| 2. வீமன் பெரேரா | (MEP) - | 1229 |
| 3. ஜே.சி.டி.சில்வா விஜயரத்ன | (UNP) - | 9489 |
| 4. டபிள்யூ.டி.டி.சில்வா | (I) - | 1305 |
| **கிரிஎல்ல** | | |
| 1. எச்.சந்திரபால குணசேகர | (LSSP) - | 1011 |
| 2. ஏ.ஈ.பி.கிரிஎல்ல | (UNP) - | 6309 |
| 3. திருமதி குசும்சிறி குணவர்தன | (MEP) - | 16272 |
| **அவிஸ்ஸாவெல்ல** | | |
| 1. திருமதி கிளோடா ஜயசூரிய | (UNP) - | 7818 |
| 2. பிலிப் குணவர்தன | (MEP) - | 30070 |
| 3. எச்.எம்.எஸ்.ஜயவர்தன | (I) - | 258 |
| **தெடிகம** | | |
| 1. மைத்திரிபால ஹேரத் | (MEP) - | 22816 |
| 2. திருமதி விமலா கன்னங்கர | (UNP) - | 6360 |
| 3. டபிள்யூ.ஏ.முணசிங்க | (I) - | 191 |
| **மீரிகம** | | |
| 1. திருமதி விமலா விஜயவர்தன | (MEP) - | 36193 |
| 2. ஜோன் எட்மண்ட் அமரதுங்க | (UNP) | 10896 |
| 3. எச்.பீ.ஜயவர்தன | (I) - | 399 |
| 4. ஏ.ஏ.ஸ்டேன்லி டயஸ் | (I) - | 375 |

### 1957ஆம் ஆண்டு செப்டெம்பர் 7இல் வெலிமட தொகுதியில் நடந்த இடைத்தேர்தல் முடிவுகள் - பெண்கள்

| | | |
|---|---|---|
| 1. திருமதி குசுமா ராஜரட்ன | (I) - | 14069 |
| 2. எம்.பி.ஏ.ஜயசுந்தர | (I) - | 2616 |

LSSP - Lanka Sama Samaja Party
UNP - United National Party
I - Independent
MEP - Mahajana Eksath Peramuna

### விமலா விஜயவர்தன

1956 ஏப்ரல் 12 ஆம் திகதி பதவியேற்ற மக்கள் ஐக்கிய முன்னணியின் அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக விமலா கன்னங்கர பதவியேற்றார். இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் முதன் முறையாக அமைச்சர் பதவி வகித்த பெண் என்ற பெருமை இவரைச்சாரும். இலங்கை உயர் சேவைகளில் பெண்களும் நியமிக்கப்பட வேண்டும் என்று கோஷம் எழுப்பி, பின் 1948 ஜனவரி மாதம் அளவில் 'ஐக்கிய பெண்கள் முன்னணி' என்ற அமைப்பையும் தோற்றுவித்த விமலா விஜயவர்தன 'கடான'யில் பெரும் உயர்மத்திய தரவர்க்க வியாபாரியான கரோலிஸ் சில்வா என்பவரின் மகள். கொழும்பு விசாகா மகளிர் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவர் தன்னளவு பணம் படைத்த பணக்காரரான டீ.சி.விஜயவர்தனவைத் திருமணம் புரிந்தார். இடதுசாரி இயக்கங்களோடு இணைந்து அரசியல் வேலைகளில் அதுவரை ஈடுபட்டுவந்த இவர் 1952 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து களனி தொகுதியில் ஜே.ஆர்.ஜெயவர்தனாவுடன் போட்டியிட்டு தோல்வியடைந்தார். அத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

மீரிகம தொகுதியில் போட்டியிட்ட விமலா விஜயவர்த்தன 25,297 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். அதுவரை பெண்கள் பெற்ற மேலதிக வாக்குகளில் இதுவே கூடிய பெறுமானமாகக் கருதப்படுகிறது.

பண்டாரநாயக்கவின் அமைச்சரவையில் 'சர்ச்சைக்குரியவர்' என அழைக்கப்பட்ட விமலா புகழ் பெற்ற பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும் பண்டாரநாயக்கவின் அமைச்சரவையில் இருந்து கொண்டே எதிர்த்தார். 1956இல் மொழிச்சட்ட விவாதத்தின் போது அகுரெஸ்ஸ தொகுதி உறுப்பினர் பதவியில் இருந்து விலகி, முடிந்தால் தன்னோடு போட்டிக்கு வரும்படி டொக்டர் எஸ்.ஏ விக்கிரமசிங்கவுக்கு சவால் விட்டார்.

மக்கள் ஐக்கிய முன்னணி உடைந்து பிலிப் குணவர்த்தனவின் தலைமையிலான குழு அரசாங்கத்திலிருந்து வெளியேறியபின் அமைக்கப்பட்ட பண்டாரநாயக்கவின் இரண்டாவது அமைச்சரவையில் உள்நாட்டு அலுவல்கள், வீடமைப்புத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

விமலா விஜயவர்தன பண்டாரநாயக்க கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தார். விமலா பண்டாரநாயக்க கொலை வழக்கில் ஆறாவது சந்தேக நபர் ஆவர்.

1959 செப்டெம்பர் 25ம் திகதி பண்டாரநாயக்க கொழும்பு றோஸ்மீட் பிளேஸில் உள்ள தனது இல்லத்தில் சுடப்பட்டு அடுத்த நாள் மரணமடைந்தார். பண்டாரநாயக்க கொலை வழக்கில் சந்தேக நபர்களாக பலர் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். பண்டாரநாயக்கவைச் சுட்டவர் தல்துவே சோமராம ஹிமி எனும் பிக்கு. இவர் நான்காவது சந்தேக நபராகக் கொள்ளப்பட்டார். இரண்டாவது சந்தேக நபரான ஹேமச்சந்திர பியசேன ஜயவர்தன; விமலா விஜயவர்தனவுக்கு நெருங்கியவர். ஹேமச்சந்திர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். 1952இல் விமலா விஜயவர்தன களனியில் போட்டியிட்ட போது அவருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தவர். முதலாவது சந்தேக நபரான கலனி ரஜமகா விகாராதிபதி மாப்பிட்டிகம புத்தரக்கித தேரோவும் இச்சம்பவத்துடன் நெருங்கிய தொடர்புடையவர் எனக்குற்றம் சாட்டப்பட்டவர். இவர் ஐக்கிய பிக்குகள் முன்னணியின் உறுப்பினர். இவருக்கும் விமலாவுக்கும் தொடர்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதுடன், இவர்கள் ஒன்று கூடி உரையாடிய பல விபரங்களும் வெளியாகியிருந்தன.

(ஆதாரம்: பிரதமர் பண்டாரநாயக்கா கொலை விசாரணையில் வெளியாகும் அரசியல் இரகசியம் - திவயின - 25.09.1994)

பண்டாரநாயக்க கொலையை விசாரணை செய்த பின் விமலாவை விடுவித்த நீதவான் பின்வருமாறு கருத்து வெளியிட்டார். **"ஆறாவது சந்தேக நபர் இந்த நாட்டின் தேசியப் பத்திரிகைகளுக்கு நன்றி கூற கடமைப்பட்டவர். பிரதமர் கொலையின் பின் ஏற்பட்ட மோசமான நிலைமையை சரியான வழிக்குக் கொண்டு செல்ல முடிந்தது இப்பத்திரிகைகளினாலேயே. அதேபோல் தனக்கு எதிராக இருந்த அரசியல் அழுத்தங்களை வெளிக்கொணர்வதற்கும் பத்திரிகைகளே அவருக்குக் காரணமாக இருந்தன."**

### குசுமா ராஜரட்ன

956 தேர்தலில் வெலிமட தொகுதியில் மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கே.எம்.பி.ராஜரட்ண போட்டியின் போது கட்டுக்காசை குறிப்பிட்ட தினத்தில் கட்டாத குற்றம் பற்றிய வழக்கு விசாரணையில் நீதிபதி எச்.டபிள்யூ.ஆர்.வீரசூரிய வழங்கிய தீர்ப்பில் ராஜரட்ணவின் தேர்வை ரத்து செய்தார்.

1957 மே மாதத்தில் வழங்கிய அத்தீர்ப்பின் காரணமாக செப்டெம்பர் மாதம் 7ம் திகதி இடைத்தேர்தலை நடத்த வேண்டியேற்பட்டது.

அத்தேர்தலில் போட்டியிட்ட ராஜரட்ணவின் மனைவி குசுமா ராஜரட்ண 11,453 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இடைத்தேர்தலில் வெற்றி பெற்றவுடனேயே பாராளுமன்றத்திற்கு **"ஸ்ரீ"** எழுத்துப் பொறிக்கப்பட்ட வாகனத்திலேயே வந்தார். அதுவரை ஸ்ரீ இலக்கம் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அந்த நாட்களில் வடகிழக்கெங்கும் 'ஸ்ரீ எதிர்ப்பு' போராட்டம் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.



விமலா விஜயவர்தன

1958 ஏப்ரல் 9ம் திகதி ஸ்ரீ சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து விமலா தலைமையிலான ஒரு குழு றோஸ்மீட் பிளேஸிலிருந்த பிரதமரின் இல்லத்தை முற்றுகை இட்டுக்கொண்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பண்டா - செல்வா உடன்படிக்கையை கைவிடும்படி கோரிக்கை விடுத்தனர். பண்டாரநாயக்கவும் அவ்வுடன்படிக்கையை கைவிடுவதாக எழுத்து மூல உறுதியை அன்றே வழங்கினார்.

குசுமா முதலாவதாக முகம் கொடுத்த பாராளுமன்ற விவாதம் பண்டா - செல்வா ஒப்பந்தம் தொடர்பானது. பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் போது பின்வருமாறு அவர் உரையாற்றியிருந்தார்.

***"கௌரவ உப சபாநாயகர் அவர்களே! மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த படி இருவருடங்களுக்கு முன்னர் டொக்டர் என்.எம்.பெரேரா சிங்களமும் தமிழும் அரச கருமமொழியாக அரசியலமைப்புக்குள் திருத்தம் கொண்டுவர வேண்டும் என இந்த சபைக்கு முன்மொழிந்த போது அதனை எதிர்த்து சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக வேண்டும்; அது அரசியல் அமைப்பிலும் இடம் பெற வேண்டும் என்றும் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பிரதமர் அவர்கள் கூறியிருந்தார். ஆனால் அது இன்னமும் செய்யப்படவில்லை. சிங்கள மக்களின் அடிப்படை உரிமை சிங்கள மொழிச்சட்டத்திலேயே தங்கியுள்ளது. எனவே அது அரசியலமைப்பில் உள்ளடக்கப்படுவது அவசியம். அப்படியில்லாவிடில் அரசியல் அமைப்பைத் திருத்தம் செய்வதில் அர்த்தமில்லை...... ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் தான் சிங்கள மக்களை அழிப்பதற்காக சிறுபான்மை இனங்களுக்கு விசேட சலுகைகளை வழங்கினர். சிறுபான்மை இனங்களிலும் தமிழர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கினார்கள்...... பாரதத்தை இரண்டாக உடைத்து சுதந்திர அரசுகள் இரண்டை உருவாக்குவதற்காக முஸ்லீம் மக்களை இந்து மக்களுக்கு எதிராக இயக்க சூழ்ச்சி செய்ததைப் போலவே, சிங்கள மக்களுக்கு எதிராக தமிழரையும் தூண்டிவிட்டுள்ளனர். இது எவ்வளவு தூரம் சாத்தியமாக இருக்கிறது என்பதற்கு உதாரணம்; மேல் நாட்டு (உடரட்ட) ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு போது இந்நாட்டின் நிலப்பரப்பில் 98% சிங்களவருக்குச் சொந்தமாக இருந்தது. ஆனால் இன்று இரு மாகாணங்கள் - வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களையும் தமிழர்களின் தலைவர்கள் தங்களது பாரம் பரிய பிரதேசம் என்று சொல்லுமளவிற்கு துணிவுபெற்றிருக்கின்றனர். எனவே பிரதமரின் சமஷ்டி ஒப்பந்தம் சிங்கள மக்களை தமிழ் மக்களுக்குக் காட்டிக்கொடுக்கும் செயலாகவே நாங்கள் கருதுகிறோம். என்றாவது இந்த தேசத்துரோக ஒப்பந்தத்தை சட்டமாக்குவதற்கு சிங்கள மக்கள் இடம் தரமாட்டார்கள் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்."***

**(ஆதாரம்: Hansard - House of Representative - 26.11.1957)**

பண்டா - செல்வா ஒப்பந்தம்; பொது மக்களின் எதிர்ப்புகளுக்கு உள்ளாகியிருக்கிற சூழ்நிலையில் **"பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்துங்கள்"** என்று கோரினார். இலங்கைக்கான யூகோஸ்லாவிய தூதுவரை நாட்டைவிட்டு வெளியேற்றும்படியான யோசனையையும் அவர் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். பாராளுமன்றத்தில் வெளிநாட்டு தூதுவர் ஒருவர் தொடர்பான யோசனை சமர்ப்பித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவே.

1960 மார்ச் பொதுத்தேர்தலின் போது வெலிமட தொகுதி; ஊவா, பரணகம, வெலிமட தொகுதியில் அவரது கணவர் கே.எம்.பி.இராஜரட்னவும் ஊவா பரனகம தொகுதியில் ஜாதிக விமுக்தி பெரமுன (தேசிய விடுதலை முன்னணி) சார்பில் குசுமாவும் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். 1960 யூலை தேர்தலில் ராஜரட்ண தம்பதிகள் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றனர்.

எனினும் சட்டவிரோதமாக ஆர்ப்பாட்டம் செய்தமை, காயப்படுத்தல்களில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ராஜரட்ன இரண்டரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். தனது சிறைத்தண்டனையை நீக்கும்படி பாராளுமன்றக் கட்டடத்துக்கு முன் உண்ணாவிரதம் மேற்கொண்ட ராஜரட்ணாவை அவரது பிடகோட்டே வீட்டுக்கு கொண்டு வந்து வீட்டுக்குளேளேயே சிறைவைத்தனர் (House Arrest) குசுமா ராஜரட்னவும் கணவரோடு சிறையிருக்க வேண்டியேற்பட்டது. பின்னர் அவரது தண்டனை குறைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து 1962 யூன் மாதம் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் கே.எம்.பி. ராஜரட்னா வெற்றிபெற்றதுடன் 1965 ஆம் ஆண்டு அரசாங்கம் வரை ராஜரட்னா தம்பதிகள் அங்கம் வகித்தனர்.

பௌத்தமதத்தை அரசமதமாக்குவது, நாடற்ற இந்திய வம்சாவளி மக்கள் ஐந்து லட்சம் பேரையும் இந்தியாவுக்கு திருப்பியனுப்புதல் ஆகிய இரண்டு காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்தில் ஸ்ரீ.ல.சு.க. மற்றும் லங்கா சமசமாஜகட்சி கூட்டரசாங்கம் கொண்டு வந்த விவாதத்தின் முடிவில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் (1964 டிசம்பர் 3ம் திகதி) குசுமா ராஜரட்ன எதிர்த்து வாக்களித்தார். ஒரு வாக்கு வித்தியாசத்தில் அரசு தோல்வியைத் தழுவியதால் 1965 பொதுத்தேர்தலுக்கு வழிகோலியது.


1965 பொதுத்தேர்தலில் மீண்டும் ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்ட குசுமா 1951 மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். ஐக்கிய தேசியக் கட்சி அத்தேர்தலின் போது ராஜரட்னா தம்பதிகளுக்கு எதிராக எவரையும் நிறுத்தவில்லை. ஆனாலும் வெலிமட தொகுதியில் திரு.கே.எம்.பி.ராஜரட்னா தோல்விக்குள்ளானார். 1965 மார்ச் 27ம் திகதி அமைக்கப்பட்ட டட்லி சேனநாயக்கவின் கூட்டரசாங்கத்தில் குசுமா உள்நாட்டுப் பிரதி அமைச்சராக பதவியேற்றார்.

இருந்த போதும் டட்லி சேனநாயக்க கூட்டரசாங்கத்தில் 'கூட்டு' தொடர்ந்தும் இறுக்கமாக இருக்கவில்லை. தமிழ் மொழி விசேட ஏற்பாட்டு சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து குசுமா ராஜரட்னா பிரதி அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அதைத் தொடர்ந்து அவ்வரசாங்கத்திலிருந்து நம்பிக்கையிழந்த தமிழரசுக்கட்சியும் 1968இல் விலகிக்கொண்டது. பன்னிரண்டு வருடமாக பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டிருந்த குசுமா 1970 இற்கும் பின் அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டார்.

வரும்

ஆர்மேனியச் சிறுகதை





# சாஅதியின் கடைசி வசந்தம்

## அவெதிக் இஸாகியான்

வசந்தம் வந்துவிட்டது.

மண்ணுலகை அற்புதமாக மாற்றுகிற மாய வசந்தங்களில் அதுவும் ஒன்று. சந்தோஷத்தின், மற்றும் சோகத்தின் கவிஞனான சாஅதி அதைப் போல் நூறு வசந்தங்கள் கண்டிருக்கிறான்.

அன்று அதிகாலையிலேயே சாஅதி விழித்தெழுந்தான். கானப்பறவை மீண்டும் கீதமிசைப்பதைக் கேட்கவும், வசந்த கால அற்புதங்களை மறுபடியும் பார்ப்பதற்காகவும், ரோணாபாத் நதிக்கரையின் மீதிருந்த பூந்தோட்டத்துக்கு அவன் போனான்.

இயற்கையின் வெகுமதியான ரோஜா மலர்களைச் சூடி, காலைத் துயிலில் ஆழ்ந்திருந்த ஷிராஜின் வயலை அவன் நோக்கினான். நறுமணம் கலந்த வெண்பனியினால் திரையிடப்பட்டிருந்தது அது.

பூத்துக் குலுங்கிய மல்லிகைச் செடி ஒன்றின் கீழே, அழகான விரிப்பின் மீது சாஅதி உட்கார்ந்தான். அவன் நடுங்கும் கைகளில் பசுமையும் செம்மையும் கலந்த ரோஜா மொக்கு ஒன்றைப் பற்றியிருந்தான். ''தன்னை அணைக்கும் காதலனைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கும் ஒரு இளம் பெண்ணைப் போல, காலை மென்காற்றுக்காகத் தன் இதழ்களை விரிக்கிறது இந்த ரோஜா'' என்று மெதுவாக முணுமுணுத்தான்.

சாஅதி இப்போது மிகுந்த வயோதிபனாகி விட்டபோதிலும், அவனுடைய ஆத்மா அரைவாசி மூடிய இமைகளினூடாகவும் காதுகளின் வழியாகவும் இந்த உலகத்தின் அற்புதமான நிகழ்ச்சிகளையும் உருவங்களையும், அறிமுகமாகாத நெடுந்தொலைவுகளின் இசைகளையும் நிசப்தங்களையும் இன்னும் கண்டும் கேட்டும் மகிழ்ந்தது. கவிதை எனும் மந்திரசக்தி -விண்மீன்களின் ராஜ்யத்தில் உள்ள காஃப் மலையின் உச்சியில் தனது கூட்டை அமைத்துள்ள அந்த ஜாருக்த் பறவை- அவனோடு இன்னும் பேசிவந்தது தான் காரணமாகும்.

ஒளி நிறைந்த கண்களும் சாம்பல் நிறச் சிறகுகளும் பெற்ற கானப்பறவைகள், காதல் கனலும் வசீகரமான இன்னிசைப் பாடல்களைக் கூவின. அவற்றின் பாடல்கள் சாஅதியின் இதயத்தில் எதிரொலித்தன.

நெடுந்தூரத்தில் காதலோடு மலர்ந்து திகழும் ரோஜாக்களின் நறுமண வாழ்த்துகளை வருடுகிற மென்காற்றின் கன்னி மூச்சு கொண்டு தந்தது. இக் காதல் அறிவிப்புகளை சாஅதியின் ஆத்மா புரிந்துகொண்டது.

''இயற்கையின் மொழிகளை ஒரு அன்பு உள்ளம் எப்போதும் புரிந்து கொள்ளும். இசைப் பொருத்தத்தினால் நிறைந்திருக்கிறது இவ் உலகம். அதன் காதல் போதை அமரத்துவமானது.'' இப்படி வெகுநாட்களுக்கு முன்பு அவன் கூறியிருந்த வார்த்தைகளை சாஅதி நினைவு கூர்ந்தான்.

கானப்பறவையின் இன்னிசையாலும் சிவப்பு ரோஜாக்களின் அழகினாலும் பரவசமுற்ற சாஅதி, அவற்றின் மோக மூட்டும் நறுமணத்தை ஆழ்ந்து சுவாசித்தான்; அதனால் கிறக்கமுற்றுக் கண்களை மூடினான். கனவில் நிகழ்வதுபோல் இந்த உலகம் தன் உள்ளத்தில் சலனிப்பதை அவன் கண்டான். புனிதமான தாமரை மலர்கள் அணிசெய்ய அசைவற்று விளங்கும் இந்திய ஆறுகளை அவன் கண்டான்.

அறிவுள்ள யானைகள், அடர்ந்த காடுகளின் நடுவில் வாட்டமுற்று நிற்பதை அவன் பார்த்தான். டில்லியின் தங்க மாளிகைகளில், தங்கள் கருநீலக் கூந்தலில் செக்கச் சிவந்த மலர்கள் சூடிக் காட்சி தரும் இனிய மகளிரையும் அவன் பார்த்தான்.

தூரானின் சூறைப் பிரதேசங்களைக் கண்டான். சுடர்வீசும் வாள்கள் ஏந்திய கொடிய கயவர்கள் சூறைக்காற்றின் சிறகுகளால் சுமந்து செல்லப்படுவதையும் அவன் பார்த்தான்.

சூரியனால் பொசுக்கப்படுகிற பாலை நிலத்தையும் அவன் பார்த்தான். மேலே பறக்கும் கழுகுகளின் கூரிய கண்களிலிருந்து தப்ப வேகம் வேகமாக ஓடும் மான்களை, குதிரைகள் மீதமர்ந்து துரத்திச் செல்கிற பெதூயின் வேட்டைக்காரர்களையும் பார்த்தான்.

புனித யாத்திரை செல்லும் பக்தர்களின் வரிசைகளைப் பார்த்தான். அவர்கள் மெக்காவின் வாயில்கள் முன்னே முழந்தாளிட்டுப் பணிந்து பாடித் துதிப்பதையும் அவன் கண்டான்.

புராதன எகிப்தின் புகழ்வாய்ந்த அற்புதங்களை, பரந்து விரிந்த கடல்களின் நீல மினுமினுப்புகளை, டமாஸ்கஸ் நாட்டின் பட்டுப்போல் மிருதுவான சருமம் பெற்ற பெண்களின் ஒளிவீசும் உடல்களை அவன் பார்த்தான். வள்ளந்து கொஞ்சுகிற அவர்களின் கைகள் இளம் சாஅதியின் கழுத்தை அழகிய மாலைபோல் சுற்றித் தழுவியது உண்டு.

சாஅதி நெடுமூச்சுயிர்த்து, கண்களைத் திறந்தான்.

''ஐயோ, எனது நூறு ஆண்டுகள் இனிய கனவைப் போல் பறந்து போய்விட்டன; ஒரு இரவின் கனவுக் காட்சிபோல் மறைந்தன. அத்தனை வருஷங்களும் ஒரு நொடிப் பொழுதுபோல் ஓடிவிட்டன. இன்பக் கதைகளே, கானப்பறவைகளே, ரோஜா மலர்களே, ரோஜாக்களின் சகோதரிகளான இன்பம் நிறைந்த இளம்பெண்களே, நீங்கள் எல்லோரும் எப்போதும் எனக்குத் துணையாக இருந்ததுதான் காரணம்!''

வெள்ளி மலர்கள் ஒளிர்ந்த சொர்க்கத் தோட்டத்திலிருந்து கதிரவன் வெளிப்பட்டான். புல்லும் பசிய இலைகளும், கற்களும் குன்றுகளும் மினுமினுத்தன. ஏனெனில் இரவு அவை அனைத்தின் மீதும் வைரப் பொடியை வாரித் தெளித்திருந்தது.

நீல வானத்தையும், சூரிய உதயத்தின் பொன்னொளியில் பறந்து செல்லும் பறவைகளையும் சாஅதி ஆழ்ந்து நோக்கினான். வியப்போடும் பயத்தோடும் அவன் அவற்றைப் பார்த்தான்.

''உண்மை. உலகம் ஒரு அதிசயம்தான். ஒரு மோகினிக் கதைதான். அதன் அற்புதமும் அழகும் நிரந்தமானவை.

''நாள்தோறும் நான் இந்த உலகத்தைப் பார்க்கிறேன். ஒவ்வொரு நாளும் அதை அன்றுதான் முதல் முதலாகப் பார்ப்பது போல் நான் புதுவியப்புப் பெறுகிறேன். உலகம் பழகிப் போனது தான். இருந்தாலும், அது அற்புதமாக இருக்கிறது. பழசானது என்றாலும் நித்தியப் புதுமை உடையது. தனக்குத் தானே நிகரான - நிரந்தரமான, விளங்கிச் சொல்ல முடியாத - ஒரு தனி அழகினால் அது புதிதாக விளங்குகிறது.''

சாஅதி மீண்டும் உலகை நோக்கினான். இயற்கையின் பன்முக, அதிசய விளையாடல்களைப் பார்த்தான். பச்சைப் புல்வெளியில் பவளச் செந்நிறக் கால்களால் நடக்கும் இரண்டு புறாக்கள் கொஞ்சிக்கொண்டிருந்ததை அவன் கவனித்தான். திரும்பவும் உரக்கப் பேசினான்.

''உலகம் ஒரு வசியத்தில் கட்டுண்டிருக்கிறது. மறைந்திருக்கும் எவளோ ஒரு மாயக்காரியின் கைக்கோலின் மந்திர சக்தியில் அது சிக்கியுள்ளது. அதனால் எல்லாமே இனிய மோகினிக் கதையாக மாறிவிட்டது.

''உலகம் தலைதெறிக்க ஓடுகிறது.'' சிதறிப் பிரிகிறது. எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. ஆனாலும். இந்த மகத்தான உலகத்தைப் புதுப்பித்து, மறுபடியும் சீரமைத்து, இப்படி அற்புதமான அழகுக் கதையாய் நம் முன்னே பரப்பி வைப்பதுதான் எதுவோ?

''காதல் துடிப்பினால் கனத்துச் சோர்ந்த இதயத்தோடு, மானை, பாறைகளில் இடித்துத் தன் கொம்புகளை முறித்துக் கொண்டே கூரிய குன்றின்மீது ஏறும்படி செய்கிற சக்தி எது?

''அதன் பச்சைப் போர்வையைக் கிழித்து வெளிப்பட்டு, மிக இனிய நறுமணத்தைப் பரப்பும்படி ரோஜாவை எது தூண்டுகிறது?

''மனிதப் பிறவியை எங்கிருந்தோ தோன்ற வைத்து, சிந்திக்கவும், துன்பப்படவும், சுட்டெரிக்கும் ஆசைகளின் தீக்கொழுந்துகளை அனுபவிக்கவும், சாக விரும்பாமல் எப்போதும் இருக்கவும் தவிக்கும்படியாக, ரத்தமும் சதையும் பெற்றுத்திரியச் செய்வது எது?

''ஆக காதலே, வெற்றிகொள்ள முடியாத சக்தியே, இனிய கொடுங்கோலனே! நெடுங்காலமாக நான் உன்னை அறிவேன். ஆயினும், உனது ஆழத்தையும் உன் சாரத்தையும் ஒபோதும் நான் பூரணமாக உணர முடிந்ததில்லை ''

இதுதான் அவனது கடைசி வசந்தம் என்று சாஅதியின் உள்ளுணர்வு அவனுக்கு உணர்த்தியது''.

அவனுடைய இறுதி வசந்தம்!

தோட்டக் கதவு திறந்தது.


ஷிராஜின் நஸியத், மென்காற்றின் வருடுதலுக்குத் தனது பனிவெண் உடலைக் காட்டியவாறு உள்ளே வந்தாள். அடிக்கடி வருகிறவள்தான். சாஅதியின் காதலி அவள்.

திராட்சை மதுபோல் கிறங்கவைக்கும் அவளுடைய உதடுகளும், துணிபோர்த்தாத அவளது கரங்களின் வெண்மையும் கதகதப்பும், நூறு வயதுக் கவிஞனின் தூக்கமற்ற இரவுகளை அவ்வப்போது ஆனந்தமயமாக்கியிருக்கின்றன.

சாஅதி, தன் இளமை நிரம்பிய, வாட்டமுறாத இதயத்தினால் பூரணமான அவளைக் காதலித்தான். அவனது அமரகாவியமான குலிஸ்தானில் பொன் எழுத்துகளால் அவளைச் சித்திரித்திருக்கிறான்.

கைநிறைய ரோஜா மலர்கள் ஏந்தி நஸியத் அருகே வந்தாள். அவளே ஒரு ரோஜாப் பூ மாதிரி சுகந்தம் பரப்பினாள். அவனை வாழ்த்தினாள்.

கவிஞன் துக்கத்தோடு இருந்தான். அவனது வெளிர் உதடுகளில் விசனம் படிந்திருந்தது.



''மனிதரில் மிகவும் சந்தோஷமானவரே, உங்களை எது துயரப்படுத்துகிறது''?

சாஅதி மவுனமாக இருந்தான்.

''உங்கள் நினைவோட்டத்தை நான் நேசிக்கிறேன். ஓ, சாஅதி! உங்கள் துக்கம் அறிவுபூர்வமானது. வேதனையில்தான் முத்துகள் பிறக்கின்றன என்றும், வாசனைத் திரவியம் எரிகிற போதுதான் நறுமணம் தருகிறது என்றும் உங்கள் இனிய உதடுகள்தானே அறிவித்திருக்கின்றன.''

சாஅதி ஒளியற்ற மென்னகையோடு அவளைப் பார்த்தான்.

''பாருங்கள், உங்களுக்காக நான் ரோஜாப் பூக்கள் கொண்டு வந்திருக்கிறேன். என் தோட்டத்தில் பூத்த மென்மையான ரோஜாக்கள்.''

அவள் சாஅதிமேல் ரோஜா மலர்களைத் தூவினாள். கவியின் வருத்தம் படிந்த முகத்தை, பளிச்செனத் திகழ்ந்த தன் விரல் நுனிகளால் தொட்டாள்.

''சொர்க்கசுந்தரி, நீ எனக்குத் தந்த ரோஜாக்கள் உலகத்திலேயே மிகச் சிறந்த மலர்களாகவே எப்போதும் விளங்கின. அவை வாடியதே இல்லை.''

''ஆமாம் சாஅதி. 'ஒருவர் ரோஜாவின் மணத்தை நுகரும் போது, அது சீக்கிரமே வாடிவிடும் என்று ஏன் நினைக்க வேண்டும்? அதன் வாசனையை எண்ணிப்பார். மலர் எப்பவோ வாடி விட்டது என்ற நினைவை நீ சீக்கிரம் மறந்துவிடுவாய்.'' கவி என்றோ சொன்ன வார்த்தைகளை நஸியத் தன் வெள்ளிமணிக் குரலில் திரும்பச் சொன்னாள்.

அவள் அவன் அருகில் உட்கார்ந்தபோது, ஏகப்பட்ட கனவுகளை வரவழைத்த அவளது கூந்தல் சாஅதியின் முகத்தில் விழுந்தது. உடனே இனிய மென்காற்று ஒன்று, தனது வானவில் வர்ணச் சிறகுகளை அடித்தவாறு, தோட்டத்தின் வழியே விரைந்தது. சாஅதி தடுமாறும் தன் கையினால் நஸியத்தின் கனவுமயக் கூந்தலைத் தடவுகையில், காற்றில் படபடத்துச் சென்ற ஜும்ருக்த் பறவையின் அற்புதச் சிறகுகள் தான் அது.


பின்னர், தன்னைச் சுற்றிலும் தகதகத்த மோகினிக் கதை உலகத்தின்மீது, தன் ஆத்மாவின் அடித்தளத்திலிருந்து எழுந்த பார்வை ஒன்றைப் படரவிட்டான். இனிய காதலியின் பிரகாசமான புன்னகையை அவன் பார்த்தான். சூடான கண்ணீர் அவனது கிழ இதயத்தைப் புண்ணாக்கியது. அவளுடைய சின்னக் கையைத் தனகையால எடுத்தான். அதை முத்தமிட்டான். பிறகு அதை அவன் பதைபதைக்கும் தன் நெஞ்சோடு அழுத்தினான்.

''எனது கடைசி வார்த்தைகளை என் குலிஸ்தான் காவியத்தின் கடைசிப் பக்கத்தில் உனது சின்னக் கையினால் எழுதிவை:

'நமது சுய விருப்பத்தின்படி நாம் பிறப்பதில்லை. நாம் ஆச்சர்யத்தில் வாழ்ந்து, கவலையோடு சாகிறோம்.''

தமிழில்: வல்லிக்கண்ணன்
நன்றி : ஆர்மேனியச் சிறுகதைகள்

# கணவனின் காலடியில் சொர்க்கம்!



பங்களாதேஷ் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடு. இந்த நாட்டு மக்களின் வாழ்க்கையில் இஸ்லாம் மிகவும் உயிரோட்டமான முறையில் பிணைந்துள் ளது. முஸ்லிம்கள் கடவுளின் மீதும் இறைதூதர் மீதும் அளவற்ற நம்பிக்கை கொண்டவர்கள். புனித குரானின் போதனையின் வழியிலேயே தமது வாழ்க்கையை மேற் கொள்கின்றனர்.

ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும் மதத்தின் வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக விதியாகும். ஆண் உறவினர்களின் கண்காணிப்பிலேயே பெண்கள் வாழ வேண்டியவர்களாக உள்ளனர். பெண் சுதந்திரமாக இருப்பதை இவர்கள் எதிர்பார்ப்பதில்லை; அனுமதிப்பதில்லை; விரும்புவதுமில்லை. பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலைபற்றிய பல விம்பங்கள் ஆதியிலிருந்தே நிலவி வருகின்றன:

பெண்கள் உடல்ரீதியாக பலவீனமானவர்கள்; புத்தி குறைந்தவர்கள்; மன உறுதியற்றவர்கள்; வெகுளித்தனமாகப் பயங்கொள்பவர்கள்; உளவியல்ரீதியாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் உறுதியற்றவர்கள் என்பன அவற்றில் சில.

பெண்களுக்கு, குறிப்பாக வீட்டுக்கு வெளியே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு முகத்திரை (veil) தடையாக உள்ளது. இதனாலேயே உற்பத்தி நடவடிக்கைகளில் ஆண்களுக்தான் உரிமையிருப்பதாக கருதப்படுகிறது. அவன் தான் குடும்பத்திற்கு உணவளிப்பதில் முதன்மையானவன்? சமூக பழக்க வழக்கத்தில் ஆண் பிள்ளையே குடும்பத்தில் உற்பத்தியாளனாக அடையாளங்காணப்படுகிறான். பெண்பிள்ளை ஒரு கடனாகவும் சுமையாகவுமே கருதப்படுகிறாள். இதனாலேயே முகத்திரையானது பெண் சமூக, பொருளாதார அரசியல் கலாசார துறைகளில் முன்னேறுவதற்குப் பிரதான தடையாக உள்ளது. எப்படியிருந்தபோதும் வறுமையின் அதிகரிப்பு, உற்பத்தி முயற்சிகளில் பங்களிப்பதற்கு பெண்களின் தேவை அதிகரிப்பு, குடும்ப நலனுக்கு உழைப்பது ஆகியவற்றின் அழுத்தம் காரணமாக இன்றைய நாட்களில் முகத்திரையின் பயன்பாடு குறைந்துள்ளது.

இஸ்லாமிய முறையில் திருமணம் எல்லா ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டாயமானது. முஸ்லிம் தகப்பனார் திருமணம் முடிக்கும் வயதில் புதல்வியை வைத்திருப்பதற்கு ''புனிதப் பயணம்'' அனுமதிப்பதில்லை.

முஸ்லிம் திருமணப் பதிவாளர் முன்னிலையில் பெண்ணின் கணவன் திருமண ஆவணப்பதிவில் விவாகரத்து உரிமையை அவளுக்கு அளிக்காவிடத்து முஸ்லிம் மனைவி விவாகரத்துசெய்வதற்கான உரிமையை இழக்கின்றாள். ஆனால் இது நிச்சய மில்லாதது. நீண்ட செலவுமிக்க ஆபத்தான நடைமுறையாகும். சமூகமும் உறவினர்களும் விவாகரத்து செய்த பெண்களின் குறைகளை நீதிமன்றத்தில் எடுத்துக்கூற ஊக்குவிப்பதில்லை. விதவையின் நிலையு டன் ஒப்பிடும்போது விவாகரத்து செய்து கொண்ட பெண் சமூகத்தின் ஆண்களுக்கு மிகவும் மோசமானவளாகத் தெரிகின்றாள். இதனால் திருமணமான பெண்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்குகின்றார்கள். விவாகரத்தை தவிர்த்துக் கொள்வதற்காக அவளது கணவன் செய்யும் கொடுமைகளைக் தாங்கிக் கொள்கின்றாள். அதிகமான விவாகரத்தின் காரணமாகவே பலதார மணம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. விவாக ரத்துப் பெற்ற பெண் கடுமையான பொருளாதாரச் சிக்கலை எதிர் நோக்குகின்றாள். அவளுக்குப் பிள்ளைகளும் இருப்பின் மிகவும் நெருக்கடியான வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறாள். இந்த நிலைமைகளில் அவள் அவளுடைய தகப்பனாரின் குடும்பத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறாள். அங்கு அவள் ஒரு மேலதிக சுமையா கவே கருதப்படுகிறாள்.

சில சந்தர்ப்பங்களில் அவள் பணிப் பெண்ணாகக் கூலித் தொழிலாளியாக நகரத்துக்கு வேலை தேடிப்போகிறாள். சில நேரங்களில் அவள் பிச்சை எடுத்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறாள். அல்லது அவள் தன் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டு விபசாரத்திற்குள் நுழைகின்றாள்.

ஆண் பெண் இருவருக்குமான சம உரிமைகளை ஆதரிப்பவர் இறைதூதர். நடைமுறையில் இது கவனிக்கப்படுவதில்லை. ஆணாதிக்க குடும்பத்தில் பெண்களைச் சுரண்டுவதற்கு ஆண்களின் தலைமைத்துவம் கொண்ட மதமே கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பங்களாதேஷ் சமூகம் படிப்படியாக மாறி வருகிறது. எனினும் இந்த மாற்றங்கள் பயன்தர நீண்ட காலம் எடுக்கும். பழைய விழுமியங்களும் சமூக பழக்க வழக்கங்களும் இறந்து கொண்டிருக்கும். அதே வேளை புதியவை இடம் பிடிக்கின்றன. பெண்களின் விடுதலை தொடர்பான விடயங்கள் அண்மைக் காலமாகப்பலம் பெற்று வருகின்றன.

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்தே குடும்பமொன்றில் பால் அடிப்படையிலான பாரபட்சம் ஆரம்பமாகின்றது. முஸ்லிம் ஆண் பிள்ளைக்கு பெயர் சூட்டும் சடங்கில் இரண்டு மிருகங்கள் பலியிடப்படுகின்றன. ஆனால் பிறந்தது பெண் குழந்தையாக இருந்தால் ஒரு மிருகம் மட்டுமே பலியிடப்படுகின்றது. பர்தா (purdah) என்ற சொல்லின் அர்த்தம் முகத்திரை அல்லது முக்காடு. இது ஒரு சமய நடைமுறையாகும். பருவமடைந்த பெண் அவளது நெருங்கிய ஆண் உறவினர்களைத்தவிர மற்ற ஆண்களிடம் முகம்காட்ட முடியாது. அவள் முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடை - இது முழு உடம்பையும் மறைப்பது - அணிந்திருந்தால் மட்டுமே வாசல்வரை செல்ல அனுமதிக்கப்படுகின்றாள். ஒவ்வொரு முஸ்லிம் தகப்பனும் கணவனும் தங்களுடைய மனைவியரையும் மகள்மாரையும் சுதந்திரமாக சுற்றித் திரிய அனுமதிப்பார்களானால் தங்களு டைய பெயர்கள் பாவச்செயல் செய்வோரின் பட்டியல் புத்தகத்தில் எழுதப்படும் என நம்புகின்றார்கள். வழமையாக பெற்றோர் கள் தங்களுடைய பிள்ளைகள் குரானை படிப்பதற்காக சமய ஆசிரியர்களை நியமிப்பார்கள். ஆனால் படிப்பித்தவற்றின் அர்த்தத்தை படிப்பவர்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி கட்டாயமானது என இறைதூதர் தெளிவாகக் கூறியபோதும் முகத்திரையானது உள்ளூர் சமய ஆசிரியர்களிடம் கல்விகற் பதைத் தடைசெய்கிறது அல்லது உற்சாகப்படுத்தத் தவறுகின்றது. பெண்கள் சமய ஒன்றுகூடலிலோ, பள்ளி வாசலுக்குள்ளோ, கூட்டங்களுக்கோ, விழாக்களுக்கோ அனுமதிக்கப்படுவதில்லை.

இதனாலேயே சமூகமானது எப்பொழுதும் திருமணமாகாத பெண்களைக் கீழ்த்தரமாக நோக்குகிறது. திருமணத்தின் பின் கணவனே அவளுடைய வாழ்க்கை. இஸ்லாத்தின்படி ஒரு பெண்ணின் கணவன் அவளுடன் எல்லா வகையிலும் திருப்தியடைந்தால் மட்டுமே அவள் சொர்க்கத்திற்குள் நுழையலாம்.

பெண்களைத் தாழ்த்தி வைக்க பிரபலமான பல நம்பிக்கைகள் உண்டு. உதாரணமாக கணவனின் காலடியிலேயே பெண்ணின் சொர்க்கம் உள்ளது என்று சொல்வது. மனைவி கணவனிடம் அடிவாங்கிய பகுதியானது புனிதமாக மாறும் என்பது மற்றொன்று. ஒரு மனைவியிடம் அவள் கணவனுக்குக் கீழ்ப்படிந்து. நேர்மையானவளாக பக்தியுள்ளவளாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கீழ்படிவுக்கு குறிப்பாக கணவன் கூறுவதை எதிர்ப்பின்றி கேட்கவேண்டும் என்பதே அர்த்தம் அவளது கணவனின் காலைத் தொடுவதுடன் அவனது பெயரை ஒருபோதும் உச்சரிக்கவும் பெண் அனுமதிக்கப்படுவதில்லை.

முஸ்லிம் சட்டத்தின்படி திருமணம் ஒரு உடன்படிக்கையாகும். தேவையானபோது விவாகரத்து செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இதற்கான நிபந்தனைகள் தெளிவானதும் நிலையானதுமாகும். ஆனால் அதிகமான சந்தர்ப்பங்களில் முஸ்லிம் கணவன் விவாகரத்து நிபந்தனைகளை மீறியே செயற்படுகிறான். எந்த நேரத்திலும் எந்தக் காரணமுமின்றி அவனுடைய மனைவியை அவன் விவாகரத்து செய்யலாம்.

**ஆங்கிலத்தில்:**
**நாகார் சௌவுதிரி**
(பங்களாதேஷ்)
**தமிழில்:**
**H.A.S. செல்லம்மா**

## இருள்!

சிதழுறும் காயங்களிடையே
நானிருந்தேன்
சிதைந்து போன மைந்தரின்
வேதனை ஓலங்கள் என்னை உறுத்தின
நான் வேதனையுற்றேன்

தொலைதூரங்களில்
மறைந்து போகும் மைந்தரின் முகங்களை
நான் அறியேன்
அந்த முகங்களில்
அறிவு இருந்ததா அழகு இருந்ததா
என்று நான் கேட்கப் போவதில்லை

தியாகங்கள் மட்டுமே தெரிந்த
மைந்தரின் நினைவுகளை
பழிக்க என்னால் இயலவில்லை.
கிளர்ந்த வேகத்தில்
கிடைத்த பஸ்ஸிலேறிய
இளந்தளிர்கள்.
காற்றின் திசையில் அள்ளப்பட்டவர்
மேலொரு கேள்வியை எறிய
என்னால் இயலவில்லை!

நேற்றுங்கூட இருவர்
மாண்டு போயினர்.
நான் விபரமாகக் கேட்கவில்லை

கருணையுள்ளோரே கேட்டீரோ?
காகங்கள் கரைகின்றன:
சேவல் கூவுகின்றது:
காற்றில் மரங்கள் அசைகின்றன:
மரணங்கள் நிகழ்கின்றன!

இன்று பிறந்தபூதம்
நாளைய கனவைத்தின்று தீர்த்தது.
காவிய இருள் கவிந்திருந்தது.

காலந்தான் உருண்டது
கனிகளைப் பறிக்கத் தொலைதூரம்
போனவரைக் காணவில்லை:
தொலைதூரம் போவதற்கு
கனவழிகள் சொன்னவரைக்
காணவில்லை!

ஒளியைத் தேடும்
என் உணர்வுகளிற்கும் பதிலில்லை!

2.
என்னை ஒறுத்து ஒறுத்து
அழித்துக் கொள்கையில்
என் மகன் போயிருந்தான்
தன்னை அர்த்தப்படுத்தவென்று.

என் கனவுகள் வீழவும்
மண்ணின் குரலிற்கு
செவியீந்து போயிருந்தான்.

இயலாது:
உன் பிரிவைத் தாங்க என்னால் இயலாது.
இல்லை:
அவன் என்னிடம் இல்லை.
மண்ணின் குரலிற்கு
பதிலுடன் போயிருந்தான்.

என்னை உறுத்தும்
நினைவுகளைச் சொல்வேன்.
நொந்துபோன என் நாட்களின்
வேதனைச் சுமையினைச் சொல்வேன்
சிதழுறும் காயங்கள் பேசும்
மொழியினில்
என்னைப் பேசவிடுங்கள்!

இறுதியாக
என்னிடம் வந்திருந்தான்
அவனது தேகம் குளிர்ந்திருந்தது
இரத்த முறுஞ்ச நுளம்புகள் வரவில்லை.
ஈக்களை அண்ட
நான் விடவில்லை.

11 டிசம்பர் 90

**- அஸ்வகோஸ்**

# 75வது இதழ் சரிநிகரின் கொள்கையை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது!

சரிநிகர் எழுபத்தைந்து இதழ் வந்ததையிட்டு நாம் எல்லோருமே மகிழ்ச்சியடைவதுடன் சரிநிகர் ஆசிரியர் பீடத்திற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். 75வது இதழ் இருபது பக்கங்களுடன் மிகவும் காத்திரமாகவே வந்திருக்கிறது. சரிநிகரின் முதலாவது காலடியும் அதன் 75வது காலடியும் பத்திரிகையானது தனது வளர்ச்சிப் போக்கில் எவ்வளவு விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது என்பதைக் காட்டுகிறது.

முதலாவதாக நாசமறுப்பானின் ''யுத்தம் ஆம் மனிதாபிமானத்துடன்'' என்ற தலைப்பிலான மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்களின் பத்திரிகை அறிக்கை தொடர்பான விமர்சனக் கட்டுரையைப் பார்த்தேன். இக் கட்டுரையின் தலைப்பே மிகவும் கிண்டலானது. கிண்டல் எனும் பொழுது பல்கலைக் கழக ஆசிரியர்களின் அறிக்கையைக் கிண்டல் பண்ணுவதற்கு அப்பால், சமாதானம் ஆம் ஜனநாயகத்துடன் என்ற கோசத்தைக் கிண்டல் பண்ணுவதற்காகவே இத் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இப் பத்திரிகையின் 6வது பக்கத்தில் ஜனநாயகத்துடனான சமாதானத்திற்காகப் போராடி வரும் மனோரஞ்சனின் யுக்திய பத்திரிகையுடனான நேர்காணலும் வெளிவந்துள்ளது. எனவே இத் தலைப்பானது ''சமாதானம் ஆம் ஜனநாயகம்'' என்ற கோசத்தை நாசமறுப்பான் மிகவும் கொச்சைத்தனமாக நோக்குவதையே காண்பிக்கின்றது. வட-கிழக்கை பொறுத்தவரை எவ்வளவு தூரம் சமாதானம் முக்கியமோ அவ்வளவு தூரம் ஜனநாயகம் முக்கியம் என்பதை மறுப்பதற்கில்லை. சரிநிகர் பத்திரிகை கூட புலிகளின் தடையால் இதுவரை யாழ்ப்பாணம் போனதில்லை என்கின்ற ஆசிரியரின் வருத்தத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு பத்திரிகையோ இல்லையேல் புலிகள் தவிர்ந்த வேறு யாராலும் ஒரு கூட்டத்தையோ கூட்ட முடியாத நிலைதான் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது என்பதை சரிநிகர் ஏற்றுக் கொள்ளும் என நம்புகிறேன். பத்திரிகை சுதந்திரமும், ஜனநாயகமும் சிங்கள மக்களுக்கு மாத்திரம் அல்ல. தமிழ் மக்களுக்கும் வேண்டும் என்பதில் சரிநிகருக்கு இரு வேறு கருத்து இருக்க முடியாது. இலங்கையின் தென்பகுதியில் அரசாங்கம் பத்திரிகைத் தணிக்கையைக் கொண்டு வந்து விடுமோ என்ற ஐயப்பாட்டினைக் கூட கடந்த சரிநிகர் கிளப்பியிருந்தது. அது மாத்திரம் அல்லாமல், சண்டே லீடர் என்ற ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் தாக்கப்பட்ட போதும் சரிநிகர் ஓங்கிக் குரல் கொடுத்தது. இவை பாராட்டப்பட வேண்டிய விடயங்கள். ஆனால் அதே சமயம் சரிநிகர் பத்திரிகையில் யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய பத்திரிகை சுதந்திரம் தொடர்பாக அங்கிருக்கக் கூடய ஜனநாயக சூழ்நிலை தொடர்பாக எத்தனை கட்டுரைகள் சரிநிகரில் வெளிவந்துள்ளன என சரிநிகர் ஆசிரியர் பீடத்திடம் கேட்க விரும்புகிறேன். ஏனெனில் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கையை வரிக்குவரி விமர்சனத்திற்குள்ளாக்கியிருக்கும் நாசமறுப்பான் அவர்கள் மனிதாபிமானத்துடன் அரசாங்கம் யுத்தம்புரிய வேண்டும் என அவ் அறிக்கைக்கு விளக்கம் கொடுக்க முற்படுவதானது அவரின் மேதாவிலாசத்தை அல்ல, மாறாக இன்றைய அரசியல் நிலை தொடர்பான அவரின் புரிதலையே காட்டுகிறது.

எந்த ஒரு தனிமனிதனுக்கும் அவனுக்கே உரிய சொந்த அரசியல் கருத்துக்கள் இருக்கலாம். அதேபோல் நாசமறுப்பானுக்கும் இருக்கலாம் எனில் ஏன் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு சொந்த அரசியல் கருத்துக்கள் இருக்கக் கூடாது? மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதுடன் அவர்கள் நின்று விட வேண்டுமென நாசமறுப்பான் விரும்புவதாகத் தோன்றுகிறது. ஆனால் ஓர் அரசியல் கருத்தில் உள்ளவர்கள் ஆவணப்படுத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டால் அவ்வேலைகள் கேள்விக்குரியதாகிவிடும் என அவர் சிந்திப்பதும் தவறான கருத்தாகும். இன்று தமிழ் மக்களின் நிலை தொடர்பாக தமிழ் புத்திஜீவிகள் யாருமே எழுதவோ பேசவோ தயங்குகின்றார்கள் என்பதும் உண்மை. அப்படி யாராவது எழுதுவதாயின் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பத்திரிகைகளில் அவர்களின் துதி பாடுபவர்களாகவோ அல்லது கொழும்பில் இருந்து வரும் பத்திரிகைகளில் புலிகளுக்கு நோகாமலோதான் எக் கட்டுரையும் எழுதப்படுகிறது. வீரகேசரி வாராந்தப் பத்திரிகையில் வரக்கூடிய அரசியல் கட்டுரைகளாக இருந்தாலென்ன, இல்லையேல் சரிநிகர் பத்திரிகையில் வரக்கூடிய பெரும்பாலான கட்டுரைகள் கூட அதே தன்மையில் வருகின்றன. நாசமறுப்பானின் இந்தக் கட்டுரை கூட புலிகள் மீண்டும் யுத்தத்திற்கு போனதை நியாயப்படுத்துவதாகவே உள்ளது. அவரது கட்டுரையின் கடைசிப் பகுதியில் ''புலிகளுக்கும் தனக்குமிடையில் நிறையக் கருத்து வேறுபாடுகள் உண்டு. புலிகளின் கருத்துக்கள் பலவற்றைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூற முற்படுவதானது தான் புலி அபிமானி அல்ல என்று காட்டிக் கொள்ள உதவுமே தவிர, அவரது முழுக் கட்டுரையையும் வாசித்தால் புலிகளின் யுத்த மீறலை எவ்வளவு தூரம் நியாயப்படுத்தியிருக்கிறார் என்பது புரியும்.

வெறுமனே அமைதி, சமாதானம் என்று கூறுவதன் மூலமோ இல்லையேல் யதார்த்தத்திற்குப் புறம்பான சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதன் மூலமோ சமாதானம் வந்து விடாது. யதார்த்த நிலையை ஒட்டி அதற்கு ஏற்ப எமது கருத்துக்களும் முடிவுகளும் அமைய வேண்டும். கற்பனையில் சமாதானம் வந்து விடமுடியாது. அதற்கான வழிமுறைகளை அலசி ஆராய வேண்டும். அரசாங்கம் பதவிக்கு வந்த உடனேயே சரியான ஓர் அரசியல் தீர்வை முன்வைத்திருக்க முடியும். ஆனால் அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை. புலிகளுடன் பேசி ஒரு தீர்வை எட்டுவதே அவர்களது நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால் எவ் அரசியல் விடயங்களும் பேசப்படவில்லை. மொத்தத்தில் அரசின் அணுகுமுறையில் குழப்பங்கள் இருந்திருக்கலாம். ஆனால் அரசியல் பேச்சுவார்த்தையையே ஆரம்பிக்காமல் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி உடனடியாகவே யுத்தத்திற்கு போனது சரியா? நாசமறுப்பான் அதனை ஏற்றுக் கொள்கின்றாரா? உண்மையில் மூன்றாவது யுத்தத்தின் மூலம் தனிநாடு கிடைத்துவிடும் என நாசமறுப்பான் நம்புகிறாரா? இல்லையேல் உரிமைகளை பேரம்பேசக் கூடிய வகையில் புலிகளின் பலமில்லை. எனவே மேலும் அவர்கள் பலமாக வேண்டும் என நாசமறுப்பான் விரும்புகின்றாரா? ஏனெனில் இக் கட்டுரையில் புலிகள் யுத்தத்திற்கு போனதை இவர் மிகவும் கண்மூடித்தனமாக ஆதரிப்பதையே காண முடிகின்றது.

உண்மையாகவே புலிகள் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வினை விரும்பியிருந்தால் அவர்களால் இப் பேச்சுவார்த்தையே முன்னெடுத்துச் சென்றிருக்க முடியும். எந்த ஒரு பகுத்தறிவு வாதியும் புலிகள் சரியான காரணங்களுக்காகத்தான் பேச்சுவார்த்தையை குழப்பினார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையையும் விட ஒருபடி மேலாகவே அவர்களின் யுத்தநிறுத்த மீறலுக்கு நாசமறுப்பான் வக்காலத்து வாங்குகின்றார். பல்கலைக் கழக ஆசிரியர்கள் புலிகளின் மீதுதான் கோபத்தையும் குரோதத்தையும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் மீதல்ல என்று கூறும் கட்டுரை ஆசிரியர் தனது முழு எழுத்திலும் அரசாங்கத்தையும் பல்கலைக் கழக ஆசிரியர்களையும் கண்மூடித்தனமாக எதிர்த்தாரே தவிர புலிகளின் பிழையான போக்குகளை அவர் எவ்விடத்திலும் கண்டிக்கவில்லை. புலிகள் யுத்தம் புரிகின்றார்கள். அவர்களுடன் பேசாமல் சமாதானம் ஏற்பட முடியாது என்பது உண்மை. ஆனால் யாருக்காக யுத்தம் புரிகின்றார்கள்? தமிழ் மக்களுக்காகவா அல்லது தமக்காகவா? தமிழ் மக்களுக்காக யுத்தம் புரிவதாக இருந்தால், அவர்க

தொடர்ச்சி பக்கம் 15இல்

# ஒடுக்குமுறைக்கு எதிரான யுத்தம் கொடுங்கோன்மையானதா?

சரிநிகர் வெற்றிகரமாக தன் எழுபத்தைந்தாவது இதழையும் வெளியிட்டிருக்கிறது. இவ்விதழில் தனது ஆசிரிய பீடத்தின் கொள்கை விளக்கத்தை வெளியிட்டிருக்கிறது. சரிநிகரின் எழுபத்தைந்தாவது இதழ். அதில் அதனது ஆசிரிய பீடத்தினர் யுத்தத்தை தாம் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்திருப்பதாகவும் ''யுத்தம் என்பது யுத்தம்தான்! அதற்கு ஒருபோதும் மனிதாபிமான முகம் இருக்க நியாயமில்லை! நீண்ட யுத்தத்தின் தர்க்க ரீதியான முடிவு கொடுங்கோன்மையே அன்றிச் சமாதானமல்ல!'' எனவும், இன்றைய பிரச்சினைக்கான தீர்வு தமிழ், முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமையை (கவனிக்க; மலையக மக்களை வசதியாக மறந்துவிடுகின்றனர்) அங்கீகரித்து நடைமுறைப் படுத்துவதுதான் என்றும் கூறுகின்றனர்.

சுயநிர்ணய உரிமை என்பதற்காகப் பலரும் பல்வேறு விளக்கங்களைக் கூறி வருகின்றனர். சரிநிகர் ஆசிரிய பீடம் கூறும் சுயநிர்ணய உரிமை யாதோ? அது அவர்களுக்கே வெளிச்சம்? சுயநிர்ணய உரிமையை அரசியல் சார்ந்ததாக குறுக்கி விடுவதை நிராகரிக்க வேண்டும். (மனிதாபிமானத்தையும் கலக்க வேண்டுமாக்கும்!) என்று கூறுவதனூடாக அப்பெரும் பொறியிலிருந்து தப்ப முயல்கின்றனர் ஆசிரிய பீடத்தவர்கள்.

யுத்தம் கொடுமையானது என்பது பாமரனுக்கும் தெரிந்ததே. எல்லோரும் யுத்தமின்றி வாழவே விரும்புகின்றனர். சிங்கள தேசம் யுத்தம் புரியாமலே தமிழ்த் தேசத்தை ஒடுக்க ஆசைப்படுகின்றது. தமிழ்த் தேசமோ யுத்தம் செய்யாது தனது விடுதலையைப் பெற முடியாதா? என ஏங்குகிறது. ஆனால் இவற்றுக்குக் குறுக்கு வழிகள் எவையாவது உள்ளனவா? சரிநிகர்தான் காட்ட வேண்டும்.

தமிழ்த் தேசத்தின் விடுதலையானது, சிங்கள தேசத்தின் முழுமையான அழிவுக்கு வழிகோலும் என்பதாக சிங்கள தலைமைத்துவங்களில் இருந்து பாமரர்கள் வரை கற்பிதம் செய்யப்பட்டு அது வலுவாக ஊறிப் போய்விட்ட இன்றைய யதார்த்தத்தில், சமாதானமாக எப்படிப் பிரச்சினை தீரும்?

இன்று நடந்து கொண்டிருக்கிற யுத்தத்திற்கான பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் யார்? சந்தேகமில்லாமல் ஒடுக்கும் தேசமான சிங்கள தேசமே! அப்படியானால் யுத்தத்தைப் பொதுவாக எதிர்க்கும் போது அது, தனது விடுதலைக்கு வேறு மார்க்கமின்றி தமிழ்த் தேசம் நடாத்தும் யுத்தத்தையும் எதிர்க்கின்றதல்லவா? இது தமிழ்த் தேசத்தைப் பலவீனப்படுத்துவதும் சிங்கள தேசத்தைப் பலப்படுத்துவதுமாகும். அதாவது நிலவுகின்ற ஒடுக்குமுறையை ஏற்றுக் கொள்ளும்படி கோருகின்றது. இவ்விடயத்தில் சரிநிகர் ஆசிரிய பீடம் தமது கொள்கையாக வகுத்துக் கொண்ட ''எங்கெங்கு அசமத்துவம் நிலவுகிறதோ அங்கங்கு எங்களுடைய தாக்குதல்கள் இடம்பெறும்'' என்பது வெறும் ஏமாற்றா?

''எங்களுக்கு முன்னால் அதிக தெரிவுகள் இல்லை. ஒன்று - சமத்துவம், சகோதரத்துவம், எல்லாவற்றிலும் பன்மைப்பாடு, கருத்தாடல். மற்றது - கொடுங்கோன்மை, யுத்தம். மக்களதும் எங்களதும் தெரிவு முன்னது. வடபுலத்தும், தென்புலத்தும் ஆட்சியாளரது தெரிவு பின்னது'' என்கிறார்களே, இங்கு மக்கள் என்பதற்குள் சிங்களவர், ஈழத் தமிழர், முஸ்லீம்கள், மலையகத் தமிழர் ஆகியோர் அடங்குகின்றனர் என்பதும், ஒவ்வொரு மக்கட் பிரிவினரும் ஒவ்வொரு வகையாகவும் வெவ்வேறு அளவுகளிலும் இவ் யுத்தத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பாக ஈழத் தமிழர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பவற்றையெல்லாம் கவனத்தில் கொள்கின்றனரா? தமிழர்கள் யுத்தம் வேண்டாம் சமாதானம் வேண்டும் எனும் போது தமக்கு விடுதலையோ, வேறு உரிமைகளோ தேவையில்லை என்றும், சிங்களவர் நாம் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குவோம் யுத்தம் வேண்டாம் என்றுமா கோருகின்றனர்? உண்மையில் ஒவ்வொரு மக்கட் தரப்பினரும் தமது நலன்களை இழக்காத வகையிலும் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்காமலுமே சமாதானத்தைக் கோருகின்றனர். வடபுலத்தும் தென்புலத்தும் ஆட்சியாளர்கள் ஆகாயத்திலிருந்து குதித்தவர்களல்ல. அவர்கள் இதே மக்கட் சமூகங்களிலிருந்து மேற்கிளம்பியவர்களே.

ஜனநாயகத்துடனான சமாதானத்தைக் கோருபவர்களின் முகம் ஏற்கனவே கிழிந்து விட்டது. ''தமிழ்த் தேசத்துக்கு ஜனநாயகம் வேண்டுமா இல்லையா என்பதைத் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்!'' என ஒரு சிங்கள புத்திஜீவியான விக்டர் ஐவன் கூடகருத்து வெளியிடும் போது இந்த ஜனநாயக விரும்பிகள் தமிழ்த் தேசத்தை இன்னும் பயங்கரமாக ஒடுக்கி வழிக்குக் கொண்டு வரவேண்டும் எனக் கூறுவதை என்னவென்பது!

ஆக எல்லோருமே இங்கு நான்கு தேசங்கள் நிலவுவதையும் அவை ஒவ்வொன்றுமே ஏனையவற்றின் சுயநிர்ணய உரிமையை (பிரிவினை உட்பட) பரஸ்பரம் அங்கீகரிக்காதவரை அவற்றுக்கிடையிலான யுத்தம் தவிர்க்க முடியாதது என்பதையும் விளங்கிக் கொள்ளாது சிங்கள தேசம் பெருந்தன்மையாக ஏனையவற்றின் உரிமைகளை வழங்க வேண்டும்! ஒடுக்கப்படும் தேசங்கள் உரிமைகளுக்காக மூர்க்கமாகப் போர் புரியாது சமாதானமாகக் கேட்டுப் பெற வேண்டும் என்கிற தொனியில் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

யுத்தத்தினால் மனிதாபிமானம் கொலை செய்யப்படுகிறது என்பதாலும், தமிழ்த் தேசத்தின் சார்பாகப் போராடுகின்ற புலிகள் தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கவில்லை என்பதற்காகவும், தமிழ்த் தேசம் முஸ்லீம் தேசத்தை ஒடுக்க முனைவதாலும் இந்த யுத்தம் வேண்டாம் என ஒருவர் கருதுவாராயின் அவர் எவ்வளவு நேர்மையான மனிதாபிமானியாக, ஜனநாயகவாதியாக இருப்பினும் அவர் ஒடுக்கும் தேசத்தை ஆதரிப்பவராகவே கொள்ளப்படுவார். ஏனெனில் யதார்த்தத்தில் ஒடுக்குமுறை நிலவிவருகிறது.

இந்த மனிதாபிமானிகளும் ஜனநாயகவாதிகளும் அவரவர் கொள்கைகளில் உண்மையான பற்றுடையவர்களாயின், அவர்கள் செய்ய வேண்டியது ஒடுக்கும் தேசம் புரியும் யுத்தத்தை எதிர்ப்பதோடு, ஒடுக்கப்படும் தேசங்கள் ஒடுக்கும் தேசத்திற்கெதிராகப் புரியும் யுத்தத்தை நிபந்தனையின்றி ஆதரிப்பதுதான்! அப்படிச் செய்யும் போதே, நீண்ட காலத்தின் பின்பாயினும் இவர்கள் விரும்பும் மனிதாபிமானம், ஜனநாயகம், சமாதானம் நிலவ வழியேற்படும். மாறாக உடனடியாக எல்லாத் தரப்பையும் யுத்தத்தை நிறுத்துமாறு கோருவது தற்காலிகமாக மனிதாபிமானத்தையும், ஜனநாயகத்தையும், சமாதான சகவாழ்வையும் கொண்டு வருவது போலத் தோன்றினாலும்; அது உண்மையான நேர்மையான அர்த்தத்தில் அவற்றைக் கொண்டு வராது.

பலரும் தனி மனிதர்களுக்கிடையிலான மனிதாபிமானத்தையும் ஜனநாயகத்தையும் முதன்மைப் படுத்த முற்பட்டு, சமூகங்களுக்கிடையிலான மனிதாபிமானம், ஜனநாயகம் நிலவ வேண்டியதை மறந்து விடுகிறார்கள். தனிமனிதர்களுக்கிடையில் மனிதாபிமான, ஜனநாயகப் பண்புகள் வளர வேண்டுமாயின் சமூகங்களுக்கிடையே ஜனநாயகம் மனிதாபிமானம் நிலவ வேண்டியது முன்நிபந்தனையாகும். அவ்வாறானதொரு சமுதாயப் புரட்சி நிகழும் வரை யுத்தமும் நடந்து கொண்டேயிருக்கும்.

**சி. நந்தகோபன்**
**வவுனியா**



நாடக வரலாறு பதிவு செய்வது மாற்றங்களையே. வழக்கமான சமன்பாட்டு வடிவில் (formula) படைக்கப்படும் எந்தப் படைப்புக்களையும் எந்த உலக நாடக வரலாற்று ஆசிரியனோ நாடக விமர்சகனோ பதிவு செய்யும் வழக்கம் கிடையாது. திருமறைக் கலாமன்றப்படைப்புகளும் சிறப்பானவை என விமர்சிக்கப்பட அது நீண்ட ஒரு கலைப் பயணத்தை மேற் கொள்ளவேண்டும் என்பதே எமது பணிவான கருத்தாகும். இல்லையெனில் நாடக ஆர்வமொன்றையே உரமாகக் கொண்டு நாட்டின் மூலை முடுக்குகளில் எவ்வித வசதியுமற்று நாடக மாடும் கலைஞர்களையும் மன்றங்களையும் கூத்தர்களையும் கலைப்பிரக்ஞை பற்றி கருத்தில் கொள்ளாது பதிவு செய்யவேண்டிவரும். அது அர்த்தமற்ற பதிவாகும்.

இவை பற்றியெல்லாம் கருத்திக் கொள்ளாது தமிழ்ப் பண்பாடு காப்பதற்கென ஆடல் பாடல்களுடன் சீவகனையும் காதலியையும் மேடையில் தோன்ற விடுதல் மட்டுமே எவ்வளவு தூரம் எம் கலையை வளர்க்க உதவும் என்பதே எமது வாதமாகும். இங்கு தமிழ்ப்பண்பாடு என்பது வீரமும் காதலும் மட்டுமல்ல அத்தோடு நடிகமணி வைரமுத்துவையும் கலையரசு சொர்ணலிங்கத்தையும் இங்கு துணைக்கழைப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை.

ஒரு கலைப்படைப்பில் தேவை கருதி எந்த அம்சத்தையும் இணைக்கலாம். அதன் பொருத்தப்பாடுதான் இங்கு முக்கியமாகும். கலைக்கு வெளியே

# சமகால நாடகப் போக்குகளும் திருமறைக்கலா மன்றமும்

**நாடக வரலாறு பதிவு செய்வது மாற்றங்களையே!**

''நல்ல கலையெனில் பிற நாட்டார் அதனை மதிப்பர்'' என்ற பாரதியின் கருத்துக்களைக் கூறுவோர் தமக்குப் பொருத்திப் பார்ப்பதில்லை. நல்ல கலை படைப்பதே ஒரு மன நிறைவாகும். இதில் பெயர் புழுக்கு ஏங்குவதென்பது பொருத்தமற்றது இவ்விடத்தில் ஒருவர் மீது மற்றவர் பொறாமை கொள்ளுவது என்பதும் ஒருவரின் வளர்ச்சி மற்றவரின் திறனை மறைத்துவிடும் என்பதும் முரணான கருத்துக்களாகும்.

நல்ல கலையைப் படைப்பதாகக் கூறும் திருமறைக்கலாமன்றம் பெயருக்கு ஏங்க வேண்டிய அவசியமில்லை. பிரமூகத்தனத்தை நாடவேண்டிய தேவையில்லை. திருமறைக்கலா மன்றத்தின் செயற் பாடுகளை ஒரு எல்லைவரை பாராட்டலாம். கலை நிறுவனங்கள் நடாத்துகின்ற விழாக்களில் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் நிகழ்ச்சிகளைப் பாராட்டுவது மரபு. இதனால் அவை உயர்ந்த படைப்புக்கள் என்று முத்திரை குத்துவது நாடகம் அறிந்தோர் செய்யும் வேலையல்ல. இங்கு மதம், மொழி, இனம் என்பவை பிரசசினைகளே அல்ல.

காலத்துக்கேற்ற கருக்களில் கலை நிகழ்வுகளை நிகழ்த்தி அலைகழிக்கப்பட்ட மக்களுக்கு ஆன்மீக ஆறு தலை வழங்கும் மத நிறுவனங்களையும் நாம் மறுதலிக்கவில்லை. அவை படைக்கும் படைப்புகளின் நோக்கம் ஆன்மீக ஆறுதல் அளித்தல் என்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

நாடகக்கலை பற்றி கூறிய கி.மு.5ம் நூற்றாண்டு அரிஸ்டோட்டிலின் கதாஸிஸ் (Cathasiss) எனும் நாடக தத்துவத்தை 20ம் நூற்றாண்டு பெர்டோல்ற் பிரெக்ற் (Bestoll Bescht) மறுதலிக்கிறார். அதாவது நாடகக் கதா பாத்திரத்துடன் பார்ப்போர் ஒன்றித்து உணர்ச்சிக்கழிவை ஏற்படுத்தல் என்பதும் அதன் மூலம் ஒருவகை மன அமைதி பெறுதல் என்பதும் கிரேக்கால நாடகங்களின் பயன் விளைவு. மாறாக சமகால மக்களின் பிரச்சினைகளைப் படைப்பாக்கி பார்வையாளன் கதாபாத்திரங்களுடன் ஒன்றித்து விடாமல் பிரச்சினையின் தீர்வுபற்றி அவனைச் சிந்திக்க வைக்க வேண்டும் என்கிறது 20ம் நூற்றாண்டு அந்நியமாதல் (alienation) எனும் தத்துவம்.

இதற்கும் மேலே ஒருபடி சென்று கலைப் படைப்புக்கள் மக்களைச் சிந்திக்க வைப்பதோடு மட்டும் நின்று விடாது அவர்களை செயலுக்கு தூண்ட வேண்டும் என்கிறார் சமகால இலத்தீன் அமெரிக்க நாடகவியலாளர் ஒகஸ்டா போல்.

அந்த அம்சம் துருத்திக் கொண்டு நிற்கக் கூடாது. அது கலையினுள் குழைக்கப்பட வேண்டும். வெறுமனே ஒட்டுதல்களை செய்வது கலைப்படைப்பாகாது. கண்கவர் ஒளிவீச்சுக்களையும் பிரமாண்டமான அரங்க வடிவங்களையும் பலவர்ண வேட உடுப்புக்களையும், பெருந்தொகையில் நடிகர்களையும் பதமாகவும் அளவாகவும் பொருத்தமின்றி இணைத்து மேடையில் படைத்தல் நல்ல கலையாகாது.

நாடகப் பட்டறைகள் பற்றிய பதிவுகள் பற்றியும் குறை கூறப்பட்டுள்ளது. கலாநிதி சி. மௌனகுரு குறிப்பிடும் றொபேர்ட் அவர்கள் எதுவித ஸ்தாபன பின்னணியும் இன்றி நாடக ஆர்வம் ஒன்றையே உரமாகக் கொண்டு கொழும்பில் பட்டறைகளை நடத்தியுள்ளார் என்பதை அவற்றில் பங்கு பற்றியோர் அறிவர். தேடல் உணர்வு கொண்டு ஆக்கத்தன்மையிலும் இயங்கியல் முறையிலும் நடாத்தப்படும் நாடகப்பட்டறைகளுக்கும் வெறும் இயந்திரரீதியாக தசைநார்களுக்கு திறன் பயிற்சிகளை வழங்கும் பயிற்சி நிறுவனங்களுக்கும் வித்தியாசம் உண்டு. பட்டறைகள் பொதுவாக நாடகப்படைப்பு அதன் கரு அது சார்ந்த சமூகம் அதன் பண்பாடு என்பவற்றின் அடிப்படையில் நடாத்தப்பட வேண்டும். இதுவே புதுமை விளைக்கும் ஆக்கமாகும். புதுமை விளைவிக்கும் பயிற்சிப்பட்டறைகள் காலத்தால் மதிக்கப்படுவதும் வெறும் பயிற்சி நிலையங்கள் தம் பணியை தொடர்வதற்கு அனுமதிக் கப்படுவதும் யதார்த்தமாகும்.

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பணியும் ஆர்வமும் மதிப்புக்குரியது. ஆனால் அது வேண்டத் தகாத கலைப் போக்கை ஸ்தாபிக்கவிடுதல் ஏற்க முடியாதது. தமிழ் சினிமா ஏற்படுத்திய பிழையான போக்கால் தமிழ் சினிமா உயிர் பெற முடிய்வில்லை என்பதை நாம் மனங் கொள்ளல் வேண்டும். பெண்ணியம், சமகால அரசியல், ஒழுக்கசீலம், மதம் எனப் பல்வேறு கருக்களையும் நாம் கையாள்கி றோம் என்பது வெறும் கண்துடைப்பே. ஆழமாக உணர்வுடன் படைக்கப்படுவதே நல்ல கலை என்பதை எவரும் ஒப்புக் கொள்வர்.

# போர்க்காலத்துக்கு....

நான் திடீரெனப் புகுந்தேன். அப்போதும் கடற்படைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தலைப்புச் செய்தியாக இல்லை. அது இரண்டாவது செய்தியாகவே இருந்தது. வெளிநாட்டு வியாபாரக் குழுவொன்றின் வருகையே மாலைச் செய்திகளில் பிரதான செய்தியாக இருந்தது. என்னுடைய சகல அதிகாரங்களையும் உபயோகித்துச் செய்தி அறிக்கையை மாற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழியிருக்கவில்லை.

இப்படியான பயத்தை அதிகமாகக் கொண்டிருப்பதற்காக, நான் அவர்களைக் குற்றம் கூறமுடியாது. என்னுடைய பக்கபலம் இருந்தாலும், அவர்கள் என்னுடையபதவி ஒரு அரசியல் நியமனம் என்பதைஅறிந்து இருந்தார்கள். உண்மையில் அவர்களைவிட நானே ஆபத்தான நிலையில் இருந்தேன் ஏனெனில் எந்த வேளையிலும் அரசாங்கம் என்னை வெளியேற்றலாம் என்ற நிலையே இருந்தது.

அதனால் ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இரண்டும் அரசியலமைப்பில் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை முக்கியத்துவப்படுத்தி வேலை செய்ய நான் நினைத்தேன்.

என்னை வியப்படையச் செய்தது உண்மையில் ரூபவாஹினி பொருளாதாரரீதியாக சுதந்திரமானதாக இருந்தமைதான். தனக்குத்தானே முதலிடுகிறதும் இதன் மிகப்பெரிய அளவிலான இலாபத்தைப் பெற்றுக் கொடுக்கின்றதும் இதனால் பெரிய வரி கொடுக்கும் நிறுவனமாகவும் இது இருக்கிறது. எனினும் இன்றுவரை இது அரசியல் ரீதியாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழாகவே உள்ளது. இந்த நிறுவனத்தை தனியார் மயப்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இதை கூட்டுத்தாபனமாகவே வைத்திருக்க வேண்டும். ஆனால் சுதந்திரமான ஒரு குழுவின் கீழ் இது கொண்டு வரப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் இதற்கு உடன்படும் என நான் நினைக்கவில்லை.

வளர்ச்சியடைந்த நாடுகளில் நீங்கள் கண்ட, தொடர்பூடக சுதந்திரம் மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொருத்தமானதல்ல என்று சிலர் கூறுகிறார்கள். இது பைத்தியக்காரத்தனமானது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் சரி.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவராக கிளர்ச்சிப் பிரதேசமான யாழ்ப்பாணத்திற்குச் சென்றேன். யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சிப் பிரிவொன்றை நிறுவும் சாத்தியப்பாடு தொடர்பாக இரண்டு விடுதலைப்புலித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினேன். இத்தகைய தொலைக்காட்சிப் பிரிவு ஒன்று தெற்கு மக்களுக்கு வடக்கில் அபிவிருத்தி தொடர்பாக தொடர்ச்சியான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பலாம், இதேபோல் தெற்கு தொடர்பாக வடக்கு மக்களுக்கும் ஒளிபரப்பலாம் என்ற ஒரு திட்டம். இதற்குப் புலிகள் சந்தோசமாக உடன்பட்டார்கள். ஆனால், நான் இந்த செய்தியை ஜனாதிபதிக்கு தெரிவித்த போது அவர், இந்த யோசனையை எதிர்த்ததுடன், இதற்குப் பதிலாக, வடக்கில் வாழும் தமிழர்களை மையப்படுத்தி நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கும்படி அரச கட்டுப்பாட்டிலுள்ள ஒளி/ஒலிபரப்புக்கு உத்தரவிட்டார். அத்துடன், பலாலி இராணுவ முகாமுக்கு தமிழ் நிகழ்ச்சிகளை வழங்கும்படி, ரூபவாஹினியிடம் கேட்கப்பட்டது. அங்கிருந்து, அவர்களுடைய ஒளிபரப்பி மூலம் ஒளிபரப்புச் செய்ய அவர்களுக்கு முடியும் இது, வடக்கில் இருந்து தெற்கிற்குத் தொடர்ச்சியாக செய்திகளை வழங்க ஆரம்பிக்க இருந்த எனது திட்டத்தை முற்றாகத் தடை செய்தது.

நான், இந்த நிறுவனத்தை பொறுப்பேற்றபோது கிழமை நாட்களில் 6 மணித்தியாலமும் வார இறுதி நாட்களில் 10 மணித்தியாலங்களும் ஒளிபரப்புக்கு என வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் ஏற்கனவே இருந்த மட்டும் பயன்படுத்தியே வளங்களை ஒவ்வொருநாளும் 18 மணித்தியாலங்கள் என ஒளிபரப்பை விரிவாக்கினார்கள். ரூபவாஹினி பொருளாதார ரீதியில், அரசாங்கத்திடம் தங்கியிருக்கவில்லை என்பதால் அரசாங்கம், ரூபவாஹினியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மிகப்பெரிய பயங்கரமான முயற்சிகளில் ஈடுபடுகிறது என்பது பெரிய பிரச்சினையயாகும்.

இதை தொடர்பூடகக் குழுக்களினூடாகவே செய்கின்றது. இது பத்திரிகையாளர்களல்லாத அரசாங்க ஆதரவாளர்களால் அடைக்கப்பட்ட குழுவாகும். வேலைநிறுத்தம், மறியல் போராட்டம், தொழிற்சாலைப் பிணக்குகள், போன்ற கருத்து வேறுபாடான பிரச்சினைகள் வரும் பொழுது நேர்முகம் காணும் மக்களை தெரிவு செய்வதற்கு பல யோசனைகள் முன் வைப்பார்கள். நுட்பமான எச்சரிக்கைகள் மூலம், எப்படி எங்களை கசக்கிப் பிழிவது என்று அவர்களுக்குத் தெரியும்.

என்வழியில் நான் போக முடிந்திருந்தால் மக்களுக்குப் போர் முனைச் செய்திகளைத் தெரிவிப்பதற்கு முழுச் சுதந்திரத்தையும் வழங்கியிருப்பேன். பாதுகாப்பு படைகளால், இந்த யோசனைகள் எதிர்க்கப்பட்டே இருந்திருக்கும்.

தனியார் நிறுவனங்கள் கூட, ஒலி, ஒளிபரப்பு அனுமதி பெற்றும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பது ஒரு பிரச்சினையாகும். தொடர்புரீதியில் ஏற்பட்ட புரட்சியானது, மக்களுக்குச் செய்திகளை செல்லவிடாமல் தடுப்பது என்பதை எந்த அரசாங்கத்திற்கும் சாத்தியமில்லாமல் பண்ணிவிட்டது என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

ரூபவாஹினிக்கு நியமிக்கப்பட்ட ஆரம்ப காலம் முதல், குறிப்பிட்ட பத்திரிகை ஒன்று அரசியல் விவகாரம் தொடர்பாக என்னைக் குற்றம் சாட்டியது. அரசியல், பார்வை இருப்பது என்பது மனித சுபாவம் என நான் நினைக்கிறேன். ஆனால், தேசிய தொலைக்காட்சி கூட்டுத்தாபன தலைவராக எனக்கு ஒரு கடமை உள்ளது. பயிற்றப்பட்ட பத்திரிகையாளராக, சுதந்திரமான செய்திகளையும், குறிப்பிட்ட பிரச்சினைகளில் சுதந்திரமான விவாதங்களையும் வழங்குவதற்கு எம்மை அர்ப்பணித்திருக்கின்றோம். பிரச்சாரம் செய்வதற்காக இங்கு எங்களிடம் எந்தவிதமாக இரகசியமாக நிகழ்ச்சி நிரல்களும் இல்லை.

எனக்கு இங்கு குறிப்பிட்ட வழியில் மட்டும் பிரச்சாரம் செய்யத் தேவையில்லை. அது அரசாங்கத்திற்கே தேவையானது. அவர்களே, சில பத்திரிகைகள், சில நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தடுக்கும்படி கூறினார்கள். இந்த இடத்தில் வால்டரின் கூற்றொன்றை குறிப்பிட விரும்புகிறேன் '' நீ சொல்லும் எந்த வார்த்தையுடனும் எனக்கு உடன்பாடில்லை ஆனால் அந்த வார்த்தைகளைச் சொல்ல உனக்குள்ள உரிமைக்காக நான் இறக்கும் வரை போராடுவேன்!'' நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பலருடைய கருத்துக்களுடன் நான் உடன்படாத போதிலும் விவாதத்தில் பங்கேற்க வைத்தேன்.

பேச்சுவார்த்தை முறிந்து, யுத்தம் ஆரம்பமாகிய பிறகு, எனக்கும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவருக்கும் பாதுகாப்பு படையினரை பாதிக்கும் விடயங்களை ஒளி/ஒலி பரப்ப வேண்டாம் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.

அவரும் மற்ற தொடர்பூடக ஆலோசகர்களும், போர்க்களத்தில் , நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பான நேரடி ஒளி/ஒலிபரப்புக்களை சமாளிக்க முடியாது எனத் தெரிவித்தார்கள். இப்படியான நிகழ்ச்சிகளை உடனடியாக நிறுத்தும்படி எனக்கு ஆலோசனை கூறினார்கள். நான் கூறினேன், ''போர்காலத்தில், தேசிய தொலைக்காட்சியில் தலைவராக இருப்பதற்கு நான் பொருத்தமானவனாக ஒரு வேளை இல்லாதிருக்கலாம். அதனால் நான் இராஜினாமா செய்கின்றேன்''

தமிழில். வசந்தாதேவி.

# 75வது இதழ் சரிநிகரின்...

ளின் உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் என அவர்கள் உறுதியாக நம்பினால் தமிழ் மக்களின் நலன்கள் காப்பாற்றப்பட வேண்டும் என நினைத்தால் அவர்கள் அரசுடன் பேசுவதற்கும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கும் இதுவே சரியான காலகட்டமாகும். ஆனால் தொடர்ந்தும் யுத்தம் என்று போவது மக்களுக்காக அல்ல. புலிகள் தமது குறுகிய நோக்கங்களை நிலைநாட்டிக் கொள்வதற்கும், ஏற்கெனவே தாம் பெற்றுள்ள நலன்களைப் பேணிப்பாதுகாப்பதற்குமே ஆகும்.

நாசமறுப்பானின் கட்டுரை பற்றி இன்னும் விரிவாக நாம் ஆராய முடியும் எனினும் இதனை இங்கு நிறுத்தி பத்திரிகையில் இருக்கக்கூடிய ஏனைய சில விடயங்களையிட்டு ஒரு கருத்தை மாத்திரம் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். பத்திரிகையின் 6ம் பக்கத்தில் ''தமிழ் மக்களின் தேவையும் புலிகளின் தேவையும் ஒன்று என்பது மூடத்தனமானது'' என்ற மனோரஞ்சனின் யுக்திய பத்திரிகையில் வந்த நேர்காணலின் தமிழாக்கமும், 7ம் பக்கத்தில் மனோரஞ்சனின்கருத்துக்களுக்கு நேர் எதிரான கருத்துக்களைக் கொண்ட ''சமாதானத்திற்கு குந்தகம் விளைவிப்பது யார்?'' என்ற விக்டர் ஐவனுடனான சரிநிகரின் நேர்காணலும், இதே போன்று 9ம் பக்கத்தில் ராம் மாணிக்கலிங்கத்தின் ''புலிகள் பேச்சுவார்த்தையைக் குழப்பியது நியாயமானது அல்ல'' என்ற சண்டே ரைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகையில் வந்த கட்டுரையின் தமிழாக்கமும், அதே பக்கத்தில் ''புலிகளுக்கு நம்பிக்கை தரக்கூடியதாக ஜனாதிபதி எதையுமே தெரிவிக்கவில்லை'' என்ற நேர் எதிர்க் கருத்துக்களைக் கொண்ட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியின் கட்டுரையும் சரிநிகர் பத்திரிகையின் கொள்கையை தூலாம்பரமாக வெளிக் கொணர்கின்றது.

சரிநிகர் ஆசிரியர் பீடம் மிக இலகுவாக எல்லாக் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆகவேதான் எதிர் எதிர் கருத்துக்களைப் பிரசுரிக்கின்றோம் என மிகவும் பெருந்தன்மையோடு குறிப்பிட்டு விடுவார்கள். ஆனால் சரிநிகரின் 75வது இதழை முழுமையாக வாசிக்கும் ஒருவருக்கு என்ன உணர்வு ஏற்படும். நாசமறுப்பான் கட்டுரை, சிவராமின் கட்டுரை, மனோரஞ்சன், விக்டர் ஐவனின் நேர்காணல்கள், மாணிக்கலிங்கம், மார்க் செனவிரட்னவின் கட்டுரைகள் ஆகியவற்றை வாசிக்கும் ஒருவர் புலிகளுக்காக மிகவும் மறைமுகமாகவும் சாதுரியமாகவும் அவர்களது கருத்துக்களை முதன்மைப்படுத்துவதைக் காணலாம். மனோரஞ்சன், ராம் மாணிக்கலிங்கம் போன்றோரின் கருத்துக்களை சிங்களப் பத்திரிகையாளர், சிங்கள இராணுவ அதிகாரியாகியோர் மறுக்கிறார்கள் எனக் காட்டுவதன் மூலம் மனோ ரஞ்சன், மாணிக்கலிங்கத்தின் கருத்துக்கள் பிழையெனக் காட்டவே சரிநிகர் ஆசிரியர் பீடம் முற்பட்டி ருக்கிறது.

இறுதியாக இது ஓர் புலிப் பத்திரிகை இல்லாவிடினும் அவர்களது கருத்துக்களுக்கு வடிவம் கொடுத்து அதனை முன்னெடுத்துச் செல்ல சரிநிகர் முற்படுவதாகவே நான் கருதுகின்றேன். தங்கள் பத்திரிகையும் அதில் வரும் ஆக்கங்கள் தொடர்பாகவும் நான் கூறிய கருத்துக்களைத் தயவு செய்து முழுமையாகப் பிரசுரிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன். 75வது இதழில் கூட்டணியின் சிவாவுக்காக ஈழமோகம், ''சிவாபுராணம்'' பாடியதைப் போல் சரிநிகருக்காக ஈழமோகம் ''புலி புராணம்'' பாடாமல் இருந்தால் சரி.

**எஸ். ரவீந்திரன்**
**பண்டாரிக்குளம்,**
**வவுனியா.**

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## மனச்சாட்சியின் குரல்!

மீண்டும் ஒருமுறை யுத்தம் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தெற்கிலிருந்து - கொழும்பிலிருந்து நாம் இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது நாட்டின் ஒரு பகுதியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டும், பெருந்தொகையானோர் காயப்படுத்தப்பட்டும், இலங்கை அரசாங்கத்தின் படையினரின் ஷெல் வீச்சுக்களால் அழிக்கப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதை நாம் எப்படி மறந்து விட முடியும்? பல்லாயிரக்கணக்கானோர் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாகியுள்ளனர். வடக்கு கிழக்கு மக்களுக்கு எதிராக நடாத்தப்படும் இந்த யுத்தத்திற்கெதிராக, சிங்கள மக்களால் எழுப்பப்பட்டு வரும் மிகவும் மெல்லியதான எதிர்ப்புக்குரலினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு எழுத்தாளன் என்ற முறையில் வட கிழக்கு மக்களின் துயரம் தோய்ந்த இந்தக் கணத்தில் அவர்களுடனான என்னுடைய ஒருமைப்பாட்டை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் முஸ்லீம் மக்கள் மீதான யுத்தத்தை நிறுத்துமாறும், அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை முன்வைத்து அதை நேர்மையாக நடைமுறைப்படுத்துமாறும் நாம் அரசாங்கத்தைக் கோருகிறோம்.

ஜனாதிபதி அவர்கள் சொல்வது போன்ற தீர்மானகரமானதும், உறுதியானதும், குறைந்தளவு அழிவுகளைக் கொண்டதுமான ஒரு யுத்தத்தின் அடுத்த கட்டத்தை முன்னெடுப்பதற்கு தேவையான ஆயுதங்கள் வந்து சேர்வதை அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இது ஈராக் /அமெரிக்க யுத்தத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்த கருத்தை எமக்கு ஞாபகப்படுத்துகிறது. பொதுமக்களுக்கு ஆபத்தில்லாத விதத்தில் துல்லியமான விமானக் குண்டுவீச்சுக்களை நடாத்துவதாக அவர் அப்போது அறிவித்திருந்தார். ஆனால் அவரது 'துல்லியமான' தாக்குதல்கள் ஆயிரக்கணக்கான ஈராக்கியக் குடிமக்களைக் கொன்றொழித்ததையும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியதையும் பின்நாளில் இந்த உலகம் அறிந்து கொண்டது. நமது ஜனாதிபதி இந்த அமெரிக்கப் பாணியிலான உறுதியானதும், தீர்மானகரமானதுமான யுத்தம் பற்றி அறிவிக்கும் அதேவேளை, இந்த அரசாங்கத்தின் யுத்தத்திற்கான இரகசியத் திட்டம் எது என்பது பற்றிய தகவல்களும் எமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்தத் திட்டம் முன்னர் கொப்பேக்கடுவவால் தயாரிக்கப்பட்ட திட்டமே என்றும், அது சில அமெரிக்க இராணுவ நிபுணர்களால் மேலும் செழுமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் இதனாலேயே அரசாங்க உயர்மட்டம் இத் திட்டத்தையிட்டு பெருமளவு நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த உயர் மட்டத்தின் செயற்பாடுகள் ஸேர்வண்டெஸ் என்னும் புகழ்பெற்ற ஸ்பானிய எழுத்தாளரின் டொன்கிஹோட்டே என்ற பாத்திரத்தின் தன்மைகளைக் கொண்டவை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். (டொன் கிஹோட்டே குதிரையேறிச் சென்று காற்றாடிகளுடன் சண்டைபிடித்த ஆசாமி! )

கொப்பேக்கடுவவின் திட்டத்தின்படி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதானால் மொத்தமாக ஐயாயிரம் பேரைப் பலிகொள்ள வேண்டியிருக்கும். இது மிகவும் குறைந்தளவான ஒரு மதிப்பீடாகும். உண்மையில் இவ்வாறானதொரு யுத்தத்தில் ஒரு நியாயமான மதிப்பீடாக சொல்வதானால் குறைந்தபட்சம் 30,000 பேராவது கொல்லப்படுவார்களென இப்போது அரசுதரப்பு உள் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இந்த நேரத்தின்முக்கியமான கேள்வி இதுதான்: இவர்கள் சொல்வது போல் உயிரிழப்புகள் வெறும் 5,000ஆகவே இருந்தாலும் கூட, இத்தகைய ஒரு யுத்தத்தை நடாத்த விரும்பும் அரசாங்கத்தையும், பிற அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் மற்றும் அறிவுத்துறையினரும் கூட்டாகவோ அல்லது தனியாகவோ இந்த யுத்தத்தை ஆதரிப்பதையும் எவ்வாறு ஒருவர் விளங்கிக் கொள்ள முடியும்? மிகவும் இலகுவாகவே மனித உயிர்கள் இதன்மூலம் அழிக்கப்படப் போவதில்லையா? மனித உயிர்களை தேர்தலில் வோட்டுப் போடுபவர்களாகவோ, அல்லது யுத்த காலத்தில் செத்த பிணங்களாகவும் காயமடைந்தவர்களாகவும் கணக்குப்பண்ணப்பட வேண்டியவர்களாகவோ தான் கருதுகின்ற எமது சமுதாயத்தின் தாராளவாத பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயக (Liberal Bourgeouise Parliamentary Democracy) வெற்றியின் இருண்ட பக்கம்தான் இன்றைய யுத்த மனோபாவம் என்று நான் சொல்லுவேன். யூ.என்.பி ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் 17 வருடங்களுக்கு மேலாக வளர்த்தெடுக்கப்பட்ட இந்த வகையான ஜனநாயகத்தின் அரசாங்கமும் அரசும், மக்களது உண்மையான அரசியலை - பொதுவாழ்க்கை சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக மக்கள் அச்சமின்றியும் வெளிப்படையாகவும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தை - முற்றாக மாற்றியமைத்து விட்டது. இந்த வகை ஜனநாயகத்தைப் பொறுத்தவரை முக்கியமானது அரசியலமைப்புச் சட்டம், சட்ட அமைப்பு/ அதிகார அமைப்பு/ தொழில்நுட்ப மேலாட்சி, நிபுணத்துவ மேலாட்சி என்பனவே. மக்கள் வெறுமனே அரசாங்கத்தினால் வழங்கப்படும் தீர்வுகளைப் பெற்றுக் கொள்பவர்கள் மட்டுமே.

பூர்ஷ்வா ஜனநாயகத்தின் இந்த இருண்ட பகுதி ஐரோப்பிய மையவாத அறிவுத்துறை வரலாற்று மரபின் (Eurocentric Intellectual tradition) இருண்ட பக்கத்தைத்தான் பிரதிபலிக்கின்றது. ஐரோப்பாவை மையங்கொண்ட இச் சிந்தனைப் பாரம்பரியம் விஞ்ஞானபூர்வமான அறிவுவாதத்தின் மூலம் எல்லாவற்றையுமே விளங்கப்படுத்தி விடலாம் என்று கண்மூடித்தனமாக நம்பியது. இந்த நம்பிக்கையிலிருந்து ஒருமுனைப்பான நவீனத்துவத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் தவிர்க்கமுடியாதது என்றும், உலகம் முழுமைக்குமே இதுதான் வழி என்றும் கருதியது. இந்த அடிப்படையில்பார்க்கும்போது நவீனத்துவத்தை எந்த அழிவின் மீதாவது கட்டியெழுப்பப் பயன்படுத்தப்படும் இன்னொரு வழிமுறையே யுத்தமாகும். உலகத்தை 'விழித்தெழச் செய்ய' விரும்பும் அரசியல்வாதிகளின் இந்த இலட்சியத்துக்கு எதிரான எந்தத் தடைகளும் எத்தகைய அழிவு ஏற்பட்டாலும் கூட அகற்றப்பட்டே ஆக வேண்டும். அது ஐயாயிரம் உயிர்களாக இருந்தாலும் சரி. முப்பதாயிரம் ஆயினும், சரிதான். இன்றைய பெரும்பான்மையான சிங்கள மக்களது யுத்தம் சம்பந்தமான அபிப்பிராயத்திற்குக் காரணம் வெறும் சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமல்ல. தொடர்பு சாதனவியலாளர்கள் புத்திஜீவிகள் போன்றோரும் தான்! இவர்களும் இந்தப் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு துணை போவதன் மூலமாக இக் கைங்கரியத்தையே ஆற்றி வருகின்றனர். ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படக் காரணமாக இருந்த புத்திஜீவிகள், தொடர்புசாதனவியலாளர்கள் மற்றும் தீவிர அரசியல்வாதிகள் ஆகியோர் இந்த அரசுடன் தம்மை இணைத்துக் கொண்டதன் மூலமாக சிங்கள சமூகத்தை ஒரு குறிப்பிடத்தக்களவுக்கு குழப்பத்துக்குள்ளாக்கியுள்ளார்கள். நாம் மேலே குறிப்பிட்ட மாதிரியுடன் அவர்கள் எவ்வளவு தூரம் ஒன்றிப்போயுள்ளார்கள் என்பதை அவர்களது அரசுடனான உறவு தெளிவாகக் காட்டுகிறது. உலகை 'விழித்தெழச் செய்யும்' கனவுகளுடன் அரசாங்கத்தில் இணைவதற்காகவே அவர்கள் இத்தனை நாட்களாக காத்துக் கொண்டிருந்தார்கள். யுத்தநிலை அவர்களது கனவுகள் நனவாவதற்கு தடையாக இருப்பதால், எத்தகைய அழிவுகள் ஏற்பட்டாலும் சரி அதை நடத்தித்தான் ஆக வேண்டும்! சிங்கள மக்களது இன்றைய யுத்த எதிர்ப்புக்குரலின் நலிந்த தன்மையை இது விளக்குகின்றது. ஆயினும் இதை ஒரு தற்காலிகமான பின்னடைவு என்றே நான் கருதுகிறேன். காலம் தாழ்த்தியோ தாழ்த்தாமலோ சிங்கள மக்களது யுத்தத்திற்கெதிரான குரல் ஓங்கி ஒலிக்கத்தான் போகிறது என்பதுமட்டும் உறுதி. இல்லாவிட்டால் தொலைந்தது சிங்கள சமூகம்!

இம்முறை இப் பத்தியில் வெளிவந்திருப்பது விருந்தினர் ஆசிரியர் தலையங்கம். இதை குமுது குஸும் குமார அவர்கள் எழுதியுள்ளார். - ஆ.ர்.

## இவர்களையும் காணவில்லை!

கொழும்பில் காணாமல் போகும் தமிழர்களைப் பற்றிய தகவல்களை சரிநிகர் தொடர்ந்தும் திரட்டி வருகிறது. ஒருபுறம் இளைஞர்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கிற அதேநேரம் மறுபுறம் ஏரிகளில் சிதைந்த நிலையில் அடையாளம் தெரியாத சடலங்கள் கிடைத்து வருவதைப் பற்றி சென்ற இதழிலும் எழுதியிருந்தோம். இதோ மேலும் சில தகவல்கள். ஜூன் 29ம் திகதி இரவு 9.45மணியளவில் ஹெவ்லொக் வீதியில் உள்ள கடை ஒன்றில் வைத்து வோக்கி டோக்கி, துப்பாக்கி சகிதம் சிவில் உடையில் வந்த நபர்களால் கைவிலங்கிடப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட தம்பித்துரை வரதராஜா (24) ரட்ணம் நீதிராஜா(23) ஆகிய இருவரும் காணாமல் போயுள்ளனர். தகவலறிய உறவினர்கள் முயற்சித்த போதும் இன்றுவரை தகவல் எதுவுமில்லை. ஏப்ரல் 30ம் திகதி கைது செய்யப்பட்ட சீனன்குடாவைச் சேர்ந்த மகேந்திரன் ரமேஷ் பற்றி இன்னமும் தகவல் இல்லை. மேமாதம் 2ம் திகதி வெள்ளைமலை வாவியில் வைத்து கைது செய்யப்பட்ட ஆசீர்வாதம் மரியதாஸ், வேலாயுதம் சிவலிங்கம் ஆகிய இருவரும் இன்னமும் இல்லை.

மேமாதம் 14ம் திகதி சூனன்குடாவில் வைத்து கைது செய்யப்பட்ட கிருஷ்ண பிள்ளை சந்திரராஜா மே 20ம் திகதி கைது செய்யப்பட்டவர். கட்டைபறிச்சானைச் சேர்ந்த சுப்பமணியம் சித்திரவேல் ஜூன் 4ம் திகதி கைது செய்யப்பட்டவர். செல்லையா நாகராஜன் இருதயபுரத்தில் வைத்து மே 20ம் திகதி கைது செய்யப்பட்டவர். இவர்களைப் பற்றி எந்தத் தகவலுமில்லை.

ஜூன் 16ம் திகதி துறைநீலாவணையில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட ராசநாயகம் சற்குணம், சாமித்தம்பி நடராஜா மற்றும் களுவாஞ்சிக்குடியில் ஏப்ரல் 28ம் திகதி விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட சண்முகம் விஜயகுமார் ஆகியோர் பற்றியும் எதுவிதத் தகவலும் இல்லை.

கொழும்பு மட்டக்குளியில் ஜூன் 26ம் திகதி கைது செய்யப்பட்ட கிருஷ்ணமூர்த்தி குருபரன் பற்றிய தகவலும் இல்லை.

இதைவிட பலர் அனாவசியமாக கைது செய்யப்பட்டும் விடுதலை செய்யப் படாமலும் உள்ளனர்.

ஜூலை மாதம் 5ம் திகதி 2.00மணிக்கு களுபோவில, போதிவத்தையில் வைத்து கைது செய்யப்பட்ட எஸ். திரேசா(45), தமிழ்ச்செல்வி (18) ஆகிய இருவரும் அப்பகுதிவாசிகளால் புலிகள் எனப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு கிறகறிஸ் வீதியிலுள்ள குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டனர். இறுதியாக சரிநிகருக்குக் கிடைத்த தகவல்களின்படி இவர்களில் எஸ்.திரேஸா தற்போது கொம்பனித்தெரு பொலிஸிலும், தமிழ்ச் செல்வி கறுவாக்காடு பொலிஸிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இறுதியாக இவர்களிடம் பதினெட்டாயிரம் ரூபா அளவில் பணம் இருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

இதைவிட தோமஸ் கென்னடி (30) எனும் ஆமர்வீதி தொடர்மாடியைச் சேர்ந்த இளைஞர் ஜூலை 10ம் திகதி கொழும்பு நூதனசாலைக்கருகில் இரவு 8.30க்கு பொலிஸாரால் விசாரிக்கப்பட்டிருக்கிறார். இவரிடம் அடையாள அட்டையைக் கேட்டபோது அவர் கொடுத்திருக்கிறார். அதை தூர எறிந்த பொலிஸார் அதை எடுத்து வரக்கூறியிருக்கின்றனர். பிறகு பெயர், ஊர் என்பனவற்றைக் கேட்டு அடித்திருக்கிறார்கள். இவ்விளைஞரோ தான் கொழும்புவாசி தனக்கு யாழ்ப்பாணம் தெரியாது என்று சிங்களத்தில் பரிதாபமாகக் க;றிய போதும் ''நீ யாழ்ப்பாணமா என்பது தேவையில்லை. நீ தமிழன் தானே'' எனக் கூறி அடித்து இழுத்துச் சென்றனர் கறுவாக்காடு பொலிஸார்.

அன்றிரவு முழுவதும் வயிற்றிலும், தொடையிலும், முதுகிலும் பொல்லுகளாலும் காலாலும் அடித்து உதைத்திருக்கின்றனர். இவர் 8.30க்கு கைது செய்யப்பட்ட போதும் பொலிஸ் பதிவில் 10.30க்கு கைது செய்ததாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார் அவரது உறவினர். இது அவர்கள் சந்தேகப்பட்டதற்கான காரணமாக கூற உதவும் என்பதற்காகவே 10.30 எனக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. இவர் 11ம் திகதியே விடுதலை செய்யப்பட்ட போதும் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் சில நாட்கள் படுக்கையிலேயே கிடந்துள்ளார்.

கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்னால் இருக்கிற பூந்தோட்ட வீதியில் அண்மைக்காலமாகத் தினசரி பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதாகத் தகவல் கிடைத்திருந்தது. யூலை 14ம் திகதி மாலை 4.00மணியளவில் 61-7596எனும் இலக்கமிட்ட வெள்ளை வேன் ஒன்றில் வந்தவர்கள் தமிழ் இளைஞர்களை கைது செய்து கொண்டு போயினர். வேனுக்குள் 12க்கும் மேற்பட்டோர் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர் என்பது தெரியாது. இதே தெருவில் அதே தினத்தன்று இளம் தமிழ்ப் பெண்கள் இருவரை அவர்கள் பொட்டு வைத்திருந்த காரணத்தால் சோதனை செய்த ஆண் பொலிஸார் ஒரு பெண்ணின் மேற் சட்டையை இழுத்து உள்ளே பார்க்குமளவிற்கு நடந்து கொண்டார். கொழும்பு பொலிஸார் தமிழர்கள் மீது சந்தேகம், சோதனை, விசாரணை, கைது, புலனாய்வு என்ற பெயரில் நடத்தும் காடைத்தனங்களை இன்னும் அரசு கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

இதற்கிடையில் ஏற்கெனவே கடததப்பட்ட கொழும்பு றோயல் கல்லூரி மாணவனான அஜந்தன் தப்பி வந்து / தப்ப விடப்பட்டு வந்து அங்கு தான் பட்டினி போடப்பட்டதாகவும் மொட்டை அடிக்கப்பட்டதாகவும் அங்கு ஏற்கெனவே இருவர் மொட்டையடிக்கப்பட்டுஅடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறுகிறார். இதை வைத்து பார்க்கும் போது இற்கனவே ஏரிகளில் மிதந்த சடலங்களை நினைவுக்குக் கொண்டு வருகிறது. அச் சடலங்கள் தலைமுடிஒட்ட வெட்டப்பட்ட நிலையிலேயே இருந்தன. அடையாளம் தெரியாமல் போவதற்கு மொட்டையடிக்கப்பட்ட நிலையும் ஒரு காரணமாக இருக்கிறது.

இதைவிட சடலங்களை பரிசோதனை செய்த மருத்துவர்களும் கொல்லப்பட்டோர் பட்டினி போடப்பட்டிருக்கிறார் என்பதை உறுதி செய்திருந்தனர்.

என்.எஸ்.

## திருமலை:
## கிராமோதய சபைத் தலைவருக்கும் தண்டனை

திருக்கோணமலையிலும் பாதுகாப்புப் படையினர் மனித கேடயங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இறக்கக் கண்டி என்னுமிடத்தில் கண்ணி வெடி புதைக்கும் போது புலிகள் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அப்பாதையில் பஸ் பயணிகள் இறக்கப்பட்டு குறிப்பிட்ட இடங்களில் நடக்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

எங்காவது வெடிகள் புதைக்கப்பட்டுள்ளனவா என்ற பரிசோதனைக்குப் பயன்படுத்தப்பட்டோரில் முஸ்லிம்களும் அடங்குவர். தலைவலியை நொந்தபடி கடவுளை வேண்டிக் கொண்டு நடப்பதைத்தவிர இவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை:

குச்சவெளிக் கிராமத்தில் தற்போது முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே குடியிருந்து வருகின்றன. மாலையானதும் இவர்கள் படுக்கைகளைச் சுருட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி இராணுவம் ஒதுக்கி வைத்துள்ள சில இடங்களிலே நித்திரை செய்ய நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். விடிந்ததும் வீட்டுக்குத் திரும்பி விடலாம். தினசரி குழந்தை குட்டிகளுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டதும் பொது இடங்களில் நித்திரை செய்வதும் யாருடைய பாதுகாப்புக்கு என்று விளங்கவில்லை.

மூதூர்ப் பிரதேசத்தில் கூப்பிட்டவுடன் போய் நிற்கவில்லையென்று இராணுவ அதிகாரியால் கிராமோதய சபைத் தலைவரொருவர் முழங்காலில் நிற்பாட்டப்பட்டிருக்கிறார். தனக்கு நேர்ந்த அவலத்தை தட்டச்சுக் கடித மூலம் அந்தக் கிராமோதய சபைத் தலைவர் மேலிடங்களுக்கு அறிவித்தாராம். பலன்: அவருக்கு இரண்டு தட்டு. தட்டச்சு எங்கே செய்தாய் என்ற அதட்டல் வேறு. இப்போது தட்டச்சு செய்ய இயந்திரம் கொடுத்த பாடசாலை அதிபர் ஒருவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதே பகுதியில் கிராமசேவகர் ஒருவரை வீட்டிலிருந்து இரவு நேரத்தில் வெளியே அழைத்துச் செல்லப்பட்டுக் கொலை செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. துப்பாக்கி வெடிக்காமல் விடவே அவர் தப்பி ஓடி விட்டார். துப்பாக்கி வெடித்திருந்தால் கொலை புலிகளின் தலையிலேயே போடப்பட்டிருக்கும். இப்போது அந்தக் கிராம சேவகர் இடமாற்றத்துக்கு ஓடித்திரிகிறாராம். ஆட்களை வெட்டிக் கொல்லும் செயலும் இங்கு தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

திருக்கோணமலையில் டிராக்டர்களை இப்போது மருந்துக்கும் காண முடிவதில்லை. பல டிராக்டர்கள் பாதுகாப்புப் படையின் தேவைக்கென எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. தேவை முடிந்ததும் திருப்பித் தருவோம் என்று கூறித்தான் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. திரும்பி வந்தால் த்தானே மெய் என்கிறார்கள் பறி கொடுத்தோர்.

திடீர்ச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. முக்கிய சந்திகளில் திடுதிப்பென்று வந்திறங்கும் பொலிசார் பயணிகளைக் கவனமாகவே பரிசோதிக்கிறார்கள்.

-விவேகி-


## சமகால ஈழத்துக் கவிதைகள் பற்றிய ஒரு கருத்தாடல்

**தலைமை**
மு. பொன்னம்பலம்

**தொடக்கவுரை**
பேரா. கா. சிவத்தம்பி

**ஈழத்துக் கவிதையின் மொழி**
எம். ஏ. நுஃமான்

**ஈழத்துக் கவிதையின் மரபும் தொடர்ச்சியும்**
சு. வில்வரத்தினம்

**ஈழத்துக் கவிதையின் அரசியலும் அழகியலும்**
சேரன்

**இடம்**
குருகெதர,
294. காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.
(இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி கிளைக்கு அருகில்)

**காலம்**
ஒகஸ்ட் 06 ஞாயிறு
காலை 9.00 - மாலை 6.00வரை
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

**ஏற்பாடு**
விபவி கலாசாரமையம்
59, பழைய கொட்டாவ வீதி
மீரி ஹான
நுகேகொட
தொலைபேசி: 811927